
# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

[redacted]

மார்ச்-ஏப்ரல் 2010 விலை ரூ.20/-






மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திருச்சி அண்ணா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற விழாவில் கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தை தொடங்கி வைத்தார். உடன் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் உள்ளனர், (3.3.2010)

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2041

மாசி - பங்குனி - சித்திரை

மார்ச் - ஏப்ரல் 2010

மலர் : 41 இதழ் : 9 & 10



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

திரு. **சி.காமராஜ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**க. குமாரவேலு**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**ச. ஜெயலலிதா**
**இரா. சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**த. கலைச்செல்வன்**
**வ.பாலசுப்பிரமணியன்**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)



சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
110, அண்ணாசாலை, சென்னை-600 002.

தொலைபேசி : 28520407/28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**
**நுண்பொருள் காண்ப தறிவு.**

நாம் சொல்ல வேண்டியவைகளை எளிய முறையில் கேட்போரின் இதயத்தில் பதியுமாறு சொல்லிப் பிறர் - சொல்லும் நுட்பமான கருத்துகளையும் ஆராய்ந்து தெளிவதே அறிவுடைமையாகும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## இந்த இதழில்...


மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தலைமையில் தமிழகம் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து நாட்டுக்கே முன்மாதிரி மாநிலமாகத் திகழ்கிறது. 2

தமிழக நலம் நாடிய பெருமக்கள் உலாவிய திருவிடத்தில் புதிய சட்டப்பேரவை வளாகம் 6

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கடமை உணர்வையும், அர்ப்பணிப்பையும் பாராட்டுகிறேன் 13

ஜெர்மன் நிறுவனம் வடிவமைத்துள்ள சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத பசுமைக் கட்டடம் 21

நிதிநிலை அறிக்கை 2010-2011 25

ஏழை, எளிய மக்கள் பயனடைந்திட குடிசை வீடுகளை அகற்றி காங்கிரீட் வீடுகளை உருவாக்கிடும் ஒப்பற்ற திட்டம் 65

சுதந்திரப் போராட்டத் தியாகிகளை நினைவுகூர்ந்து பெருமைப்படுத்துவதில் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்கிறோம் 71

2010-2011ஆம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்டம் இன்னொரு படிக்கல்லாகும் 75



**அட்டைப்பட விளக்கம்**

முதலாம் அட்டை :

தமிழ்நாடு அரசு புதிய சட்டப்பேரவை தலைமைச் செயலக வளாகத் திறப்பு விழா (13-3-2010)

நான்காம் அட்டை :

தமிழ்நாடு அரசின் 2010 – 2011ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையை சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்படும் முன்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களிடம், மாண்புமிகு நிதியமைச்சர் க. அன்பழகன் அவர்கள் சந்தித்தார்.




# மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தலைமையில் தமிழகம் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து நாட்டுக்கே முன் மாதிரி மாநிலமாகத் திகழ்கிறது!

மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் **மன்மோகன் சிங்** அவர்கள்
13.3.2010 அன்று, புதிய சட்டப்பேரவை – தலைமைச் செயலக வளாகத்தைத்
திறந்துவைத்து ஆற்றிய உரை.

**த**மிழக மக்களிடையே இந்தத் தருணத்தில் மீண்டும் இருப்பதில் நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். இன்று திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த பிரமாண்டமான சட்டமன்றம் மற்றும் செயலக வளாகத்தை உருவாக்கியதற்காக முதல்வர் கலைஞர் அவர்களையும் மாநில அரசையும் பாராட்டுகிறேன்.

இந்தத் தருணத்தில் தமிழ்நாட்டின் சட்டமன்றத்திற்கும், தலைமைச் செயலகத்திற்கும் தனிச்சிறப்பை ஈட்டித்தந்துள்ள மாபெரும் தலைவர்களின் நினைவைப் போற்றுகிறேன். சுமார் நூறு ஆண்டுகால வரலாற்றில் முன்பு சட்டமன்றம் இருந்த கட்டடம் தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் நாட்டின் மாபெரும் மைந்தர்களை அளித்துள்ளது.

குறிப்பாக சுதந்திர இந்தியாவின் தேசிய இயக்கத் திலும், தமிழக மக்களுக்கும் மாபெரும் தலைவர்களாக விளங்கிய ராஜாஜி, காமராஜர், அண்ணா ஆகியோரின் நினைவைப் போற்றி வணங்குகிறேன். அவர்களுடைய தலைமையாலும், உதாரணத்தாலும் உணர்வுபெற்ற மாபெரும் அரசியல்




தலைவர்களான சி.சுப்பிரமணியம், ஆர்.வெங்கட்ராமன், எம்.ஜி.ராமச்சந்திரன் ஆகியோர் மிகச்சிறப்பாக நாட்டின் வளர்ச்சிக்கு தங்களின் பங்களிப்பை செலுத்தியுள்ளனர்.

அவர்கள் ஒவ்வொருவரும் தமிழகத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பைச் செலுத்தியுள்ளனர். சி.சுப்பிரமணியம் நாட்டைப் பட்டினியிலிருந்து விடுவிக்கவும், வெளிநாடுகளைச் சார்ந்துள்ள நிலைமையை மாற்றவும் பசுமைப் புரட்சிக்குத் தலைமை தாங்கினார். ஆர்.வெங்கட்ராமன் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியின் சிற்பியாகத் திகழ்ந்தார். எம்.ஜி.ராமச்சந்திரன் சத்துணவுத் திட்டத்தின் மூலம் உதாரணம் படைத்தார். அத்திட்டத்தை நமது ஆட்சி மிகப்பெருமளவு முன்னேற்றியுள்ளது.

இன்று நான் முதல்வர் கலைஞர் அவர்களுடன் இவ்விழாவில் பங்கேற்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த மாபெரும் வளாகத்தை தம் எண்ணத்தில் உருவாக்கி வடிவமைத்த பெருமை, பதினோராவது முறையாகச் சட்டமன்ற உறுப்பினராகவும் ஐந்தாவது முறை முதல்வராகவும் பதவி வகிக்கும், தமிழக அரசியலின் இந்த மாபெரும் மனிதரைச் சாரும் என்று குறிப்படுவது சாலப்பொருத்தமாக இருக்கும்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கலைஞர் அவர்களின் ஞானம், அறிவு, அனுபவம் ஆகியவற்றால் மிகப் பெருமளவு பயனடைந்துள்ளது. நான் பல முறை அவரது அறிவுரைக்காக அவரை நாடியுள்ளேன். அரை நூற்றாண்டுக்கு மேல் பொது வாழ்வில் உள்ள அவரது அறிவாலும் அனுபவத்தாலும் நாட்டின் விவகாரங்களை சமாளிப்பதில் நாம் பெரிதும் உணர்வு பெறுகிறோம்.

கலைஞர் அவர்களது தலைமையின் கீழ் தமிழ்நாடு முன்னேறி பீடுநடைபோட்டு நாட்டின் முன் மாதிரி மாநிலமாகத் திகழ்கிறது.

ஊரக வளர்ச்சியிலும், விவசாயத் துறை முன்னேற்றத்திலும் தமிழகம் புதிய சாதனைகளைப் படைத்து வருகிறது. இந்தியாவின் துடிப்பான மோட்டார் தொழிலுக்கு மையமாக தமிழ்நாடு திகழ்கிறது. இம்மாநிலத்திற்கு மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் மிகத்திறமையான மாவட்ட மற்றும் நகராட்சி நிருவாக பாரம்பரியம் உண்டு. இன்று பலத்துறைகளில் தமிழ்நாடு நாட்டின் இதரப் பகுதிகளுக்கு முன்மாதிரியாக திகழ்கிறது.

இன்று நாம் புதிய சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலக கட்டடத்தைத் திறந்து வைப்பதை கண்ணுற இங்கு கூடியிருப்பதால் நான் இதைக் கூறுகிறேன். நமது நாட்டின் மிகப்பழமையான சட்டமன்றங்களில் ஒன்றாக தமிழ்நாடு சட்டமன்றம் திகழ்கிறது. 1936–ஆம் ஆண்டின் இந்திய அரசு சட்டத்தின் கீழ் 1937–ஆம் ஆண்டு இது உருவானது. இது மிகப்பெரும் திறமைமிக்க நாடாளுமன்றவாதிகளை உருவாக்கியுள்ளது. நமது ஜனநாயகத்திற்கும் நாட்டிற்கும் வலிமையையும் வளத்தையும் சேர்த்த மாபெரும் தலைவர்களின் இருப்பிடமாகத் திகழ்ந்துள்ளது.

**தமிழ்நாட்டு இளைஞர்கள்**

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தவர்கள் தமிழ்நாட்டின் சட்டமன்ற உறுப்பினர்களும், நிருவாகிகளும் ஆவர், தமிழ்நாடு நமது முன்னணி மாநிலங்களில் ஒன்றாகவும், வேளாண் துறையிலும், தொழில்துறையிலும், கல்வி ரீதியிலும் மிகவும் வளர்ச்சி அடைந்த மாநிலங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது என்றால், அது மிக உயர்ந்த தரமான அரசியல் தலைமையாலும், நிருவாக இயந்திரத்தினாலும் ஆகும்.

முன்னேற்றத்தை நோக்கி பீடு நடைபோட தமிழ்நாட்டை இட்டுச்செல்ல கடும் பணி ஆற்றியுள்ள பஞ்சாயத்துராஜ் அமைப்புகள், நகராட்சிகள், மாநில சட்டமன்றம், நிருவாக செயல் உறுப்பினர்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன். ஆனால் நாம் நமது பெருமைகளால் வாளாவிருந்துவிட முடியாது; இருக்கவும் கூடாது.

தமிழ்நாடு மாற்றத்தின் விளிம்பில் உள்ளது என்று இந்தியாவும், நானும் நம்புகிறோம். தர ரீதியிலான மாற்றத்திற்கான தருணம் வந்து விட்டது. ஒரு தேசமாக நாம் வேறு மாதிரியாக செயல்பட பாடுபட வேண்டும்.

வேறு மாதிரியாக செயல்பட தமிழ்நாட்டு இளைஞர்கள் முன்னேற்றத்திற்கு வழி காட்டுவார்கள் என்று நான் நம்புகிறேன். நமக்கு மேலும் அதிகமான கல்வி அறிவு பெற்றவர்கள், திறமையான பொருளாதாரம், மேலும் சமத்துவமான சமுதாயம், அரசியல் ஆகியவை எல்லாம் தேவைப்படுகிறது. மேலும் நமக்கு படைப்பாற்றல் உள்ளவர்கள், மாற்றுக் கண்டு பிடிப்புகளைச் செய்பவர்கள், தடைகளைத் தாண்டுவது மட்டுமின்றி அவற்றை எவ்வாறு தவிர்ப்பது என்று அறிந்தவர்கள் தேவைப்படுகின்றனர்.

முன்னேற புதிய வழிகளையும் பழைய செயல்பாடுகளை புதிய முறையில் செயல்படுத்தவுமான தேவை உள்ளது. நம் மீது புதிய கண்டுபிடிப்புகளுக்கான யுகம் உள்ளது. நாம் புதிய கண்டுபிடிப்புகளைக் காணா விட்டால், அதுவும் விரைவில் காணாவிட்டால் நாம் வரலாற்றில் பின்னுக்குத்தள்ளபடுவோம்.

நீங்கள் வளமான திராவிட இயக்கத்தின், சமூக நீதி மற்றும் சமத்துவம் ஆகியவற்றிற்கான அதன் வேட்கை ஆகியவற்றின் பெருமைமிக்க வாரிசுகளாவீர். இந்த இலட்சியங்களை துடிப்புடன் செயல்படுத்தாமல் எந்த சமுதாயமும் முன்னேற முடியாது. தமிழ்நாடு சட்டமன்றம் தமிழக அரசு ஆகியவற்றின் செயல் பாடுகளை இந்த இலட்சியங்கள் தொடர்ந்து வழிநடத்தும் என்று நான் நம்புகிறேன்.

**புனிதமான இடம்!**

சட்டமன்றங்கள் புனிதமான இடங்களாகும். நமக்கு அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமையை வழங்கியுள்ள நமது சகோதர, சகோதரிகளின் மேம்பாட்டுக்காக நாம் பாடுபட வேண்டிய இடங்களாகும். அவை நமது அரசியல் சட்டத்தின் இலட்சியங்களை உயர்த்திப் பிடித்து அவற்றைச் செயல்படுத்த வேண்டிய இடங்களாகும்.

சட்டமன்ற உறுப்பினர்கள், சமகால சட்டங்களை விளக்கி புதிய சட்டங்களை இயற்றுகிறார்கள். அவர்கள் தங்களது பொறுப்பைத் தீர்மானகரமாக நிறைவேற்ற அவர்கள் விழிப்புடனும், விவரங்களை நன்கு அறிந்தும் இருப்பதுடன், இந்திய அரசியலமைப்பு அடிப்படை அக்கறைகளைப் பற்றியும் உணர்ந்திருக்க வேண்டும். அதிகாரம் முழுவதையும் புனிதமான சமூக நம்பிக்கையாகக் கருதி பொது நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும்.

அப்போதுதான் நமது சட்டமன்ற உறுப்பினர்கள் நமது மக்களுக்கு கவுரவமும், சுயமரியாதையும் கொண்ட வாழ்க்கையை வழங்கப் பாடுபட முடியும். சட்டமன்ற உறுப்பினர்கள் நமது பொது நிதிகளின் காவலர்களாகவும் உள்ளனர். அவர்கள் பொதுப் பணம் வீணாகப் பயன்படாமல் இருப்பதையும், நிதி ஆதாரத் திரட்டல் சேமிப்புகளுக்கான ஊக்கச் சலுகைகளை பாதிக்காமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும். அவர்கள் ஊழலையும், நிருவாகத்தில் திறமையின்மையையும் கூட்டாகக் கடுமையாக எதிர்க்க வேண்டும். இவையனைத்தும் மிக உயர்ந்த இலட்சியங்களாகும். ஆனால் இந்தப் புதிய சட்டமன்ற சூழ்நிலைகளில், சட்டமன்றத் திறமை மற்றும் கடப்பாடு, தகுதி ஆகியவற்றையும், சகிப்புத்தன்மை, மற்றவர்களை அனுசரித்தல், பொது மக்களின் நல்வாழ்வு பற்றி அக்கறை ஆகியவற்றுடன் விவாதங்கள் நடைபெறுவதையும் நாம் காணலாம் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இந்தப் புதிய வளாகத்தில் தமிழக மக்களின் குரல் அவர்களின் பிரதிநிதிகள் வாயிலாக கடந்த கால பெருமிதத்துடன் எதிரொலிக்கும். தமிழக சட்டப்பேரவை உறுப்பினர்களும், உயரதிகாரிகளும் பெரிதாக சிந்தித்து, செயலாற்றி இந்திய நாட்டுக்கே முன்னோடிப் பாதை வகுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.


இந்தப் புதிய சட்டப்பேரவை வளாகத்தில் புதிய இந்தியா, புதிய தமிழ்நாடு பேசுவதை பார்க்கப் போகிறோம். வருங்காலம் வளமாக அமைய வாழ்த்துகிறேன்.

★ ★ ★




# தமிழக நலம் நாடிய பெருமக்கள் உலாவிய திருவிடத்தில் புதிய சட்டப்பேரவை வளாகம்

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் நடைபெற்ற புதிய சட்டப்பேரவை - தலைமைச் செயலக வளாகத் திறப்பு விழாவிற்கு தலைமை வகித்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை. (13.3.2010)



நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் மகளிர்க்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்யும் மசோதாவை மாநிலங்களவையில் நிறைவேற்றிய வெற்றிப் பெருமிதத்துடன் தமிழ்நாடு சட்டப்பேரவை தலைமைச் செயலக வளாகத்தைத் திறந்து வைத்திட இந்த மாபெரும் நிகழ்ச்சிக்கு வருகைபுரிந்து தமிழகத்திற்குப் பெருமை சேர்த்திருக்கும் பிரதமர் டாக்டர். மன்மோகன்சிங் அவர்களே !

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் வழி காட்டும் தலைவர் திருமதி. சோனியா காந்தி அம்மையார் அவர்களே!

மேதகு தமிழக ஆளுநர்
திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களே !

மாண்புமிகு ஆந்திர மாநில முதலமைச்சர்
திரு. கே. ரோசையா அவர்களே!

மாண்புமிகு கருநாடக மாநில முதலமைச்சர்
திரு. பி.எஸ். எடியூரப்பா அவர்களே!

மாண்புமிகு புதுவை மாநில முதலமைச்சர்
திரு. வி.வைத்தியலிங்கம் அவர்களே!

மேதகு புதுவை மாநில துணை நிலை ஆளுநர்
திரு. இக்பால்சிங் அவர்களே!

மத்திய அமைச்சர் பெருமக்களே!

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. ஆவுடையப்பன் அவர்களே! தமிழக அமைச்சர்களே,

சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதியரசர் கோகலே அவர்களே மற்றும் மாண்பமை நீதியரசர்களே! நாடாளுமன்ற உறுப்பினர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., உள்ளிட்ட அரசு



அதிகாரிகளே, அலுவலர்களே! எங்களது அழைப்பினையேற்று வருகை தந்திருக்கும் அனைத்து அரசியல் கட்சிகளையும் சார்ந்த அன்பிற்குரிய தலைவர்களே! பல்வேறு துறைகளின் அறிஞர் பெருமக்களே! கலையுலக நண்பர்களே! சான்றோர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே!

**வரலாற்றுச் சாதனை**

மகளிர் இட ஒதுக்கீட்டுக்கான கோரிக்கை பல ஆண்டுக்காலமாகவே கனவாக இருந்து அது நிறைவேறுமா என்று பேசப்பட்டு – நிறைவேற்ற விடுவோமா என்று பயமுறுத்தப்பட்டு – அனைத்தையும் மீறி அதற்கான மசோதாவை மாநிலங்கள் அவையிலே நிறைவேற்றி விட்டு முதல் முறையாக நமது மாநிலத்திற்குத்தான் – இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் அவர்களும் – தியாகத் திருவிளக்கு திருமதி. சோனியாகாந்தி அவர்களும் வந்திருக்கிறார்கள்.

வரலாற்றுச் சாதனையை நிறைவேற்றி விட்டு வந்திருக்கும் அவர்களை இதற்காக முதன் முதலாக ஒரு மாநிலத்தின் சார்பில் வரவேற்கும் வாய்ப்பு எதிர்பாராமல் நமக்குத் தான் கிடைத்திருக்கிறது.

இதனை நினைத்து மகிழ்வதற்கு அடையாளமாக அனைவரும் ஒரு நிமிடம் தொடர்ந்து கைதட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். *(இதனைத் தொடர்ந்து விழாவில் பங்கேற்ற அனைவரும் பலத்த கரவொலி எழுப்பினர்).*

**பெரியாரின் தீர்மானம்**

1921ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 12ஆம் நாள் கன்னாட் கோமகன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட சென்னை மாகாண சட்டமன்றத்தில் முதன் முதலாக அமைந்த நீதிக் கட்சி அரசுதான், பெண்களுக்குத்தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை வழங்கியது!

மகளிர் மேம்பாட்டிற்காக 1929ஆம் ஆண்டிலேயே தந்தை பெரியார் அவர்கள் செங்கற்பட்டு நகரிலே மாநாடு நடத்தி பெண்களுக்கு சொத்திலே பங்கு கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி, அந்தத் தீர்மானத்தை 60 ஆண்டு காலத்திற்குப் பிறகு 1989ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையிலே சட்டம் ஆக்கியவர்கள் நாம் என்பதை பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் குடியரசுத் தலைவராக முதன் முதலாக ஒரு பெண்மணியைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று முடிவு செய்தது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி. அதனை வரவேற்று, அம்மையார் பிரதிபா அவர்களைத் தமிழகத்திற்கு முதன்முதலாக அழைத்து மகளிரைக் கொண்டு பிரமாண்டமான பேரணி நடத்தி அவரது வெற்றிக்கு வித்திட்டதும் இந்தத் தமிழ் மண்தான்.

14 வங்கிகளை நாட்டுடைமையாக்கு வதற்காக டெல்லியில் தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் குரலெழுப்பி – அதற்கு காங்கிரஸ் அமைச்சரவையிலேயே பெரும் எதிர்ப்பு தோன்றிய போதிலும் – அதைப் பொருட்படுத்தாமல் வங்கிகளை நாட்டுடை மையாக்க அறிவித்த அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களை அழைத்து மிகப் பெரியதோர் பாராட்டை வழங்கி – 14 பரிசுகளை வழங்கியதும் இந்த இடத்திலே தான்.

திருமதி சோனியா காந்தி அம்மையார் சென்னைக்கு தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்த போது – அவர்களை வரவேற்று – “இந்திராவின் மருமகளே வருக! இந்தியாவின் திருமகளே வெல்க!” என்று நான் கூறினேன். அப்போது முதல் இந்தியாவின் திருமகளாக அவர்கள் விளங்கி வருவதை இந்த நாடே நன்கறியும். அந்தத் தேர்தலிலும், அதற்குப் பிறகு நடைபெற்ற 2006ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும், 2009ஆம் ஆண்டு நாடாளு மன்றத் தேர்தலிலும் காங்கிரசும், திராவிட முன்னேற்றக் கழகமும் உடன்பாடு கொண்டு வெற்றி மேல் வெற்றி குவித்து வருவதோடு, நாட்டு மக்களுக்குத் தேவையான அனைத்துத் திட்டங்களையும் மத்திய அரசின் சார்பிலும் மாநில அரசின் சார்பிலும் நிறைவேற்றி வருகிறோம்.

இந்திரா காந்தி அம்மையார் 1980ஆம் ஆண்டு சென்னைக் கடற்கரை கூட்டத்திலே கூறியது போல – “உடன்பாடு கொண்ட நிலையிலும் – எதிர்க்கின்ற நிலையிலும் – இரண்டிலும் உறுதியோடு கருணாநிதி இருப்பார்” – என்பதை நிரூபிக்கும் வகையில் காங்கிரஸ் திராவிட முன்னேற்றக் கழக உறவு நீடித்து வருகின்றது.

இந்த உறவைத் துண்டிக்க வேண்டுமென்று எவ்வளவோ முயற்சிகள் – எத்தனையோ பயணங்கள். “மீடியா”க்கள் கனவு கண்டு கட்டி விடும் கற்பனைப் பிரச்சாரங்கள்.

ஆனால் எங்களிடையே உள்ள உறுதிப்பாடு – பகை மூட்டும் அந்த முயற்சிகளையெல்லாம் வெற்றிபெறச்செய்யவில்லை.தங்களின் அந்த நேச மனப்பான்மைக்கும் நெஞ்சுறுதிக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**அயர்வில்லாத உழைப்பு**

இந்தியாவின் மிகச் சிறந்த இந்தக் கட்டடம் உருவாகக் காரணமாக இருந்த நான்; மிக மிக சாமான்யமானவன் – சாதாரண ஒரு குடும்பத்திலே – ஒரு சிறிய கிராமத்திலே பிறந்தவன் – எனக்கென்று எந்தவிதமான குடும்பப் பெருமையும் இல்லை. நடுத்தரக் குடும்பத்தை விட குறைந்த வசதி படைத்த குடும்பம் தான் என்னுடையது. எந்தக் கல்லூரியிலும் சேர்ந்து நான் பட்டம் பெற்றவன் அல்ல. “நன்றாகப் படி” என்று அண்ணா என்னை வாழ்த்தினார். நல்லவர்களுக்கெல்லாம் “படிந்து” நடக்க கற்றுக் கொண்டேனே அல்லாமல் உயர் கல்விப் படிப்பைக் கற்றுத் தேர்ந்தவன் அல்ல.

எனக்குத் தெரிந்ததெல்லாம் உழைப்பு – உழைப்புதான். ஓய்வில்லாத உழைப்பு. அது கலைத்துறையானாலும் – அரசியல் துறையானாலும் – சமுதாயத் துறையானாலும் – இலக்கியத் துறையானாலும் – அனைத்திலுமே அயர்வில்லாத உழைப்பு!

எனக்கென்று எந்தவிதமான தனிப்பட்ட விருப்பமும் எப்போதும் இருந்தது இல்லை. ஏழையெளிய மக்களுக்கு உழைக்க வேண்டும், அவர்களின் அகத்திலும், முகத்திலும் மகிழ்ச்சியைக்காண வேண்டும், அதற்கு என்ன வழி என்றுதான் எந்த நேரத்திலும் நான் சிந்திக்கிறேன்.

எனக்கு இப்போது வயது 86. இந்த 86 வயதிலே கூட எனக்குச் சொந்தமாக அரண்மனை போல ஒரு வீடு கட்டிக் கொண்டு – அதிலே ஆடம்பரமாக வாழ வேண்டுமென்று நான் நினைத்ததில்லை.

நான் எதிர்க்கட்சித் தலைவனாக இருந்த போது – அரசின் சார்பில் எங்கள் சட்டமன்றக் கட்சிக்காக ஒதுக்கப்பட்டிருந்த இடம் – அதுவும் இதே இடம் தான் – இந்த இடத்திலிருந்து என்னையும், பேராசிரியர் உள்ளிட்ட சட்டப் பேரவை உறுப்பினர்களையும் கைது செய்து – எங்கள் கட்சியின் அலுவலகப் பொருள்களை வெளியே தூக்கியெறிந்து வேறிடம் செல்லுங்கள் என்று வெளியேற்றினார்கள். அதன் காரணமாக எழுந்ததுதான் எங்கள் கட்சிக்கு என்று ஒரு கட்டடம் – அண்ணா அறிவாலயம்.

**உயர் தனிக்கொள்கை**

அதன் பிறகு கூட – நள்ளிரவில் ஒரு நாள் என்னைக் கைது செய்து நையப்புடைத்து – அன்றைய சி.பி.சி.ஐ.டி., அலுவலகத்திற்குக் கொண்டுவந்து – தன்னந்தனியனாக விடிய விடிய காவலில் வைத்திருந்த இதே இடத்திலேதான் இன்று இந்தப் பிரமாண்டமான கட்டடம் உருவாகியுள்ளது.

நான் அனைவரிடமும் அன்பு செலுத்தவே விரும்புகிறேன். எதிர்க்கட்சிக்காரர்களிடம் கூட நான் அன்போடும் பாசத்தோடும் நடந்து கொள்ள விரும்புகிறேன் என்பதை சட்டமன்றத்திலே உள்ள எதிர்க்கட்சி நண்பர்களே கூட நன்கறிவார்கள். மற்றவர்களைப் பற்றி விமர்சனம் செய்யும்போது – ஒரு காலத்தில் மீண்டும் அவர்களைச் சந்திக்க நேரிடும்போது; அப்போது அவர்கள் முகம் சுளிக்கக் கூடிய விதத்திலே ஆகக்கூடாது என்று எண்ணித்தான் யாரையும் விமர்சிக்க வேண்டுமென்று நான் பல முறை கூறியிருக்கிறேன்.

தமிழகத்திலே உள்ள அடித்தட்டு மக்களைக் கைதூக்கி விட முயற்சிகள் மேற்கொள்வதோடு, அதற்கான சட்டங்களையும் திட்டங்களையும் வகுப்பதோடு – நமது உயிராம் தமிழ் மொழியை உச்சியிலே வைத்துக் கொண்டாடுகின்ற உயர் தனிக் கொள்கையை என்றும் நாங்கள் மறந்தோம் இல்லை.

**1936–40**ஆம் ஆண்டுகளின்போது – பள்ளி மாணவனாக நான் இருந்த நிலையில் – அந்த இளமைப் பருவத்தில் திருவாரூரில் உள்ள சுவர்களில் "நடமாடும் கோயில் திருப்பணி" என்று எழுதப்பட்ட விளம்பரங்களை நான் பார்த்து – "இது என்ன புதிய கோயில்? இருக்கின்ற கோயில்கள் எல்லாம் போதாமல் நடமாடும் கோயில் வேறா?" என்று எனக்கு நானே கேட்டுக் கொள்வேன்.

அதனை அந்த ஆரூரில் ஞானியார் என்று அழைக்கப்பட்ட பெரியவரிடம் ஒரு நாள் கேட்டும் விட்டேன்.

அதற்கு அவர் தந்த விளக்கம் – கோயில் திருப்பணி என்பது பழுதடைந்த கோயில்களை பராமரிக்கும் பணி – அது போல மனித உடலிலே உள்ள பழுதுகளை அகற்றி புதுப்பிக்கும் மருத்துவத்துறைப் பணி – அதுவே நடமாடும் கோயில் திருப்பணி என்பதாகும் என்று ஆன்மீக முறையில் அறிவியல் விளக்கமளித்தார்.

அது என் மனதிலே பதிந்து தான் ஏழை எளியோருக்கு கண்ணொளி வழங்கும் திட்டம் தொடங்கி, தற்பொழுது **51** நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் – **108** அவசர சிகிச்சை ஊர்தி திட்டம் – இளஞ்சிறார்க்கான இருதய அறுவை சிகிச்சைத் திட்டம் போன்றவை உருவாயின.

அதன் தொடர்ச்சியாகத் தான் ஊனமுற்றவர்களைப் பற்றி ஐ.நா. மன்றத்தில் விவாதிக்கப்பட்டு 2007ஆம் ஆண்டு இந்தியாவும் ஏழாவது நாடாக கையெழுத்திட்டு நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்களையெல்லாம் "மாற்றுத் திறனாளி" என்று அழைக்கும் வகையிலும், அவர்களுக்கு உரிய முறையில் உதவிடும் வகையிலும் முடிவெடுக்கப்படும் என்று தமிழக அரசு இப்போது அறிவித்துள்ள திட்டத்திற்கு மத்திய அரசு தேவையான உதவிகளையெல்லாம் செய்திட வேண்டுமென்றும் இந்தத் திட்டத்தை மத்திய அரசும் மேற்கொண்டு அமல்படுத்திட வேண்டுமென்றும் இந்த நேரத்தில் நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

**மக்கள் அளித்த அருமையான வாய்ப்பு**

அண்ணாவைத் தொடர்ந்து, அவருக்குப் பிறகு 1969இல் தமிழக முதலமைச்சராக முதன்முதலாக நான் பொறுப்பேற்றது முதல் தமிழகத்தின் அரசியல், சமூக பொருளாதார முன்னேற்றங்களை முன்வைத்து நிறைவேற்றிய சமூகச் சீர்திருத்தத் திட்டங்கள், கல்வி வளர்ச்சிப் பணிகள், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளித்திடும் பல்வேறு திட்டங்கள், ஏழை எளிய நலிந்த பிரிவினர் மேம்பாட்டிற்கு தனிக் கவனம் செலுத்திட வேண்டி உருவாக்கிய புதிய புதிய அமைச்சகங்கள், துறைகள்: அவற்றின் மூலமாகத் தமிழகம் முழுவதிலும் அமைத்த பாசனத் திட்டங்கள், மின் திட்டங்கள், சாலை மேம்பாட்டுப் பணிகள், எண்ணற்ற பாலங்கள், வீட்டு வசதித் திட்டங்கள் போன்றவை தமிழக மக்களாலும், தமிழகத்திற்கு அப்பால் மற்ற மாநிலங்களாலும், ஏன், இந்தியப் பேரரசாலும் பலமுறை பாராட்டுகளை குவித்துள்ள நிலையில், தமிழகத்தின் பழம்பெருமையை நினைவுறுத்தும் வகையில் கட்டடக் கலை மாண்பைப் புலப்படுத்தும் வகையில் எழுப்பப்பட்டுள்ள பல நினைவுச் சின்னங்களையும், பெருமக்களையும் இந்த வேளையில் நான் நினைவு கூர்கிறேன்.

சென்னை மாகாண நலம் – தமிழக நலம் நாடிய பெருமக்கள் பலர் உலாவிய திருவிடத்தில்தான் அவர்களின் நினைவுகளைச் சுமந்தபடி இந்தப் புதிய வளாகம் செம்மாந்து நிற்கிறது!

இதனை உருவாக்கும் அருமையான வாய்ப்பினை நல்கிய எனதருமைத் தமிழக மக்களுக்கும்;

என் நெஞ்சில் பகுத்தறிவுச் சிந்தனைகளையும், தமிழ் மொழி, இனமான உணர்வுகளையும் விதைத்து, வளர்த்து, ஆளாக்கி, வழிகாட்டிச் சென்ற மேதைகள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர்க்கும்;

நான் களத்தில் நின்று பாடுபட்ட காலத்தில், என் சிந்தனைகளைக் கூர்மைப்படுத்திட, செயல் திறனில் வேகத்தையும், விவேகத்தையும் கையாண்டிட எனக்குத் துணைபுரிந்த பெருந்தலைவர் காமராசர், மூதறிஞர் இராஜாஜி, பாபு ஜெகஜீவன்ராம், ஜெயப்பிரகாஷ் நாராயணன், காயிதே மில்லத், ப. ஜீவானந்தம், முத்துராமலிங்கத் தேவர் போன்ற பெருமக்களுக்கும்;

என்னோடு இணைந்து ஒட்டி உறவாடி உயிர்க் குயிராகப் பழகி பதவியில் இருந்தபோதும், இல்லாமல் பணிசெய்த காலத்தும் என்

நெஞ்சுக்கும், தோளுக்கும் வலிமை சேர்த்த என் உயிரனைய கண்மணிகளாம் உடன் பிறப்புகளுக்கும், ஏனையோர்க்கும் இவ்விழாவில் எனது இதயங்கனிந்த நன்றியுணர்வினைக் காணிக்கையாக்கி மகிழ்கிறேன்!

**நன்றி மலர்கள்**

என்னுடைய கனவை நனவாக்கும் வண்ணம் பிரம்மாண்டமான வடிவு பெற்று, சென்னை மாநகரத்தில் மாபெரும் பூகோளக் குறியீடாக விளங்கும் இந்த வளாகக் கட்டுமானப் பணிகளில் உள்ளத்தாலும், உடலாலும், ஓய்வின்றி முழுமையாக ஈடுபட்ட பல்லாயிரம் தொழிலாள நண்பர்கள், கட்டுமான நிறுவனத்தினர், பொறியாளர்கள், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., பொதுப்பணித்துறைச் செயலாளர் திரு. எஸ். ராமசுந்தரம், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் எஸ்.கருணாகரன் உள்ளிட்ட பல்வேறு நிலை அரசு அதிகாரிகள் அனைவரையும் அகங்குளிரப் பாராட்டுகிறேன்!

எனது அன்பான அழைப்பினை ஏற்று, பல்வேறு பணிச்சுமைகளுக்கு இடையிலும் இங்கு வளாகத்தைத் திறந்து வைத்துள்ள நமது மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் அவர்களையும், வருகை தந்து விழாவைச் சிறப்பித்துள்ள திருமதி. சோனியா காந்தி அம்மையார் அவர்களையும், மேதகு தமிழக ஆளுநர் அவர்களையும் எனது மனமார்ந்த நன்றி மலர்களால் போற்றுகிறேன்!

அதேபோல, அண்டை மாநிலங்களுடன் நேசக்கரம் நீட்டுவதை என்றும் நெஞ்சார விரும்பும் என் எண்ணத்திற்கு வலிமை சேர்க்கும் வண்ணம் இவ்விழாவில் கலந்து கொண்டு பெருமை சேர்த்துள்ள மாண்புமிகு ஆந்திர மாநில முதலமைச்சர் அன்பிற்கினிய சகோதரர் திரு. ரோசையா அவர்களுக்கும், மாண்புமிகு கருநாடக மாநில முதலமைச்சர் திரு. பி. எஸ். எடியூரப்பா அவர்களுக்கும், மாண்புமிகு புதுவை மாநில முதலமைச்சர் திரு. வி.வைத்தியலிங்கம் அவர்களுக்கும், மேதகு புதுவை மாநில துணை நிலை ஆளுநர் இக்பால்சிங் அவர்களுக்கும் தமிழக அரசின் சார்பில் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்விழாவிற்கு வருகை புரிந்துள்ள மத்திய அமைச்சர்கள், உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி, நீதியரசர்கள் ஆகிய அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவுறுத்திய வழியில் இனிய ஜனநாயக மாண்புகளைத் தமிழகத்தில் கட்டிக் காத்திட விரும்பும் எனது உணர்வுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இவ்விழாவிற்கு வருகை புரிந்துள்ள தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு அரசியல் இயக்கத் தலைவர்கள், மத்திய, மாநில அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழறிஞர்கள், கலையுலக அன்பர்கள், பத்திரிகைத் துறை மற்றும் செய்தி ஊடக நண்பர்கள், பொதுமக்கள் அனைவர்க்கும் எனது நன்றியை மீண்டும் மீண்டும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

★ ★ ★



# மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கடமை உணர்வையும், அர்ப்பணிப்பையும் பாராட்டுகிறேன்!


ஐக்கிய முற்போக்கு கூட்டணித்தலைவர் திருமதி. **சோனியா காந்தி** அவர்கள்
13.3.2010 அன்று, புதிய சட்டப்பேரவை – தலைமைச் செயலக வளாகத் திறப்பு விழாவில் ஆற்றிய உரை

**த**மிழக சட்டப்பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகத்தை மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் அவர்கள் திறந்து வைக்கும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாபெரும் நிகழ்ச்சியில் நானும் பங்கேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நான் உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இது ஒரு சாதாரண நிகழ்ச்சியல்ல. இது ஒரு மாபெரும் உன்னத விழாவாகும். 1861ஆம் ஆண்டு முதல் நீண்ட நெடிய வரலாறு கொண்ட தமிழக சட்டப்பேரவையின் புதிய அத்தியாயம் துவங்கும் நாள் இதுவாகும்.

இந்திய கவுன்சில் சட்டத்தின்கீழ் ஒரு சிறிய சட்டக்கவுன்சில் சட்டம் இயற்றும் அதிகாரங்களைக் கொண்டிருந்தது. அது அமைதியையும் நல்ல நிருவாகத்தையும் அளிக்க சட்டங்களை உருவாக்கி வந்தது.

அதன்பிறகு சட்டமன்ற அமைப்பு பல்வேறு சட்டங்களை கடந்து 1937இல் ஜூலையில் – 1935 இந்திய அரசு சட்டத்தின் கீழ் ஒரு நிலைக்கு வந்தது. நாடு விடுதலை அடைந்த பிறகும், அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொண்ட பிறகும், 1952 மார்ச் மாதம் அது மீண்டும் மாற்றியமைக்கப்பட்டது. ஒவ்வொரு சட்டமன்றமும் அதற்கென ஒரு பாரம்பரியத்தை




உருவாக்கியது, இதற்கு தமிழ்நாடு விதிவிலக்கல்ல.

**இந்திய வரலாற்றில் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி**

இந்திய சட்டமன்ற வரலாற்றில் முதலில் அமர்ந்த பெண் சட்டமன்ற உறுப்பினரான டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி 1927ஆம் ஆண்டு பதவியேற்றார். நியமன உறுப்பினரான ராஜாஜி சென்னை மாகாணத்தின் முதலமைச்சரானார். ஆளும் கட்சி ஒரு இடைத்தேர்தலில் தோல்வி அடைந்த போது ராஜாஜி தனது அரசின் மீதுள்ள நம்பிக்கையை சோதிக்க நம்பிக்கைத் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

இந்த சட்டமன்றத்தில் காமராஜர், சி. சுப்ரமணியம், அண்ணா, கலைஞர், எம்.ஜி. ராமச்சந்திரன் போன்ற தலைவர்களும் இருந்துள்ளனர். விவாதங்களில் ஒரு சில வார்த்தைகளே பேசி, ஒன்பது ஆண்டுகள் காமராஜர் முதலமைச்சராக இருந்த காலத்தில் 'பேச்சு வெள்ளி போன்றதென்றால், மவுனம் தங்கம் போன்றது' என்ற முதுமொழிக்கு உதாரணமாகத் திகழ்ந்தார்.

நான் உங்கள் முன்பு நமது மாபெரும் முன்னோடிகளுக்கு அஞ்சலி செலுத்தவும், கூட்டாட்சி அமைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும் நிற்கிறேன். நமது கூட்டாட்சி அமைப்பில் மத்திய அரசு, மாநில அரசு, உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றிற்கிடையே நெருக்கமான இணைப்பு இருக்க வேண்டியது அவசியமாகிறது. பெரும்பாலான விஷயங்கள், வளர்ச்சி அம்சங்கள், குறிப்பாக சமூக முன்னேற்றம் தொடர்பான விஷயங்கள் மாநில சட்டமன்றத்தின் அதிகாரத்தில் உள்ளன. தற்போது இந்த அதிகாரத்தில் பலவற்றை அடிமட்ட அளவில் மக்கள் பிரதிநிதிகளுக்கு மாற்றும் வகையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில சட்டமன்றம் மாற்ற வேண்டியுள்ளது. இவை நமது அரசியலமைப்பின் கூட்டாட்சித் தன்மையை அதிகரிக்கிறதே தவிர குறைக்கவில்லை. இவற்றை சரியான வகையில் எடுத்துக் கொண்டால் இந்த நடவடிக்கைகள் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை துரிதப்படுத்தும். இத்தகைய முன்னேற்றத்திலும், வளர்ச்சியிலும் தமிழ்நாடு மிகச்சிறப்பாகத் திகழ்ந்து, கல்வி, மக்கள் நல்வாழ்வு, ஊட்டச்சத்து, சமூகநலம், சமூகப் பாதுகாப்பு,

ஊரகவளர்ச்சி போன்ற பலதுறைகளில் முன்மாதிரியாக உள்ளது.

**பாராட்டுக்குரிய சாதனைகள்**

தமிழ்நாட்டின் அரசியல் தலைமை சமூக முன்னேற்றத்திற்கான கடமை உணர்வு, சமூக நீதியுடன் கூடிய தொழில் வளர்ச்சி ஆகியவற்றைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்துள்ளது. எனவே நான் தமிழ்நாட்டின் சாதனைகளை, குறிப்பாக கலைஞர் அவர்களின் தலைமையில் ஏற்பட்டுள்ள சாதனைகளை நான் பாராட்டுகிறேன்.


இந்திய மக்கள் நாடாளுமன்ற முறையில் பெரிதும் நம்பிக்கை வைத்துள்ளனர். இல்லாவிட்டால் தேர்தலுக்கு தேர்தல் வாக்குப்பதிவு அதிகமாவதையும், வாக்குச்சாவடிகளில் ஆண்களும், பெண்களும் திரளுவதையும், வெற்றியைக் கொண்டாடுவதிலும், மக்கள் தீர்ப்பை ஏற்றுக் கொண்டாலும் தோல்வியில் துவண்டு போவதையும் எப்படி விளக்க முடியும்? எனவே சட்டமன்றமானாலும், நாடாளுமன்ற மானாலும் நாம் சட்டங்களை விவாதிப்பதையும், விவாதங்கள் நடத்துவதையும், அமைச்சர்களைக் கேள்வி கேட்பதையும், நிருவாகத்தை சட்டமன்றத்துக்குப் பொறுப்பாக்குவதையும் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதே சமயத்தில் அரசியல் சட்டத்தின் படி நிருவாகத்துறையின் அதிகாரமும், சட்டமன்றத்தின் அதிகாரமும் இணைந்து நிலவ வேண்டும், எனவே இரண்டும் சட்டமன்றங்களில் சந்திக்கின்றன. நிருவாகத்துக்கும், சட்டமன்றத்திற்கும் இடையில் ஏற்படும் மோதலுக்கு அமைச்சரவையைக் கூட்டாக சட்டமன்றத்திற்குப் பொறுப்பாக்குவதன் மூலம் தீர்வு காணப்படுகிறது. இப்படி நிருவாகத்துறை அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளபோது மக்கள் பிரதிநிதிகளுக்குப் பொறுப்பாக்கும் முறை நம்மிடம் உள்ளது.

இப்போது இந்த பிரம்மாண்டமான கட்டடத்தை எடுத்துக் கொண்டால், இதை உருவாக்குவதில் பல வல்லுநர்கள், கட்டடக் கலை நிபுணர்கள், தொழிற் நுட்பத்துறையினர் என்று பலரும் கடுமையாக உழைத்திருந்தாலும், அதன் பின்னுள்ள உழைப்பு முதல்வர் கலைஞருடையதுதான். இது அவரது கடமை உணர்வு, திறமை, அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்கு நமக்கு உதாரணமாகத் திகழ்க்கிறது. அவர் இங்கு தினசரி வந்தும் சில தினங்களில் பலமுறை வந்தும் பணிகளைப் பார்வையிட்டார் என்று அறிகிறேன். இன்று அதிகாலை 5 மணிக்கு அவர் இங்கு வந்தார் என்று என்னிடம் தெரிவிக்கப்பட்டது. அவருடைய, கடமை உணர்வையும், அர்ப்பணிப்பையும், பாராட்டுகிறேன். இந்தக் கூட்டணி அரசு அமைந்ததிலிருந்து, அவர் பிரதமருக்கும், எனக்கும், கூட்டணிக்கும் ஆதரவுத் தூணாக விளங்கிவருகிறார். எப்போதெல்லாம் சிறு பிரச்சனைகள் ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் பிரதமர் முதலில் உடனடியாகத் தொடர்பு கொள்வதும், தொலைபேசியில் பேசுவதும் கலைஞருடன்தான்.

அவருடைய ஆதரவுக்கும், அறிவார்ந்த ஆலோசனைகளுக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன். கலைஞர் அவர்களே, இங்கு மாநிலங்களவையில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேறியது பற்றிக் குறிப்பிட்டதால் நான் இதைச் சொல்கிறேன். அவரது ஆதரவு இல்லாமல் இது சாத்தியமாகி இருக்காது. இந்தப் புதிய கட்டடத்தில் சட்டமன்றக் கூட்டம் நடைபெறவுள்ளது என்று அறிகிறேன். முன்பிருந்த, கோட்டையின் நினைவுகளும் இந்தப் புதிய கட்டடம் தமிழக சட்டமன்ற வரலாற்றில் புதிய தொடக்கத்தைப் படைக்கும் என்று நம்புகிறேன். தமிழக அரசுக்கும், தமிழக மக்களுக்கும் வளமான எதிர்காலம் அமைய வாழ்த்துகிறேன். ★

# காலப்பெட்டகமாய் திகழ்ந்திடும் உலகத் தரத்தில் உருவாகியுள்ள புதிய சட்டப்பேரவை வளாகத்தின் சிறப்புகள்!



சட்டப்பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 50 ஆண்டுகள் உறுப்பினராகப் பணியாற்றியதன் பொன்விழா 12.5.2007 அன்று கொண்டாடப்பட்டபோது, அவ்விழாவில் ஏற்புரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் "நாடே பார்த்து வியக்கும் வகையில் புதிய சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலக வளாகம் சென்னையில் கட்டப்படும்" என்று அறிவித்தார்கள்.

அவர்கள் அறிவித்தபடியே தமிழக சட்டமன்ற, தலைமைச் செயலகக் கட்டட வளாகம், சென்னை அண்ணா சாலையில் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டு வருகிறது.

கட்டுமானத்துக்கான ஒப்பந்தப்புள்ளி 5.9.2008 அன்று திறக்கப்பட்டது. 12.11.2008 அன்று புதிய கட்டடம் கட்டுவதற்கான பணிகள் தொடங்கின.

18 மாதங்களுக்குள், அதாவது 11.5.2010–க்குள் புதிய சட்டப்பேரவையினைக் கட்டி முடிப்பது என ஆரம்பத்தில் முடிவு செய்யப்பட்டிருந்தது.

2010 – 2011ஆம் ஆண்டுக்கான தமிழக நிதிநிலை அறிக்கையினை புதிய சட்டப்பேரவையில் தாக்கல் செய்துவிட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேரவாக் கொண்டார்கள். அதைத் தொடர்ந்து, 2010ஆம் ஆண்டு மார்ச் 10–ஆம் தேதிக்குள்ளாக சட்டமன்ற

மண்டபத்தை மட்டுமாவது முழுவதுமாகக் கட்டி முடித்துவிட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. அது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெரும் அர்ப்பணிப்பால் சாதிக்கப்பட்டு விட்டது.

புதிய சட்டப்பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகம் இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக் கட்டப்பட்டு வருகிறது. முதல் பகுதி 'ஏ பிளாக்' என்று அழைக்கப்படுகிறது. 'ஏ பிளாக்' 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 4 பெரும் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. இது 9 இலட்சம் சதுரஅடி பரப்பில், ரூ.425. 57 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் வட்ட வடிவிலான கட்டடமாக அமைக்கப்பட்டுள்ளது.

பொதுவாக, மாநாட்டு அரங்கம், கூட்ட அரங்கம் போன்றவை வட்ட வடிவத்தில்தான் கட்டப்படுகின்றன. அதுபோலவும், சக்கரம் என்பதை அடிப்படையாக வைத்தும், சட்டப்பேரவை வளாகத்தில் உள்ள 4 கட்டடங்களும் சக்கரம் போல் வட்ட வடிவத்தில் கட்டப்பட்டுள்ளன. அந்தக் கட்டடங்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன.

கூவம் ஆற்றை ஒட்டிய சுவாமி சிவானந்தா சாலையின் (சென்னை தொலைக்காட்சி நிலையச் சாலை) அருகில் முதலமைச்சர் வட்டத்தில் (சி.எம்.சர்க்கிள்) தொடங்கி, நூலக வட்டம் (லைப்ரரி சர்க்கிள்), சட்டப்பேரவை வட்டம் (அசம்ப்ளி சர்க்கிள்) எனத் தொடர்ந்து, வாலாஜா சாலை அருகே பொது வளாகம் (பப்ளிக் பிளாசா) என நீள்வட்ட வடிவத்தில் இந்த 'ஏ பிளாக்' பகுதி போய் முடிகிறது.

'பி' பிளாக்கில் தலைமைச் செயலக அலுவலகங்கள் அமைகின்றன. 7 மாடிகளைக் கொண்ட ஏழு தனித் தனிக்கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த 'பி பிளாக்' கட்டுமானப் பணிகள் அடுத்த ஆண்டு மே மாதத்தில் முடிக்கப்படவுள்ளது.

**பிரமாண்ட மேற்கூரை – குவிமுக மாடம்!**

'ஏ' பிளாக்கில் உள்ள 4 கட்டடங்களும் 6 மாடிக் கட்டடமாக கட்டப்பட்டுள்ளது. இதில், சட்டப்பேரவை அமையவுள்ள சட்டப்பேரவை வட்டத்தில் 100 அடி உயரம் கொண்ட 6 மாடி கட்டிடத்தின்மீது, அதே அளவு உயரம் (100 அடி) கொண்ட பிரமாண்ட மேற்கூரை **(Dome)** அமைக்கப்பட்டு வருகிறது. இந்த டோமின் மீது கண்ணாடி கூரை அமைக்கப்படும். இதனால் சட்டமன்ற அரங்கினுள் நேரடியாக சூரிய வெளிச்சம் படும். இந்தக் கூரையை சட்டமன்ற அரங்கில் தரைத்தளத்தில் அமர்ந்தபடியே பார்த்து ரசிக்க முடியும்.

இந்த பிரமாண்ட மேற்கூரையை, துருப்பிடிக்காத வகையில் தயாரிக்க தீவிர ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருவதால், சட்டமன்றத் திறப்பு விழாவுக்கென்று தற்காலிக மேற்கூரை அமைக்கப்பட்டது.

'ஏ பிளாக்கில்'உள்ள 4 கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துவிட்டன. மற்ற பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மொத்தப் பணிகளும், வரும் மே மாதத்தில் முடிக்கப்பட்டு விடும்.

சட்டப்பேரவைக் கட்டடத்தின் தரைத்தளத்தில் சட்டப் பேரவை (285 எம்.எல்.ஏ. இருக்கைகள்), பேரவைத்தலைவர் அறை, சட்டமன்றக்கட்சி அலுவலக அறைகள் (5 அறைகள்), முதலமைச்சர் செயலக அறை, கொறடா அறை, சார்புச் செயலாளர் அறை, எதிர்க்கட்சித் தலைவர் அறை, சட்டப் பேரவை துணைத் தலைவர் அறை, ஒப்பனை அறை ஆகியவை உள்ளன.

முதல் தளத்தில் கூட்ட அரங்கு, பொதுப்பணித் துறை பராமரிப்பு அலுவலகம், பிரிவு அலுவலகம், பத்திரிகையாளர் கேலரி, சார்புச் செயலாளர் பிரிவு, உணவுக் கூடம், ஒப்பனை அறை;

2ஆவது தளத்தில் துறைச் செயலாளர் அலுவலகம், கூட்ட அரங்கு, உணவுக் கூடம், பார்வையாளர் கேலரி, ஒப்பனை அறை,

3ஆவது தளத்தில் சார்புச் செயலாளர் அலுவலகம், கூட்ட அரங்கு, கூடுதல் துறைச் செயலாளர் அறை, பிரிவு அலுவலகம், பார்வையாளர் அறை, வெளிநாட்டவர் பதிவு செய்யும் அறை, உணவுக்கூடம், ஒப்பனை அறை.

4ஆவது தளத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம், கூட்ட அரங்கு, உணவுக்கூடம், பிரிவு அலுவலகம், சார்புச் செயலாளர் அலுவலகம், ஒப்பனை அறை.

5ஆவது தளத்தில் துறைச் செயலாளர் அலுவலகம், கூட்ட அரங்கு, இணைச் செயலாளர் அறை, ஒப்பனை அறை.

6ஆவது தளத்தில் செயலாளர் அறை, இணைச் செயலாளர் அறை, முதலமைச்சர் செயலக அலுவலகம், கண்காணிப்புப் பிரிவு, பொதுப்பணித் துறையின் மின்பராமரிப்புப் பிரிவு, பார்வையாளர்கள் அறை, ஒப்பனை அறை ஆகியவை அமைகின்றன.

இதுபோல், முதலமைச்சர் வட்டம், நூலக வட்டம், பொது வளாகம் ஆகியவற்றிலும் பல்வேறு அலுவலகங்கள் அமைக்கப்படும் வகையில் தனித்தனி 6 மாடிக் கட்டடங்களாக உருப்பெற்றிருக்கின்றன.

பொதுமக்கள் எவ்விதத் தடையுமின்றி, இந்த மாபெரும் வளாகத்துக்குள் வந்து செல்ல வேண்டும் என்று முதல்வர் கலைஞர் அவர்கள் விரும்பியதால், வாலாஜா சாலையை ஒட்டிய பகுதியில் பொது வளாகப் பகுதி (பப்ளிக் பிளாசா) அமைகிறது. இதில் குறிப்பிட்ட பகுதி வரை பொது மக்கள் எவ்விதத் தடையுமின்றி வந்து செல்லலாம். அவர்கள் உட்கார்ந்து ஓய்வெடுத்துச் செல்ல வசதிகள் செய்யப்படும். அங்கு தோட்டம் போன்றவையும் அமைக்கப்படும். அதனை தாண்டிச் செல்ல முடியாத வகையில் கண்ணாடித் தடுப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

'ஏ பிளாக்கில்' உள்ள 4 கட்டடங்களின் ஒவ்வொரு தளமும் இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தளமும் இணையும் இடத்தில் மெட்டல் டிடெக்டர் உடன் கூடிய வாசல்கள் உள்ளன. சோதனைக்குப் பிறகே அடுத்த கட்டடத்துக்குச் செல்ல முடியும். அதிகாரிகளுக்கான நுழைவு வாயில், சுவாமி சிவானந்தா சாலைப் பகுதியில் அமைக்கப்படுகிறது.

புதிய சட்டப்பேரவை வளாகத்துக்கு (ஏ பிளாக்) தனி துணை மின்நிலையம், தனி தொலைபேசி இணைப்பகம், தகவல் தொழில்நுட்ப வசதிகளை நிருவகிப்பதற்காக எல்காட் பிரிவு அமைக்கப்பட உள்ளது. 'ஏ' பிளாக்கை அமைப்பதற்கு 4 ஆயிரம் தொழிலாளர்கள் இரவு பகலாக உழைத்துள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அலுவலகம் அமையும் கட்டடம் சுவாமி சிவானந்தா சாலை – அண்ணா சாலை சந்திப்பு அருகே அமைகிறது.

**பத்திரிகையாளர் சந்திப்பு அரங்கம்!**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் அலுவலக அறை, இந்த மாடியின் 6ஆவது தளத்தில் அமைந்துள்ளது. அவர்களது அறையின் வலது பக்கத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு அரங்கும், இடது பக்கத்தில் அமைச்சரவைக் கூட்ட அரங்கும் அமைக்கப்பட உள்ளது.

பொதுத்துறை, நிதித்துறை, உள்துறை, திட்டங்கள் துறை, சட்டத்துறை ஆகிய முக்கியத் துறைகளின் செயலாளர்களின் அலுவலக அறைகள் 'ஏ' பிளாக்கில் அமைகிறது.

சட்டப்பேரவைச் செயலாளரின் அலுவலக அறை சட்டப் பேரவை அருகே தரைத் தளத்தில் அமைகிறது. மற்ற செயலாளர்களின் அலுவலக அறை, 6ஆவது தளத்தில் அமைகின்றன.

## பூங்காத் தோட்டம்

முதலமைச்சரின் அறைக்கு எதிரே திறந்த வெளியில் அழகிய 'ரூப் கார்டன்' தோட்டம் அமைக்கப்பட உள்ளது. பூங்கா போல் இந்தத் தோட்டம் வடிவமைக்கப்படும். ஓய்வு எடுப்பதற்கும், காற்றோட்டமாக உரையாடு வதற்கும் இந்தத் தோட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக இப்பூங்கா அமையும்.

இந்தத் தோட்டத்தைச் சுற்றி கண்ணாடிச் சுவர் அமைக்கப்படும். மற்றொரு 'ரூப் கார்டன்' நூலக வட்டத்துக்கான கட்டடத்தின் மேல் தளத்தில் அமைகிறது.

## பூகம்பத்தை தாங்கும் வகையில் கட்டடங்கள்

சட்டப்பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகக் கட்டடங்கள் அனைத்தும், பூகம்பத்தைத் தாங்கும் வகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

வளாகத்தில் உள்ள அனைத்துக் கட்டடங்களும் குளுகுளு வசதி செய்யப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழக பொதுப் பணித்துறை வரலாற்றில், இந்தக் கட்டடம் சிறப்பான இடத்தைப் பிடிக்கும் என்பது திண்ணம்.

"இந்தியாவிலேயே வேறெங்கும் இல்லாத வகையில் சிறப்பான சட்டமன்றக் கட்டடம் தமிழகத்தில்தான் கட்டப்பட்டுள்ளது" என்று புகழப்படும் அளவுக்கு உருவாகிறது.

சட்டப்பேரவை வளாகத்தின் வெளிப்புறத்தில் பெரும்பாலான இடங்களில் மேற்புறத்தில், 'கோலம் டிசைன்' வரையப்பட்ட பொன் நிறத் தகடுகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

'பிளாக் ஏ' பகுதியில் கட்டப்படும் – முதலமைச்சர் வளாகம், பொது வளாகம், சட்டப்பேரவை வளாகம், நூலக வளாகம் என நான்கு கட்டடங்களிலும் 10 ஆயிரம் சதுர அடி பரப்புக்கு கட்டடத்தின் வெளிப்புறங்களில் கண்ணாடிகள் பதிக்கப்பட்டுள்ளன. அந்தக் கண்ணாடிகளுக்கு சற்று இடைவெளிவிட்டு மேற்புறத்தில், பொன் நிறத்தாலான அலுமினியத் தகடுகள் பொருத்தப் பட்டுள்ளன.

இவ்வாறாக 10 ஆயிரம் அலுமினியத் தகடுகள் – கண்ணாடிகள் எங்கெங்கெல்லாம் வருகின்றனவோ, அதன் மீதெல்லாம் பொருத்தப்பட்டுள்ளன. இதனால் 'ஏ' பிளாக்கில் உள்ள சட்டமன்ற வளாகம் உள்பட அனைத்துக் கட்டடங்களுமே தங்கம் போல் ஜொலிக்கின்றன. பகலில் சூரிய வெளிச்சம், கட்டடத்தின் மீது படும்போது பொன் போல் தகதகவென மின்னுகின்றன.

கட்டடத்தின் வெளிப்புறத்தில் உள்ள கண்ணாடிகள் மீது அலுமினியத் தகடுகள் பொருத்தப்பட்டிருந்தாலும், கண்ணாடிக்கும், அலுமினியத் தகடுக்கும் இடையே, ஒருவர் சென்று கண்ணாடிகளை துடைக்கும் வகையில் இடைவெளி விடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கண்ணாடிகள் பொருத்தப்படாத இடத்தில் நீலநிற கிரானைட் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன.

## பசுமைக் கட்டடம்

இந்தக் கட்டடம், சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்காத பசுமைக் கட்டடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கட்டடத்துக்கு வெளிப்புறத்தில் வேதியியல் பூச்சைத் தவிர்க்கும் வகையில் கண்ணாடியும், கிரானைட் கற்களும் பதிக்கப்பட்டுள்ளன.

குறைந்த அளவு மின்சாரத்தை உபயோகிக்கும் விளக்குகள் மற்றும் மின்கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

சட்டப்பேரவை வளாகத்தின் சுற்றுச் சுவர்களில் தமிழர்களின் பாரம்பரியத்தை விளக்கும் வகையில் அழகிய கோலங்கள் பதிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் கலைஞர் அவர்களே இதற்கான டிசைன்களைத் தேர்ந்தெடுத்தார்கள் என்பது மற்றுமோர் சிறப்புக்குரிய செய்தியாகும்.

**பறக்கும் பாலம்!**

சட்டப்பேரவை வளாகத்தில் இருந்து தலைமைச் செயலக வளாகத்துக்கு கார்கள் செல்லும் வகையில் பறக்கும் பாலம் அமைக்கப்படுகிறது.

வங்கக்கடலில் தொலைதூரத்தில் இருந்து பார்க்கையில் சென்னையின் அடையாளமாகத் தென்படும் முதல் சின்னமாக இந்த குவிமுக மாடம் **(Dome)** விளங்கும்.

இந்தக் கட்டடத்தின் வெளிப்புறத்தில் பதிக்கப்பட்டுள்ள கிரானைட்கள், சுவரில் ஒட்டப்படாமல், 'போல்ட்–நட்' போட்டு சுவருடன் இணைக்கப்பட்டுள்ளன.

கட்டடத்தில் பதிக்கப்படும் கிரானைட் கற்களை அரசு நிறுவனமான டாமின் சப்ளை செய்துள்ளது.

தமிழக புதிய சட்டப்பேரவைக் கட்டடம், பசுமை விதிமுறைகளின் கீழ் கட்டப்பட்டுள்ளது. அகற்றப்பட்ட மரங்கள், மாற்று இடத்தில் நடப்பட்டுள்ளன. சட்டப்பேரவைக் கட்டடத்தில் **3.4** இலட்சம் சதுர அடியில் பசும்புல்வெளிகள் அமைக்கப்பட்டுள்ளன. 'ரூப்'களிலும், கார்டன்கள் அமைக்கப்படுகிறது. 'மறுசுழற்சி' முறைப்படி தண்ணீர் பயன்படுத்தப்படும். தினமும் **2.55** இலட்சம் லிட்டர் தண்ணீர் மறுசுழற்சி மூலம் கிடைக்கும்.

நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் வகையில், மழைநீர் சேகரிப்புத் திட்டமும் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. பாத்ரூம்களில் தண்ணீர் குறைந்த அளவே தேவைப்படும் வகையில், சிறப்பான முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. இதன் காரணமாக தண்ணீர்த் தேவை **52** சதவீதம் குறையும்.

கோலம் டிசைன் பிளேட்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கோலங்களில் உள்ள சிறிய புள்ளிகள் மூலம் வெளிச்சம் உட்புகும்; வெப்பம் உள்ளே வராது. **60** சதவீத வெப்பத்தை உட்புக விடாமல் வெளியேற்றும் வகையில், கண்ணாடிகள் பதிக்கப் பட்டுள்ளன. வளாகத்தில் இயற்கையாகவே வெளிச்சம் நிறைந்திருக்கும்.

அறையில் ஆட்கள் இல்லை என்றால் ஐந்து நிமிடத்திற்குள் லைட், பேன்கள் தானாக செயல்பாட்டை நிறுத்திக்கொள்ளும். மின் சிக்கனத்தைக் கருத்தில் கொண்டு, இந்த நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் **20** சதவீத எரிபொருள் தேவை குறையும்.

சென்னையின் தட்பவெப்ப நிலையைக் கருத்தில் கொண்டு, உள்ளூரில் உள்ள செடிகளே கார்டன்களில் வைக்கப்படுகின்றன. இரண்டு ஆண்டுகள் வளர்ந்தபின் தண்ணீர் தேவைப்படாது.

கட்டுமானப் பணிக்கு பயன்படுத்திய பொருட்கள் அனைத்தும் சென்னையைச் சுற்றி **800** கி.மீ., தூரத்திற்குள் வாங்கப்பட்டவை.

**தங்க தர நிர்ணயச் சான்றிதழ்!**

சுகாதாரம் பேணுதல், மின், குடிநீர் சிக்கனமுறை கையாளுதல் என பசுமை விதிகள்படி கட்டப்பட்டுள்ளன.


உலகிலேயே பசுமை விதிகளின் கீழ்கட்டப்பட்ட ஆட்சி மன்றக் கட்டடம் என்ற பெருமை, தமிழக புதிய சட்டப்பேரவைக் கட்டடத்திற்குக் கிடைத்துள்ளது.

அமெரிக்க, இந்திய பசுமைக் கட்டடக் கழகத்தின், 'தங்க தர நிர்ணயச் சான்றிதழ்' இக்கட்டடத்திற்குக் கிடைத்துள்ளது, மேலும் பெருமை சேர்ப்பதாகும்.

★ ★ ★

# ஜெர்மன் நிறுவனம் வடிவமைத்துள்ள சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத பசுமைக் கட்டடம்!

## தமிழக அரசு விளக்கம்!




சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் ரூ.425.57 கோடி மதிப்பில் 9,31,000 சதுர அடி பரப்பளவு கொண்ட புதிய சட்டசபை வளாகக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

ஜெர்மனியைச் சேர்ந்த ஜி.எம்.பி. நிறுவனம், இக்கட்டடத்தை தரைத்தளம் மற்றும் ஆறு தளங்கள் கொண்ட சுற்றுப்புறச் சூழலுக்கு கேடு விளைவிக்காத பசுமைக் கட்டடமாக வடிவமைத்துள்ளது.

தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி கோரிய M/s. ECCI Limited வசம் பணிகள் ஒப்படைக்கப்பட்டு, 12.11.2008 முதல் பணிகள் நடைபெற்று வருகிறது.

கட்டடத்தின் வெளிப்பகுதியில், வேதியியல் வண்ணப்பூச்சைத் தவிர்த்து, கண்ணாடியும் மெருகு ஏற்றப்பட்ட கருங்கல் பலகையும் பொருத்தப்பட்டுள்ளது.

நான்கு வட்டங்கள் கொண்ட இக்கட்டடத்தின் முதல் மற்றும் இரண்டாம் வட்டத்தின் மேல் தளத்தில் பசுமையான தோட்டமும், வெளிப்புறம் வாகனங்கள் செல்ல கூரை அமைக்கப்பட்ட சாலையும், கூரையின் மேல் புல்வெளி மற்றும் செடிகள் அமைத்தும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

120 அடி விட்டம் கொண்ட வட்ட வடிவ அமைப்பு உடைய சட்டமன்றப் பேரவையும், அக்கூரையின் மேற்புரத்தில் 100 அடி உயரம் கொண்ட மிகப் பிரமாண்டமான குவிமுக மாடம் (Dome) அமைக்கப்பட்டுள்ளது.

இக்கூடத்தில் வேலை செய்யும் அலுவலர்கள் களைப்படையாமல் வேலை செய்தவற்கு ஏதுவாக, கட்டடம் முழுவதும் குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தின் கழிவுநீர் சுத்திரிக்கப்பட்டு, புல்வெளி மற்றும் செடிகளுக்கு உபயோகிக்கப் படவுள்ளது.

இக்கட்டடத்தில் குறைந்த அளவில் மின்சாரத்தை உபயோகிக்கும் விளக்குகள் மற்றும் மின்சாரக் கருவிகள் உபயோகிக்கப்பட்டுள்ளது.

சட்டசபை, பொதுத்துறை, நிதித்துறை, சட்டத்துறை, உள்துறை ஆகிய துறைகளின் அலுவலகங்கள் மற்றும் அமைச்சர்களின் அறைகளும் இக்கட்டடத்தில் அமைந்துள்ளன.

**வடிவமைப்புத் திட்டம் உருவான விதம்**

**சக்கர வியூகம்:** திராவிடக் கலாச்சாரத்தையும் சக்கர வியூகத்தையும் அடிப்படையாகக் கொண்டு சக்கர வடிவம் உருவாக்கப்பட்டது.

சக்கரங்களை இணைக்கும் புள்ளிகளைச் சேர்த்து கோலம் உருவாவதை அறிய முடிகிறது.

ஜெர்மனியில் இருந்து வந்திருந்த கட்டட வடிவமைப்பு நிபுணர்கள் தமிழ்நாட்டின் பாரம் பரிய முறையான கோலங்கள் உருவாக்கப் படும் விதத்தையும் – புள்ளிகளை ஒன்று சேர்த்து ஒருங்கிணைத்து வடிவம் கொடுப்பதையும், கண்டு அதிசயித்து, கோலம் வகையிலான அடிப்படையில் நான்கு சக்கர வடிவங்களையும் ஒருங்கிணைத்தனர்.

**கோலம் வரும் இடங்கள் :** தரை, தூண்கள், வெளிப்புறத் தடுப்பு அலங்கார வேலைகள், கதவு மேற்புறப் பலகைகள், சுவர் பார்டர்கள், என தமிழகத்தின் பாரம்பரியக் கோலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**கோபுரம்** : தமிழ்க் கலாச்சாரத்துடன் ஒன்றிணைந்தது கோபுரம். திராவிடக் கலாச்சாரத்தின் வெளிப்பாடாக 'திராவிட சிகரம்' எனும் வகையில் கோபுரம் வடிவமைக்கப்பட்டது.

பாரம்பரிய சிற்பக்கலையான கருங்கல் வேலைப்பாடுடன் நவீன அலுமினியத் தகடுகளும் பொருத்தி, மிக உயரமாக இயற்கை வெளிச்சம் சட்டசபை உள்ளே வருமாறு மிகவும் நேர்த்தியான தொழில் நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**கட்டடத்தின் பரப்பளவு:**

| | | |
|---|---|---|
| தரைத்தளம் | – | 17,455 சதுர மீட்டர் (1,87,955 சதுர அடி), |
| முதல் தளம் | – | 11,274 சதுர மீட்டர் (1,21,398 சதுர அடி), |
| இரண்டாம்தளம் | – | 11,061 சதுர மீட்டர் (1,19,105 சதுர அடி), |
| மூன்றாம் தளம் | – | 10,137 சதுர மீட்டர் (1,09,155 சதுர அடி), |
| நான்காம் தளம் | – | 11,061 சதுர மீட்டர் (1,19,105 சதுர அடி), |
| ஐந்தாம் தளம் | – | 12,595 சதுர மீட்டர் (1,35,623 சதுர அடி), |
| ஆறாம் தளம் | – | 12,088 சதுர மீட்டர் (1,30,164 சதுர அடி), |
| ஏழாம் தளம் | – | 787 சதுர மீட்டர் (8,474 சதுர அடி), |
| கட்டடத்தின் உயரம் | – | 60.50 மீட்டர் (198.44) அடி, |

கடைக்கால் அடித்தூணில் எண்ணிக்கை – 1,676 எண்கள்,

கற்காரைத் தூண்களின் எண்ணிக்கை – 475 எண்கள்,

**உபயோகப்படுத்தப்பட்ட கட்டுமானப் பொருட்கள்– செய்த வேலைகளின் விவரம்**

1. மண் வேலை – 55,000 க.மீ. (19,42,325 க.அடி),
2. கற்காரை – 91,250 க.மீ, (32,22,494 க.அடி),
3. ஆற்று மணல் – 53,000 க.மீ (18,71,695 க.அடி),
4. கருங்கல் ஜல்லி – 54,000 க.மீ. (19,07,010 க.அடி),
5. சிமெண்ட் – 23,760 மெட்ரிக் டன்,
6. இரும்புக் கம்பி – 14,000 மெட்ரிக் டன்,
7. செங்கல் – 49,60,000 எண்கள்
8. தரையில் பதிக்கப்பட்ட மெருகூட்டப்பட்ட கருங்கல் பலகை – 48,000 ச.மீ (5,16.864 ச.அடி)
9. தரையில் பதிக்கப்பட்ட சலவைக்கல் – 18,000 ச.மீ. (1,93,824 ச.அடி),

10. கண்ணாடித் தடுப்புச் சுவர் – 20,000 ச.மீ. (2,15,360 ச.அடி)

**கட்டட வேலையில் ஈடுபடுத்தப்பட்ட பணியாளர்கள் விவரம்:**

பொறியாளர் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள் – 1,17,000 மனித நாட்கள்,

இதர பணியாளர்கள் – 70,200 மனித நாட்கள்,

தொழிலாளர்கள் – 14,56,000 மனித நாட்கள்,

மின் ஓட்ட அழுத்த மாற்றுக் கருவி – 1600 கி.வோல்ட் ஆம்ஸ் / 33 கி.வோ / 400 வோல்ட் – 7 எண்கள்,

உயர் அழுத்த கருவி பொருத்து பலகை – 1,250 ஆம்ஸ் – 3 எண்கள்,

குறைந்த அழுத்த கருவி பொருத்து பலகை – 600 – 1250 ஆம்ஸ் – 21 எண்கள்,

மின் கடத்தி கம்பியின் நீளம் – 32 கிலோ மீட்டர்,

மின் கம்பி தாங்கும் தட்டின் நீளம் – 30 கிலோ மீட்டர்,

காற்று குளிரூட்டு கருவி – 410 டன் – 10 எண்கள்,

குளிர்ந்த தண்ணீர் இறைக்கும் கருவி – 1073 கேலன் / நிமிடம் செய்திறன் கொண்டது 20 எண்கள்.

காற்று சுத்திகரிப்புக் கருவி – 36,000 கன அடி / நிமிடம் செய்திறன் கொண்டது – 25 எண்கள்,

நால்வரி காற்று வெளியேற்றி – 36,000 கன அடி / நிமிடம் செய்திறன் கொண்டது – 1,930 எண்கள்,

குளிர்ந்த நீர் எடுத்தும் செல்லும் குழாயின் நீளம் – 31 கிலோ மீட்டர்,

குளிர்ந்த காற்று செல்லும் குழாயின் பரப்பு – 14 சதுர கிலோ மீட்டர்,

தீயணைக்கும் தண்ணீர் இரைக்கும் கருவி – 273 கன மீட்டர் / மணி நேரம் 3 எண்கள்,

தீயணைப்பிற்காக தண்ணீர் கொண்டு வரும் குழாயின் நீளம் – 31 கிலோ மீட்டர்,

தீயணைப்பு தண்ணீர் தெளிப்பான் கருவி – 9,500 எண்கள்,

தீ எச்சரிக்கைக்காக போடப்பட்ட மின்கம்பியின் நீளம் – 23 கிலோ மீட்டர்,

புகை அறியும் கருவி – 3,500 எண்கள்,

தீ எச்சரிக்கை ஒலிப்பு மானி – 600 எண்கள்,

மின்தூக்கி – 17 எண்கள்

தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில்

## தியாகி **சுப்பிரமணிய சிவா** மணிமண்டபம்

**ந**மது நாட்டின் விடுதலையை உயிர்மூச்சாகக் கொண்டு, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் சீடராகவும், தேசபந்து சித்தரஞ்சன்தாஸ், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி., மகாகவி பாரதியார் ஆகியோரின் நெருங்கிய நண்பராகவும் திகழ்ந்தவர் தியாகி சுப்பிரமணிய சிவா. அவர் சுதந்திரப் போராட்டத்தில் தீவிர ஈடுபாடு கொண்டதன் காரணமாக, வெள்ளையர் ஆட்சி அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. அச்சிறையின்



தூய்மையற்ற சூழ்நிலையால், அவர் கொடிய நோய்க்கு ஆளானபோதும், சுதந்திர வேட்கையைத் தமது இறுதி நாள் வரை கைவிடாமல், வாழ்ந்து மறைந்தார். அந்தத் தியாகசீலர் சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு, அவர் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டியில் 40 இலட்சம் ரூபாய்ச் செலவில் மணிமண்டபம் அமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

❖ ❖ ❖

# புதிய - பழைய சட்டமன்ற வளாகங்களில், தமிழக சட்டமன்றச் சரித்திரத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி சிறப்பு சேர்த்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞரின் உருவப்படம்

**- தமிழக அமைச்சரவையில் தீர்மானம்**

முறையில் கடமையாற்றி வரும் ஒப்பற்றத் தலைவர் கலைஞர் அவர்களை ஜனநாய கத்தின்பால் பற்று கொண்ட அனைவரும் பெரிதும் பாராட்டுகின்றனர்.

ஜனநாயக நெறிமுறைகளை அரசியலிலும், ஆட்சியிலும் கடைபிடித்து வருவதுடன், தமிழக மக்களின் வாழ்க்கைத் தரம் உயர தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்கள் தீட்டிப் பணியாற்றி வருபவர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

தமிழகத்தின் வரலாற்றில் அழிக்க முடியாத இடத்தைப் பெற்று, அரும்பணியாற்றி வரும் முதல்வர் கலைஞர் அவர்கள், தமிழகச்





**த**மிழக அமைச்சரவைக் கூட்டம் 4.3.2010 அன்று நடைபெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1957ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற அனைத்து சட்ட மன்றத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று, தமிழகச் சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக 50 ஆண்டு காலத்திற்கும் மேலாகத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக இருப்பதுடன் – 1967ஆம் ஆண்டு முதன் முறையாக அமைச்சராகவும் – 1969ஆம் ஆண்டில் முதன் முறையாகத் தமிழக முதலமைச்சராகவும் பொறுப்பேற்று – 2006 ஆம் ஆண்டு முதல் ஐந்தாம் முறையாகத் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பு வகித்து, ஜனநாயகத்தைக் கட்டிக்காத்து வருவதுடன், தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் சீரிய சட்டமன்றப் பேரவைக்குப் புதிய வளாகம் அமைத்து, 13.3.2010 அன்று திறப்பு விழா காணவிருக்கின்றார்.

இக்கூட்டத்தில் "தமிழகச் சட்டமன்றச் சரித்திரத்தில், 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி இந்த மாமன்றத்திற்குச் சிறப்பு சேர்த்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய உருவப்படத்தை, புதிய சட்டமன்ற வளாகத்திலும், பழைய சட்டமன்ற வளாகத்திலும் திறந்து வைப்பது" என்ற தீர்மானம் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் அவர்கள் முன்மொழிய, நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் வழிமொழிய, ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. ★

# நிதிநிலை அறிக்கை 2010 - 2011

தமிழக அரசின் நிதியமைச்சர் பேராசிரியர் **க. அன்பழகன்** அவர்கள், 2010–2011ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தை, 2010 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19 ஆம் நாள் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றிய உரை.



*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2006ஆம் ஆண்டு ஐந்தாம் முறையாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்று, மகத்தான மக்கள் நலத்திட்டங்கள் பல தீட்டி, அவற்றைச் செவ்வனே செயல்படுத்தி – கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த அரசு நிகழ்த்தியுள்ள ஒப்பற்ற சாதனைகளுக்கு எல்லாம் மணிமகுடம் வைத்தாற்போன்று அமைக்கப்பட்டு இருக்கக்கூடிய, இந்தப் புதிய சட்டப் பேரவையில், வரும் 2010–2011ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை உங்கள் முன்வைப்பதில் நான் மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியத் திருநாட்டிலேயே வேறு எங்கும் இல்லாத வகையிலும், அனைத்து வசதிகளும் ஒருங்கே அமையப் பெற்றதாகவும், திராவிடக் கட்டடக்கலையின் சிறப்பம்சங்களை உள்ளடக்கியதாகவும், உலகிலேயே சட்டப் பேரவைகளில் முதல் பசுமைக் கட்டடமாகவும், விரிந்து பரந்து சிறந்து, உலகமே வியந்து போற்றும் வண்ணம் தங்கத் தர நிர்ணயத் தகுதி பெற்றும், உன்னதமாகக் கட்டப்பட்டுள்ள இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கட்டடத்தை எழுப்பும் பணியில் – வடிவமைப்பு முதல் கட்டடப்பணி நிறைவு பெறும்வரை – ஒவ்வொரு நிலையிலும், நித்தமும் தக்க ஆலோசனைகளை அளித்து நாள்தோறும் காலை ஒரு முறையும் மாலை ஒரு முறையும் இப்பணிகளை நேரில் வந்து பார்வையிட்டு, அறிவுரைகளை வழங்கி, பார் போற்றும் இக்கட்டடத்தினை ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களின் முன்னிலையில், மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன்

சிங் அவர்களின் திருக்கரங்களால் திறந்திடச்செய்து அவர்கள் இருவரின் பாராட்டுகள் மற்றும் புகழுரைகளைப் பெற்று பெருமைப்படுத்திய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு, இந்தப் பேரவையில் முதல் உரையினை ஆற்றி சட்டப்பேரவை வரலாற்றில் இடம்பெறும் அரிய வாய்ப்பினை எனக்கு அளித்தமைக்காக உள்ளம் நிறைந்த நன்றியினைக் கூறி எனது உரையினைத் தொடங்குகிறேன்.

"அரியவென்று ஆகாத இல்லைபொச் சாவாக் கருவியால் போற்றிச் செயின்"

என்னும் அய்யன் திருவள்ளுவனின் குறளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் தமிழக முதல்வர் கலைஞரின் மாபெரும் சாதனையாகத் திகழும் இந்த வானுயர் சட்டப்பேரவை மணிமாடம், தமிழ்நிலம் உள்ளளவும், முக்கடல் உள்ளளவும் நிலைபெற்று விளங்கிக் காலமெல்லாம் கலைஞரின் புகழ்பாடும் என்பதில் அய்யமில்லை. இந்தப் பேரவையினரின் ஒருமித்த வாழ்த்தினைக் கலைஞருக்குத் தெரிவித்துக்கொள்ள நான் விழைகிறேன்.



2. கலைஞர் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து கடந்த நான்கு ஆண்டுகளாகத் தமிழக மக்களுக்கு நலம் பயக்கும் பல திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றி வந்துள்ளது. இதன் தொடர் நிகழ்வாக 2010–2011 ஆம் நிதியாண்டிற்கான தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை இந்த அவையின் முன் வைக்கப்படுகிறது. சமூகநீதி, தமிழ்நாட்டின் வளர்ச்சி மற்றும் தமிழக மக்களின் வாழ்க்கைத்தரத்தில் மேம்பாடு எனும் அடிப்படைக் குறிக்கோள்களை நெஞ்சில் நிறுத்தி இந்த நிதிநிலை அறிக்கை வகுக்கப்பட்டுள்ளது.

## வேளாண்மை மற்றும் கூட்டுறவு


3. தமிழக விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றும் வகையில் வேளாண் வளர்ச்சிக்கு இந்த அரசு தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகின்றது. 2006ஆம்

ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் முதல் நடவடிக்கையாக விவசாயிகளின் கடன்சுமை நீக்கும் வகையில், ஏழாயிரம் கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களை முற்றிலுமாக ரத்து செய்தது. கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தேவையான நிதியுதவி அளித்து, விவசாயிகள் தொடர்ந்து பயிர்க்கடன் பெறுவதையும் உறுதி செய்துள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 1,097 கோடி அளவுக்கு மட்டுமே கூட்டுறவுப் பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டதுடன் ஒப்பிடும்போது 2006–2007 இல் ரூபாய் 1,250 கோடியும், 2007–2008 இல் ரூபாய் 1,360 கோடியும், 2008–2009 ஆம் ஆண்டில் ரூபாய் 1,571 கோடியும் கூட்டுறவுப் பயிர்க்கடனாக வழங்கப்பட்டுள்ளது கருதப்படவேண்டியதாகும். 2009–2010 ஆம் ஆண்டில் ரூபாய் 2,000 கோடி அளவுக்குப் பயிர்க்கடன் வழங்க இலக்கு நிர்ணயித்து, இதுவரை ரூபாய் 2,013 கோடி கடன் அளிக்கப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டில் இந்த இலக்கு ரூபாய் 2,500 கோடியாக உயரும்.**

4. கூட்டுறவுப் பயிர்க்கடன்களை முறையாகத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்குப் பயிர்க்கடன் மீதான வட்டியை முற்றிலும் ரத்து செய்யும் புரட்சிகரமான திட்டத்தை 2009–2010 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவிலேயே முதன்முதலாகச் செயல்படுத்திவருவது இந்த அரசுதான். விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கூட்டுறவுப் பயிர்க்கடன் வழங்கும் திட்டம் வரும் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப் படும். இதற்காக ரூபாய் 140 கோடி இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்குப் பயிர் இழப்பீடு வழங்கும், காப்பீட்டுத் திட்டத்திற்கான காப்பீட்டுத் தொகையில் 50 சதவீதம் அரசே மானியமாக வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி, அதிக எண்ணிக்கையில் விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக, 2005–2006 இல் காப்பீடு செய்த விவசாயிகளின் எண்ணிக்கையான ஒரு இலட்சம் என்பது, 2009–2010இல் 7 இலட்சத்து 80 ஆயிரமாக உயர்ந்துள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில், இவ்வகையில் ரூபாய் 891 கோடி இழப்பீட்டுத் தொகையாக அளிக்கப்பட்டுள்ளது. இந்த வரவு–செலவுத் திட்டத்திலும் காப்பீட்டுத் தொகை மானியமாக ரூபாய் 40 கோடியும், இழப்பீட்டுத் தொகைக்கான தமிழக அரசின் பங்காக ரூபாய் 200 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. கரும்பு கொள்முதல் விலையை டன் ஒன்றுக்கு 2006–2007 ஆம் ஆண்டில் 1,025 ரூபாய் ஆகவும், 2007–2008 ஆம் ஆண்டில் 1,034 ரூபாய் ஆகவும், 2008–2009 ஆம் ஆண்டில் 1,100 ரூபாய் ஆகவும் உயர்த்தி, நடப்பு அரவைப் பருவத்திற்கு, போக்குவரத்துக்



கட்டணம் மற்றும் சர்க்கரை கட்டுமான ஊக்கத் தொகையுடன் சேர்த்து, கரும்பு டன் ஒன்றுக்கு 1,550 ரூபாய் ஆக இந்த அரசு உயர்த்தி வழங்கி வருகிறது. **கரும்பு விவசாயிகளை மேலும் ஊக்குவிக்கும் வகையில், நடப்பு அரவைப் பருவத்திற்கு (2009–2010) கரும்பு டன் ஒன்றுக்கு மேலும் கூடுதல் விலையாக 100 ரூபாய் வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளபடி, கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு வழங்கப்படும் 1,550 ரூபாய் என்பது 1,650 ரூபாய் ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்படும். கழக அரசு பொறுப்பேற்பதற்கு முன்பு 2005–2006 ஆம் ஆண்டில் கரும்பு விவசாயிகளுக்குக் கிடைத்த விலை ரூபாய் 1,014 என்பதைக் கருதும்போது, வரும் அரவைப் பருவத்திற்கு (2010–2011) போக்குவரத்துக் கட்டணம் மற்றும் ஊக்கத் தொகை சேர்த்து, டன் ஒன்றுக்கு 2,000 ரூபாயாக வழங்கப்படும் என்ற இனிக்கும் செய்தியைக் கரும்பு விவசாயிகளுக்கு அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.**

7. ஒரு குவின்டால் நெல்லுக்கு ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்ற விவசாயிகளின் நீண்ட காலக் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசின் விலையைவிடக் கூடுதல் ஊக்கத் தொகை வழங்கி, இந்த அரசு நெல்லுக்கான கொள்முதல் விலையைச் சாதாரண ரகத்திற்கு, குவின்டால் ஒன்றுக்கு ரூபாய் 1,050 ஆகவும், சன்ன ரகத்திற்கு ரூபாய் 1,100 ஆகவும் உயர்த்தியுள்ளது. இந்த வரவு–செலவுத் திட்டத்தில் நெல் கொள்முதலுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்காக ரூபாய் 200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. நீர்ப்பயன்பாட்டைக் குறைத்து, நெல் உற்பத்தித் திறனை அதிகரிக்கவல்ல 'செம்மை நெல் சாகுபடித் திட்டம்' தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2009–2010 ஆம் நிதியாண்டு வரை 15 இலட்சம் ஏக்கர் நிலம் செம்மை நெல் சாகுபடித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் 6 இலட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் கூடுதல் நிலப்பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப் படும்.

9. துல்லியப் பண்ணை முறை மூலம் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து, இப்பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்க இந்த அரசு வகை செய்துள்ளது. இம்முறை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, இதுவரை 57,500 ஏக்கர் நிலப்பரப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டில் மேலும் 35,000 ஏக்கர் நிலப்பரப்பில் இம்முறை செயல்படுத்தப்படும்.

10. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த உதவும் சொட்டு நீர்ப்பாசனத் திட்டம், கரும்பு மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடும் விவசாயிகளுக்குப் பெரிதும் நலம் பயக்கின்றது. இத்திட்டம் வரும் நிதியாண்டில் மேலும் 75,000 ஏக்கர் நிலம் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்படும்.

11. செயற்கை உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் போன்ற செயற்கைப் பொருள்களைப் பயன்படுத்தாமல், இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்தி, சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையாக இயற்கை வழி விவசாயத்தை ஊக்குவிக்கும் பல திட்டங்களை 2006–2007 ஆம் ஆண்டு முதல், இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இயற்கை வழி விவசாயம் மேற்கொள்ள விரும்பும் விவசாயிகளுக்கு மிகவும் அவசியமான தரச் சான்றிதழ் வழங்கும் அமைப்பை உருவாக்கியுள்ளது. இதனால் இயற்கை வேளாண் விளைபொருள்களுக்கு நமது நாட்டிலும் வெளி நாடுகளிலும் நல்ல விலை கிடைக்கிறது. இயற்கை வழி வேளாண்மைக்கான மாதிரிப் பண்ணைகள் வேளாண்மைத் துறையால் அமைக்கப்பட்டு, இயற்கை வழி வேளாண்மை குறித்த பயிற்சியும் விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது. கடந்த மூன்றாண்டுகளில் 10,000 விவசாயிகள் 28,000 ஏக்கரில் 56 வகைப் பயிர்களை இயற்கை வழி வேளாண்மை முறையில் பயிர் செய்திடப் பதிவு செய்துள்ளனர். இயற்கை வழி வேளாண்மையில் அதிக நெல் உற்பத்தித்திறன் காட்டிச் சாதனை புரியும் விவசாயிகளுக்குப் பரிசுகள் வழங்கப்படுகிறது.

12. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்காக, தமிழ்நாடு மின்சார

வாரியத்திற்கு மானியம் அளிக்கும் வகையில், ரூபாய் 295 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13. நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு குறு விவசாயிகளுக்கு நல உதவிகள் வழங்கும், "விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர் நல வாரியத்தின்" கீழ் இதுவரை 76 இலட்சம் குடும்பங்களைச் சார்ந்த 1 கோடியே 73 இலட்சம் பேர் உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர். இதுவரை 5 இலட்சத்து 10 ஆயிரம் பயனாளிகளுக்கு, ரூபாய் 415 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தை வரும் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்த ரூபாய் 152 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14. விவசாயிகளைச் சுயஉதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்து, சுழல்நிதி வழங்கும் திட்டம் கடந்த இரு ஆண்டுகளாகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 2 இலட்சத்து 7 ஆயிரம்



விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்ட 20,000 குழுக்கள் அமைக்கப்பட்டு, ரூபாய் 20 கோடி சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய குழுக்களுக்கு ரூபாய் 243 கோடி பயிர்க்கடனாக அளிக்கப்பட்டுள்ளது. **வரும் நிதியாண்டில் மேலும் 10,000 குழுக்கள் அமைக்கப்படும்.** இக்குழுக்கள் அமைக்கப்படும்போது, காய்கறி, மலர்கள், பழங்கள், தென்னை போன்ற தோட்டப் பயிர்களைப் பயிரிடும் சிறு குறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, இவர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களை நேரடியாக அரசு உழவர் சந்தைகளுக்கும், பிற சந்தைகளுக்கும் கொண்டு சென்று விற்பதற்கு உதவியாக, கிராம அளவில் இக்குழுக்களை ஒருங்கிணைத்து, தேவையான போக்குவரத்து மற்றும் சேமிப்பு கட்டமைப்பு வசதிகள், ஏற்படுத்தவும் கூட்டுறவு வங்கிகள் மூலம் உதவி அளிக்கப்படும். இப்புதிய குழுக்களுக்குச் சுழல்நிதி வழங்க ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

15. நலிவுற்றிருந்த கூட்டுறவு நிதி அமைப்புகளுக்குப் புத்துயிரூட்டும் நோக்குடன், பேராசிரியர் வைத்தியநாதன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், இந்த அமைப்புகளுக்கு மைய அரசும் மாநில அரசும் இணைந்து அளிக்கும் நிதியுதவி திட்டத்தை, இந்த அரசு செம்மையாகச் செயல்படுத்தியதன் பயனாக, இந்த அமைப்புகள் ரூபாய் 1,008 கோடி மத்திய அரசு நிதியையும், ரூபாய் 207 கோடி மாநில அரசு நிதியையும் பெற்றுள்ளன. இந்த நிதியுதவியின் காரணமாகவும், தமிழக அரசு விவசாயிகளின் கடன்களை ரத்து செய்து இந்த அமைப்புகளுக்கு இழப்பீடு வழங்கியதன் காரணமாகவும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் கடன் வழங்கும் திறன் அதிகரித்து 2009 ஆம் ஆண்டு முடிவில், ரூபாய் 8,534 கோடி அளவிலான கடன்களை வழங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## கால்நடை வளர்ப்பு

**16.** கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், கடந்த நான்காண்டுகளில் 17,367 முகாம்கள் நடத்தப்பட்டு, 2 கோடியே 14 இலட்சம் கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இத்துறையில் கடந்த

நான்கு ஆண்டுகளில் 493 கால்நடை மருத்துவர்கள், 386 கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் 848 கால்நடை உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் 444 கால்நடை துணை மையங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.



**நவீன முறையில் தூய்மையாகவும் துரிதமாகவும் பாலைப் பதப்படுத்தும் வகையிலும், மதிப்புக் கூட்டப்பட்ட பால் பொருள்களை உற்பத்தி செய்ய ஏதுவாகவும், கோவை ஆவின் நிறுவனம், ரூபாய் 27 கோடி மதிப்பீட்டில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் உதவியோடு நவீனமயமாக்கப்படும்.** கால்நடை மற்றும் பால்வள மேம்பாட்டுத் துறைக்கு ரூபாய் 351 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## நீர்ப்பாசனம் மற்றும் வெள்ளத் தடுப்பு

17. வெள்ள உபரிநீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுத்து, இந்த உபரிநீரை வறண்ட மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லும் நோக்குடன் மாநிலங்களுக்குள் பாயும் ஆறுகளை இணைக்கும் திட்டம், முதல்வர் கலைஞர் அவர்களின் சிந்தையில் பிறந்த திட்டம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் காவிரியின் குறுக்கே கட்டளையில் கதவணை அமைக்க ரூபாய் 189 கோடி மதிப்பீட்டிலும், தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு இணைப்புத் திட்டம் ரூபாய் 369 கோடி மதிப்பீட்டிலும் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. வெள்ளத் தடுப்புப் பணிகளுக்கு முன்னுரிமை அளித்து, காவிரி வெள்ளத் தடுப்புத் திட்டம் திருச்சி, பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் ரூபாய் 254 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு நிறைவடையும் நிலையில் உள்ளது. **இதேபோன்று, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்கள் பயனடையும் வகையில் கொள்ளிடம் வெள்ளத் தடுப்புத் திட்டம் ரூபாய் 376 கோடி மதிப்பீட்டிலும், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் வெள்ளாறு வெள்ளத் தடுப்புத் திட்டம் ரூபாய் 164 கோடி மதிப்பீட்டிலும், கடலூர் மாவட்டத்தில் பெண்ணையாறு வெள்ளத் தடுப்புத் திட்டம் ரூபாய் 69 கோடி மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் ரூபாய் 609 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டங்கள் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.**

18. ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகளைக் கட்டி ஆங்காங்கே நிலத்தடி நீராதாரத்தைப் பெருக்கும் நோக்கத்துடன், ரூபாய் 550 கோடி மதிப்பிலான ஒரு பெருந்திட்டம், 2008–2009 நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1,859 தடுப்பணைகள், 1,369 கசிவுநீர்க் குட்டைகள் உள்ளிட்ட 4,079 பணிகள் நடைபெற்றுள்ளதால், இப்பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது. வரும் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

19. 16 இலட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில், உலக வங்கி நிதியுதவியுடன், பொதுப்பணித்துறை உள்ளிட்ட பல்வேறு சார்புடைய துறைகள் மூலம் ரூபாய் 2,547 கோடி மதிப்பீட்டில் நீர்வள நிலவளத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 25 துணை வடிநிலப் பகுதிகளில் 5.9 இலட்சம் ஏக்கர் விளைநிலங்கள் பயன் பெறும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில், மேலும் 30 துணை வடிநிலப் பகுதிகளில் 4.55 இலட்சம் ஏக்கர் விளைநிலங்கள் பயனடையும் வகையில், திட்டப்

பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1,128 ஏரிகள் புனரமைக்கப் பட்டுள்ளன. மேலும் 1,674 ஏரிகள் வரும் நிதியாண்டில் புனரமைக்கப்படும். இத்திட்டத்திற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 439 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



20. தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் காவிரி நீர்ப்பாசனப் பகுதிகளில் உள்ள வாய்க்கால்களில், தூர் அகற்றும் பணி இந்த ஆண்டில் மார்ச் திங்கள் இறுதியில் தொடங்கப்பட்டு மே திங்களுக்குள் முடிக்கப்படும்.

21. இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டம் கஞ்சம்பட்டி ஓடையின் குறுக்கே ஓர் அணைக்கட்டு கட்டி, 20 கிலோமீட்டர் நீள புதிய கால்வாய் அமைத்து, அதன் மூலம் சாயல்குடி உள்ளிட்ட 43 குளங்களுக்கு நீர்வரத்து வசதி செய்யும் திட்டம் ரூபாய் 18 கோடி மதிப்பீட்டில், விரைவுபடுத்தப்பட்ட நீர்ப்பாசன மேம்பாட்டுத் திட்டத்தின் (Accelerated Irrigation Benefits Programme) கீழ் மேற்கொள்ளப்படும். இதனால் 4,200 ஏக்கர் நிலங்கள் பயனடையும்.

22. பரம்பிக்குளம் அணையிலிருந்து, திருமூர்த்தி அணைக்கு நீரைக் கொண்டு வரும் சமதளக் காண்டூர் கால்வாய், பரம்பிக்குளம் – ஆழியாறு பாசனத் திட்டத்தின் உயிர்நாடியாக விளங்குகிறது. 45 ஆண்டுகளுக்கு முன்னதாக அமைக்கப்பட்ட இக்கால்வாய் மூலமாகத் திருப்பூர் மாவட்டத்தில் 2,97,000 ஏக்கரும், கோவை மாவட்டத்தில் 80,000 ஏக்கரும் ஆக மொத்தம் 3,77,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. பழமையான இக்கால்வாயின் நீர் கொள்திறன் குறைந்து வருவதையும், அடிக்கடி உடைப்புகள் ஏற்பட்டு நீர் விநியோகம் மற்றும் மின் உற்பத்தி தடைபடுவதையும் கருத்தில் கொண்டு, இக்கால்வாயை முழுமையாகச் சீரமைக்கவேண்டும் என்று கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட விவசாயிகள் தொடர்ந்து கோரிவருகின்றனர். அவர்களுடைய இந்த நியாயமான கோரிக்கையை ஏற்று, **இக்கால்வாயை முழுமையாகப் புதுப்பிக்க ரூபாய் 127.5 கோடி மதிப்பீட்டிலான பெரும் திட்டத்தைச் செயல்படுத்த, இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தேவையான ஒப்புதல்கள் பெறப்பட்டு இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும். இதனால் கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 2 இலட்சம் விவசாயப் பெருமக்கள் பெரும் பலனடைவர்.**

23. உச்சநீதிமன்றம் 27.2.2006 அன்று வழங்கிய தீர்ப்பில், முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடி வரையில் உயர்த்துவதற்கு ஏற்ற வகையில் அணை வலுவாக உள்ளது என்று தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பினைச் செயல்படுத்துவதைத் தடுக்கும் நோக்குடன், கேரள அரசு ஒரு சட்டத்திருத்தத்தை இயற்றியது. அச்சட்டத் திருத்தம் அரசியல் சாசன அமைப்பிற்கு முரணானது என்று உத்தரவிடக் கோரி, தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் மீது விசாரணை செய்த அரசியல் சாசன அமர்வு, ஒய்வு பெற்ற உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி டாக்டர் A.S.ஆனந்த் அவர்களின் தலைமையில், ஓர் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவினை அமைக்க 18.2.2010 அன்று உத்தரவிட்டுள்ளது.

24. உச்சநீதிமன்றத்தின் முந்தைய விசாரணையின்போது, இப்பிரச்சினையில் எழுப்பப்பட்ட அனைத்து முக்கியமான இனங்களையும் கருத்தில் கொண்டு ஆணை பிறப்பித்துள்ள நிலையில், தற்போது மீண்டும் இக்குழு, உச்சநீதிமன்றத்தின் முன் இருதரப்பினரும் ஏற்கெனவே எடுத்துரைத்துள்ள இனங்கள் மட்டுமல்லாது மற்ற பிற இனங்களையும் இருதரப்பினரிடமிருந்தும் கேட்டு அறியலாம் என்றும், சான்றுகளை மேலும் பெறலாம் என்றும் உச்சநீதிமன்றம் பிறப்பித்துள்ள இந்த ஆணை உச்சநீதிமன்றத்திற்கு மட்டுமே உரித்தான தனிப்பட்ட நீதிமன்றத்தின் அதிகாரத்தினை, இந்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள குழுவிற்கு அதிகார ஒப்படைப்பு செய்வதாக அமையும் என்று தமிழக அரசு கருதுவதாலும், இரு தரப்பினரும் ஏற்கெனவே அளித்த சான்றுகள் பதிவு செய்யப்பட்டும், சிவில் வழக்கு விசாரணை முடிவுற்றுள்ளதுடன் மற்றும் அரசியல் சாசன அமர்வு முன் விசாரணை முடிவுறும் சூழ்நிலையில், நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழுவிடம் இருதரப்பினரும் மேலும் சான்றுகளை அளிக்கலாம் என இந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்ள இயலாததாலும், உச்சநீதிமன்றத்தின் 27.2.2006 ஆம் நாளிட்ட ஆணையில், அனைத்து முக்கிய இனங்களும் பரிசீலிக்கப் பட்டு முடிவு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள இந்தக் குழுவினை அமைப்பதற்காக, உச்சநீதிமன்றம் 18.2.2010 நாளன்று பிறப்பித்துள்ள ஆணையைத் திரும்பப் பெறவேண்டும் என்றும், இந்த வழக்கில் உச்சநீதிமன்றமே விசாரணையைத் தொடர்வதற்கான உரிய உத்தரவுகளை வழங்கவேண்டும் என்றும் கோரி, இடைக்கால மனு ஒன்றைத் தமிழக அரசு 8.3.2010 அன்று உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

## விலைவாசியும் பொது விநியோகத் திட்டமும்

25. உணவுப் பொருள்களின் விலையேற்றத்தால் சாதாரண, சாமானிய ஏழைமக்கள் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர் ஆகியோர் பாதிக்கப்படாமல் இருக்குமாறு பாதுகாக்கப்படுவதை, இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து தொடர்ந்து உறுதி செய்து வந்துள்ளது. தேர்தல் வாக்குறுதியின்படி கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கியதோடு, அதனை மேலும் குறைத்து, 15.9.2008 இல் இருந்து, ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் என இந்தியாவிலேயே மிகக் குறைந்த விலையில் பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கி வருகிறது. பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் விலைகள் உயரும் போக்கைக் கூர்ந்து கண்காணித்து, 2007 ஆம் ஆண்டு மே திங்களிலிருந்தே துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் ஆகியவற்றை மானிய விலையில் நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கும் திட்டத்தைத் தொடங்கிச் செயல்படுத்தி வருகிறது. இதற்காக, துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவற்றை வெளிநாடுகளி லிருந்து இறக்குமதி செய்தும் பிற மாநிலங்களிலிருந்து வாங்கியும் இப்பொருள் களின் சீரான விநியோகம் உறுதி செய்யப் பட்டுள்ளது. பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் ஆகியவற்றுக்கு மதிப்புக் கூட்டு வரி விலக்கும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், 'மலிவு விலையில் மளிகைப் பொருள்' வழங்கும் திட்டத்தின் கீழ், 10 மளிகைப் பொருள்கள் ரூபாய் 50க்கு வழங்கப்பட்டு வருகின்றன.

26. இவ்வாறு நமது நாட்டில் எந்த மாநிலமும் செய்யாத அளவிற்கு, 2009–2010 ஆம் நிதியாண்டில் ரூபாய் 4,000 கோடி நிதி ஒதுக்கி, நியாயவிலைக் கடைகள் மூலம், பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் உணவுப் பொருள்களை அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் இந்த அரசு வழங்கி வருகிறது என்பதில் பெருமிதம் கொள்கிறோம். பருப்பு வகைகள் மற்றும் சர்க்கரை ஆகியவற்றின் விலை குறைந்து வருவதையும் கருத்தில் கொண்டு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் உணவு மானியத்திற்காக ரூபாய் 3,750 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

## மாநில சுயாட்சி

27. ‘பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்திட – மாநிலங்கள் வலிமையோடு இருந்தால்தான், இந்தியப் பேரரசும் வலிமையாக இருக்க முடியும் என்ற தத்துவத்தை உறுதிப் படவும் உளப்பூர்வமாகவும் எடுத்துச் சொல்லி எழுப்புகிற முழக்கம்தான் மாநில சுயாட்சி’ என்றும், ‘மாலை தங்கத்தால் ஆனதாயினும், மரகதமணிகளால் ஆனதாயினும் – ஒவ்வொரு மணியையும் இணைத்திடுகின்ற ‘கொக்கி’ வலிமையாக இருந்தால்தான் மாலைக்கு வலிவு. அந்த வலிவுக்கு நாம் வைத்துள்ள பெயர்தான் மாநில சுயாட்சி’ என்று அண்மையில் முதலமைச்சர் கலைஞர் கூறியுள்ளதை, இங்கு நினைவு கூர்ந்து மக்களுக்கு அருகேயிருந்து அவர்களுக்குப் பணியாற்றிவரும் மாநில அரசுகளுக்கு உரிய அதிகாரங்களை அளித்திடவும், மாநில அரசுகளின் அதிகாரங்களைப் பறிக்கும் வகையில் பொதுப் பட்டியலில் (Concurrent List) உள்ள பல்வேறு பொருண்மைகளுக்கு, உதாரணமாக, ஆசிரியர் பயிற்சி, உயர்கல்வி போன்றவற்றில், மைய அரசு சட்டம் இயற்றும் போக்கைத் தவிர்த்திடவும் மைய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இந்த வகையில், தேசிய உயர்கல்வி ஆணையம் என்ற ஒருமை அமைப்பை உருவாக்கி, உயர்கல்வித் தொடர்பான அதிகாரங்கள் அனைத்தையும் மையப்படுத்தும் முயற்சியைக் கைவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம். அதன்மூலம் அதிகாரங்களைப் பரவலாக்குவது மாநில சுயாட்சியின் ஒரு கூறேயன்றி, அதுவே மாநில சுயாட்சி ஆகாது என்பதையும் தெளிவுபடுத்தியிருக்கிறோம். நமது நாட்டில் உள்ள மாநிலங்களுள், வளர்ச்சிப் பாதையில் வெவ்வேறு நிலைகளில் உள்ள பல்வேறு மாநிலங்களின் வேறுபடும் தேவைகளையும், தனிச் சூழல்களையும் கருத்தில் கொண்டும், மைய அரசு மாநில அரசுகளைக் கலந்து ஆலோசித்தும், அந்தந்த மாநிலங்களுக்கு ஏற்புடையவாறு, தேவைக்கேற்ப மாநில அரசுகளே மாற்றி அமைக்கக்கூடிய (flexibility) திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த வேண்டுகிறோம்.

28. பதின்மூன்றாவது நிதிக் குழுவின் அறிக்கையும் மற்றும் அந்த அறிக்கையை ஆய்வு செய்து மைய அரசு எடுத்த முடிவுகளின் தொகுப்பு அறிக்கையும் 25.2.2010 அன்று பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின், பகிர்ந்தளிக்கத்தக்க நிகர வரி வருவாயில் மாநில அரசுகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும் விழுக்காடு, ஏற்கனவே இருந்த 30.5 விழுக்காட்டிலிருந்து 32 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் ஒட்டுமொத்தமாக மாநில அரசுகளுக்கு மைய அரசின் வரி வருவாயில் கூடுதல் பங்கீடு கிடைக்கும் என்பது வரவேற்கத்தக்கதே. அதே நேரத்தில், இந்த மொத்தப் பங்கீட்டினை மாநிலங்களுக்கிடையே பிரித்து வழங்கும் போது, தமிழகத்தின் பங்கு தற்போதுள்ள 5.305 விழுக்காடு என்பது 4.969 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. தென்னக மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களுக்கும் அவர்களுக்குரிய பங்கு விழுக்காடு குறைக்கப்பட்டுள்ளது. மக்கள் நலத் திட்டங்களையும், கட்டமைப்பு வசதித் திட்டங்களையும் சிறப்பாகத் தொடர்ந்து மேற்கொண்டுவரும் தென்னக மாநிலங்களுக்கு இவ்வரிப் பங்கீடு விழுக்காட்டைக் குறைத்திருப்பது ஒரு தண்டனை போல் தெரிவதால் வேதனை அளிக்கிறது. அதே நேரத்தில் தமிழக அரசின் கோரிக்கைகளை ஏற்று, வரிப்பங்கீடு தவிர, பிற பல்வேறு செலவினங்களுக்கு வழங்கும் ஐந்தாண்டு மானியமாக (2010–2015 ஆண்டுகளில்) ரூபாய்

11,367 கோடி பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பன்னிரெண்டாவது நிதிக்குழுவால் 2005 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை, பல்வேறு செலவினங்களுக்கு பரிந்துரைக்கப் பட்ட ரூபாய் 4,135 கோடியை ஒப்பிடும்போது, பதின்மூன்றாவது நிதிக்குழுவால் பரிந்துரைக் கப்பட்டுள்ள ரூபாய் 11,367 கோடி மானியம் என்பது சற்று ஆறுதல் அளிக்கிறது. இம்மானியத் தொகையில், உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியமாக ரூபாய் 5,456 கோடியும், தொடக்கக்கல்விக்கு ரூபாய் 700 கோடியும், நீதித்துறை மேம்பாட்டுக்கு ரூபாய் 252 கோடியும், சாலை பராமரிப்புக்கு ரூபாய் 1,865 கோடியும், தமிழக அரசு வேண்டுகோள் விடுத்த குறிப்பிட்ட தேவைகளுக்கான தொகை ரூபாய் 1,300 கோடியும் அடங்கும்.


29. நகர்ப் பகுதிகளில் குடிசைகளை அகற்றி அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட ரூபாய் 300 கோடியும், கடலரிப்புத் தடுப்புப் பணிகளுக்காக ரூபாய் 200 கோடியும், திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்டங்களில் உள்ள சாயத் தொழிற்சாலைகளின் சுத்திகரிக்கப்பட்ட உப்பு நீரைக் கடலுக்குக் கொண்டு செல்லும் திட்டத்திற்கு ரூபாய் 200 கோடியும், தமிழ்நாட்டின் பாரம்பரிய நீர்நிலைகளைப் புனரமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 200 கோடியும், தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பழைமை வாய்ந்த கோயில்களைப் பழைமை மாறாமல் புதுப்பித்திடும் திட்டத்திற்கு ரூபாய் 100 கோடியும், அரசு மருத்துவமனைகள் கட்டமைப்பு மேம்பாட்டுக்காக ரூபாய் 200 கோடியும், காவல்துறை பயிற்சிக் கட்டமைப்பு மேம்பாட்டுக்கு ரூபாய் 100 கோடியும், ஆக மொத்தம் ரூபாய் 1,300 கோடி மானியம் தமிழக அரசின் வேண்டுகோளின் அடிப்படையில் வழங்கியமைக்காக, 13வது நிதிக்குழுவிற்கும், மைய அரசுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

## சேது சமுத்திரத் திட்டம்

30. தமிழ்நாட்டின் பொருளாதார வளத்திற்கு வலு சேர்க்கவல்லதும் வளம் சேர்க்கும் வாய்ப்பு நிறைந்ததுமான சேது சமுத்திரத் திட்டப் பணிகளை மேற்கொள்வதில் ஏற்பட்டுள்ள தடைகளை நீக்கி விரைவில் நிறைவேற்றித்தர வேண்டும் என்று மைய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

## இலங்கைத் தமிழர் நலன்

31. இலங்கைத் தமிழர்கள் சம உரிமைகளைப் பெற்று நலமாக வாழ வழிவகுக்கும் அரசியல் தீர்வை விரைவில் எய்திடத் தேவையான முயற்சிகளை இந்தியப் பேரரசு மேலும் முனைப்புடன் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறோம். இலங்கையில் நிகழ்ந்த போரினால் வாழ்வாதாரங்களை இழந்த இலங்கைத் தமிழர்கள், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் எடுத்த பெருமுயற்சியினால், முகாம்களிலிருந்து தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்று மீண்டும் குடியமர வழிவகுக்கப்பட்டது. முகாம்களில் இன்னும் வசிக்கும் எஞ்சிய தமிழர்களும், தங்கள் சொந்த இடங்களுக்கு விரைவில் திரும்பத் தேவையான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள, மைய அரசு ஆவன செய்யவேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். தமிழகத்தில் பல்லாண்டுகளாக முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் நலன்



கருதி அவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை இரட்டிப்பாக்கியது மட்டுமல்லாமல், இந்த முகாம்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், வீடுகள் கட்டிக் கொடுக்கவும் ரூபாய் 100 கோடி நிதி அறிவிக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவர்களுக்கு நமது நாட்டிலேயே நிரந்தரமாக வாழ, வாழ்வுரிமை வழங்கப்பட, மத்திய அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளோம்.

## சட்டம் மற்றும் ஒழுங்கு

32. தமிழகத்தில் பயங்கரவாதம், தீவிரவாதம் சிறிதும் தலையெடுக்காமல் இருந்திட இந்த அரசு மிகவும் விழிப்புடன் இருந்து வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்றபின் கடந்த நான்காண்டுகளில் 15,021 காவலர் மற்றும் 923 துணை ஆய்வாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 18 புதிய காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதுதவிர, 47 புறகாவல் நிலையங்கள் முழுநேர காவல் நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. காவல் துறையை நவீன மயமாக்குவதற்கு முன்னுரிமை அளித்து, திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 4 ஆண்டுகளில் ரூபாய் 353 கோடி செலவில் 7,455 காவலர் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் மேலும் 2,000 காவலர் குடியிருப்புகள் ரூபாய் 120 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். 2005–2006 ஆம் ஆண்டு காவல் துறைக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபாய் 1,346 கோடி செலவினம் என்பது, 2010–2011 ஆம் ஆண்டில் ரூபாய் 2,962 கோடி ஒதுக்கீடாக உயர்த்தப்பட்டுள்ளது.

## நீதிமன்றங்கள்

33. உச்ச நீதிமன்ற நீதியரசர்களும் பிற மாநில உயர்நீதிமன்ற நீதியரசர்களும் பாராட்டும் வகையில், முன்னர் எப்போதும் இல்லாத அளவிற்கு, இந்த அரசு இதுவரை ரூபாய் 254 கோடி மதிப்பீட்டில் நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளின் குடியிருப்புகள் கட்ட ஒப்புதல் அளித்துள்ளது. நீதி நிர்வாகத்திற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 511 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பதின்மூன்றாம் நிதிக்குழு பரிந்துரைகளின்படி, வரும் ஐந்து ஆண்டுகளில் ரூபாய் 252 கோடி, நீதித் துறை மேம்பாட்டுக்கு செலவிடப்படும்.



## பள்ளிக் கல்வி

34. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் ஒட்டுமொத்த ஊதியம் பெற்று வந்த 42,924 ஆசிரியர்களுக்குக் கால முறை ஊதியம் வழங்கியுள்ளது. கடந்த நான்காண்டுகளில் 64,096 ஆசிரியர்கள், அரசு பள்ளிகளில் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 341 புதிய தொடக்கப்பள்ளிகள் துவங்கப்பட்டுள்ளன.



2,408 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 445 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 435 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. **மேலும் வரும் கல்வியாண்டில் 200 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 125 உயர்நிலைப் பள்ளிகள் மேல் நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்படும்.** நபார்டு நிதியுதவியுடன் ரூபாய் 767 கோடி மதிப்பீட்டில் 850 அரசு உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகள் பயனடையும் வகையில், கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகளுக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பள்ளிகள் பராமரிப்புப் பணிகளுக்காக ரூபாய் 36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித் துறை மூலம் 19,043 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில், கடந்த நான்காண்டுகளில் ரூபாய் 266 கோடி மதிப்பீட்டில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **வரும் நிதியாண்டில் மேலும் 5,000 பள்ளிகளில், ரூபாய் 85 கோடி மதிப்பீட்டில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

35. கல்வியில் கணினியின் பங்கை நன்குணர்ந்துள்ள இந்த அரசு 1,980 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 2,131 உயர் நிலைப் பள்ளிகளுக்கும் கணினிகளை வழங்கியுள்ளது. நடுநிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கும் திட்டம் 2008–2009 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு, இதுவரை 4,700 நடுநிலைப் பள்ளிகளுக்குக் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. **எஞ்சியுள்ள 2,000 நடுநிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்க, வரும் நிதியாண்டில் ரூபாய் 50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** எனவே 2010–2011 ஆம் நிதியாண்டு இறுதியில், அனைத்து அரசு நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல் நிலைப் பள்ளிகள் கணினிக் கல்வி வழங்கும் வசதி பெற்றிருக்கும் பெருமையைத் தமிழகம் பெறும்.

36. அனைவருக்கும் கல்வித் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் விளங்குகிறது. இத்திட்டத்தில் வரும் நிதியாண்டில் 45 விழுக்காடு செலவைத் தமிழக அரசு ஏற்கிறது. இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 540 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தேசிய இடைநிலைக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்திலும் 25 விழுக்காடு செலவைத் தமிழக அரசு ஏற்கிறது. அதற்காகத் தமிழக அரசின் பங்காக ரூபாய் 150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் புதிய உயர்நிலைப் பள்ளிகள், மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்படும்.

37. **பெண்களில் எழுத்தறிவு பெற்றவர்கள் 50 விழுக்காட்டுக்கும் குறைவாக உள்ள மாவட்டங்களில், 'படிக்கும் பாரதம்' என்னும் புதிய திட்டத்தை மைய அரசு அறிவித்துள்ளது. மைய அரசு நிதியுதவி மற்றும் மாநில அரசின் நிதிப் பங்கேற்புடன்,**

**தமிழகத்தில் விழுப்புரம், பெரம்பலூர், சேலம் மற்றும் ஈரோடு ஆகிய 4 மாவட்டங்களில் ரூபாய் 68 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் வரும் நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்படும்.**

38. மாணவர்கள் அனைவரும் தரமான மற்றும் சீரான கல்வியைப் பெறுவதை உறுதி செய்யும் வகையில், இந்த அரசு சமச்சீர் கல்விச் சட்டத்தை இயற்றியுள்ளது. அதன்படி பொதுவான பாடத்திட்ட வாரியம் அமைக்கப்பட்டு வகுக்கப்பட்டுள்ள பொதுப்பாடத் திட்டம் வரும் கல்வியாண்டில் பயிற்றுவிக்கப்படும். தொடக்கத்தில் முதல் மற்றும் ஆறாம் வகுப்புகளில் பொதுப்பாடத் திட்டத்தின் கீழ், புதிய பாட நூல்கள் அறிமுகப்படுத்தப்படும். அடுத்து வரும் ஆண்டில் மற்ற வகுப்புகளுக்கும், பொதுப் பாடத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

**39. மாணவர்கள் தங்களது ஆங்கில அறிவை மேம்படுத்த ஏதுவாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் 10 இலட்சம் ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் இலவசமாக 'ஆங்கிலம்–ஆங்கிலம்–தமிழ் அகராதி' வரும் கல்வியாண்டிலிருந்து ஆண்டுக்கு ரூபாய் 10 கோடி செலவில் தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் வழங்கப்படும்.**

40. பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டைச் சிறப்பிக்கும் வகையில் சர்வதேசத் தரத்திலான நூலகம் ஒன்று சென்னையில் ரூபாய் 172 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. இந்நூலகம் கட்டும் பணி இந்த ஆண்டு ஜூன் திங்களில் நிறைவுற்றுப் பயன்பாட்டுக்கு வரும். மொத்தமாகப் பள்ளிக் கல்விக்கு ரூபாய் 10,148 கோடி இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## உயர்கல்வி

41. இந்த அரசு பொறுப்பேற்ற பின், அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் மூலம் 11 புதிய பொறியியல் கல்லூரிகளும், 7 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் தொடங்கப்பட்டுள்ளன. கோவை, திருச்சி மற்றும் திருநெல்வேலியைத் தலைமையிடங்களாகக் கொண்டு அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. **மதுரை, திண்டுக்கல், தேனி, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள பொறியியல் கல்லூரிகளுக்காக மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு, அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் வரும் நிதியாண்டில் தொடங்கப்படும். விழுப்புரத்தில், திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் பட்ட மேற்படிப்பு விரிவாக்க மையம் ஒன்று உருவாக்கப்படும். இதன் மூலம் விழுப்புரம் மற்றும் இதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் பட்ட மேற்படிப்பினைத் தொடரும் வாய்ப்பினைப் பெறுவர். மத்திய அரசின் நிதியுதவியுடன் 4 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் புதுக்கோட்டை, தேனி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் தொடங்கப்படும். மத்திய அரசு நிதியுதவியுடன் 7 புதிய பலதொழில்நுட்பக் கல்லூரிகள் வரும் கல்வியாண்டில் தொடங்கப்படும். மேலும் மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் ஒரு பலதொழில்நுட்பக் கல்லூரியும் வரும் கல்வியாண்டில் தொடங்கப்படும்.**

42. இந்த அரசு பொறுப்பேற்றபின் இதுவரை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2,515 விரிவுரையாளர்களும், அரசு பொறியியல் மற்றும் பலதொழில்நுட்பக் கல்லூரிகளில் 279 விரிவுரையாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அரசு கல்லூரிகளிலும் பலதொழில்நுட்பக் கல்லூரிகளிலும் சுழற்சி முறை (Shift system) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரசுக் கல்லூரிகளில் சுயநிதிப் பாடப்பிரிவுகள் கட்டணமில்லாத பொதுப் பிரிவுகளாக மாற்றப்பட்டுள்ளன. பொறியியல், மருத்துவம் போன்ற தொழில்நுட்பக் கல்விச் சேர்க்கைக்கான பொது நுழைவுத் தேர்வு முறை நீக்கப்பட்டுள்ளது. பட்டதாரி இல்லாத குடும்பங்களைச் சார்ந்த மாணவர்கள், கல்விக் கட்டணம் இன்றித் தொழில் கல்வி பயிலும் திட்டத்திற்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

43. 2007–2008ஆம் ஆண்டிலிருந்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணத்தை இந்த அரசுதான் ரத்து செய்தது. **வரும் கல்வியாண்டிலிருந்து அரசு கல்லூரிகளில் M.A., M.Sc., போன்ற முதுகலைப் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் ரத்து செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.** இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக மாணவர்கள் கட்டணச்செலவின்றி உயர்கல்வி பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**44. கடந்த இரண்டு ஆண்டுகளில் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்கள் மூலம் பண்ணுருட்டி, தஞ்சாவூர், திண்டுக்கல், தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய நகரங்களில் தொடங்கப்பட்ட புதிய பொறியியல் கல்லூரிகளுக்குத் தேவையான கட்டடங்கள் ரூபாய் 93 கோடி மதிப்பீட்டில் வரும் நிதியாண்டில் கட்டப்படும். வரும் நிதியாண்டில் அரசு பொறியியல் மற்றும் பலதொழில்நுட்பக் கல்லூரிகளில், 50 வகுப்பறைகள் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆய்வகங்கள் கட்டுவதற்கும், 19 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் ரூபாய் 3 கோடியே 89 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் ஒரு சிறப்புத் தகுதி மையம் (Centre of Excellence) அமைக்கப்படும்.** இதற்காக அரசு ரூபாய் ஒரு கோடி நிதியுதவி அளிக்கும். உயர்கல்வித் துறைக்கு இந்த வரவு– செலவுத் திட்டத்தில் ரூபாய் 1,751 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மக்கள் நல்வாழ்வு

45.கலைஞர் தலைமையிலான இந்த அரசின் நான்காண்டுச் சாதனைகளின் மணிமகுடமாக, கலைஞர் காப்பீட்டுத் திட்டம் திகழ்கிறது என்றால் மிகையாகாது. இந்தப் புரட்சிகரமான திட்டத்தில் ஒரு கோடியே 44 இலட்சம் ஏழை எளிய குடும்பங்கள் இதுவரை சேர்ந்துள்ளனர். இதுவரை 54,145 பேர் ரூபாய் 165 கோடி மதிப்பிலான உயிர்காக்கும் உயர் சிகிச்சை பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்கு அரசே காப்பீட்டுத் தொகை செலுத்துவதற்காக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 750 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



46. கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தைப் போன்று அனைவரின் பாராட்டையும் பெற்ற மற்றொரு திட்டம் '108 என்று அழைக்கப்படும் இலவச அவசரகால மருத்துவ ஊர்திச் சேவைத் திட்டம்' ஆகும். இத்திட்டத்தின் கீழ் மாநிலமெங்கும் 385

ஊர்திகள் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன. இதன் மூலம், 3,50,906 பேர் பயனடைந்து, ஆபத்தான நிலையில் இருந்த 16,620 பேர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுக் காப்பாற்றப்பட்டுள்ளனர். இத்திட்டத்திற் காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 79 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



47. இந்த அரசு பொறுப்பேற்ற பின் 6,118 மருத்துவர்கள், 7,042 செவிலியர்கள், 2,980 மருத்துவமனைப் பணியாளர்கள் அரசு மருத்துவமனைகளில் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 117 புதிய ஆரம்ப சுகாதார மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. 'வருமுன் காப்போம்' திட்டத்தின் கீழ், நான்காண்டுகளில் 14,184 முகாம்கள் நடத்தப்பட்டு, ஒரு கோடியே 37 இலட்சம் பேர் பயன் பெற்றுள்ளனர்.

**48. இரத்த உறையாமையால் (Haemophilia) பாதிப்புக்குள்ளாகும் ஏழை நோயாளிகள் விலை உயர்ந்த மருந்துகளை தொடர்ந்து வாங்கி பயன்படுத்த இயலாதுள்ள குறையை நீக்க, இந்த மருந்துகள் அரசு மருத்துவமனைகள் மூலமாக இலவசமாகவே அளிக்கப்படும்.**

49. அரசு மருத்துவமனைகளின் கட்டமைப்பு வசதிகள் கடந்த நான்கு ஆண்டுகளில் மேம்படுத்தப் பட்டுள்ளன. உலக வங்கி நிதியுதவி யுடன் தமிழகத்தில் உள்ள, வட்ட மற்றும் மாவட்ட அரசு மருத்துவமனைகள் ரூபாய் 506 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு மேலும் ரூபாய் 627 கோடி கூடுதல் நிதியுதவி உலக வங்கியிடமிருந்து விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

50. கடந்த நான்கு ஆண்டுகளில், தருமபுரி, விழுப்புரம், திருவாரூர், சிவகங்கை மற்றும் பெரம்பலூர் மாவட்டத் தலைநகரங்களில் புதிய மருத்துவக் கல்லூரி – மருத்துவமனைகள் தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. **மேலும், வரும் நிதியாண்டில் திருவண்ணா மலையில் ஒரு புதிய அரசு மருத்துவக்கல்லூரி அமைக்கப்படும்.** ஏற்கெனவே உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குப் புதிய கட்டடங்கள், கருவிகள் மற்றும் மாணவர் விடுதிகளுக்கு ரூபாய் 543 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. 175 ஆண்டுகள் நிறைவு செய்த சென்னை மருத்துவக் கல்லூரிக்கு பழைய மத்திய சிறை வளாகத்தில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 28.2.2010 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. **இக்கல்லூரி மாணவர்களுக்குத் தேவையான விடுதிகளும், கூட்ட அரங்கும் (Auditorium) 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் உள்ள புற்றுநோய்த் துறை, உயர்மையமாக தரமுயர்த்தப்படும் (Institute of Oncology). இதற்காக ரூபாய் 17 கோடி மதிப்பீட்டில் 150 உள்நோயாளிகள் தங்கிச் சிகிச்சைபெறும் வசதி கொண்ட புற்றுநோய் மையம் கட்டப்படும். மதுரை அரசு இராஜாஜி**

**மருத்துவமனையில் உள்ள மயக்க மருந்தியல் துறை இந்தியாவிலேயே மிகப் பெரிய மயக்க மருந்தியல் துறை ஆகும். இத்துறை உயர்மையமாக தரம் உயர்த்தப்படும் (Institute of Anaesthesia).**

51. அரசு மருத்துவமனைகள் பராமரிப்புப் பணிகளுக்காக ரூபாய் 80 கோடியும், மருந்துகள் வாங்குவதற்காக ரூபாய் 236 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூபாய் 3,889 கோடி, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


### மின்சாரம்

52. இந்த அரசு பொறுப்பேற்றபின் தனியார் துறையையே நம்பியிராமல், தமிழ்நாடு மின்சார வாரியமே சொந்தமாகப் பொதுத் துறையில் மின் உற்பத்தித் திட்டங்களை நிறுவ முன்னுரிமை அளிக்கப்பட்டு, அதற்கேற்ப, 1,200 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட, வடசென்னை அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம்; மேட்டூரில் 600 மெகாவாட் விரிவாக்கத் திட்டம் ஆகியவற்றுக்கான பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதல் அலகு வரும் நிதியாண்டில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வரும் நிதியாண்டில் தமிழ்நாடு மின்வாரியம், மைய அரசின் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சித் திட்டங்கள் மூலமாக 1,400 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கூடுதலாக நிறுவப்படும்.

## தொழில் துறை

53. இந்த அரசின் வெளிப்படையான அணுகுமுறையினாலும், முதலீடுகளைத் தமிழகத்திற்கு ஈர்ப்பதற்கு உரிய சலுகைகளை வழங்கி மிக விரைவாக ஒப்புதல் அளிப்பதாலும், புதிய தொழில்கள் அதிக அளவில் நிறுவப்படும் மாநிலங்களில், முன்னணி மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது. கடந்த நான்காண்டுகளில் 37 புதிய தொழிற்சாலைகளை ரூபாய் 46,091 கோடி முதலீட்டில் தமிழகத்தில் நிறுவ, தொழில் முனைவோர் முன்வந்துள்ளனர் என்பது, இந்த அரசின் தொழிற் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாகும். இம்முதலீட்டின் காரணமாக சுமார் 2 இலட்சத்து 22 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். கடந்த நான்கு ஆண்டுகளில் அப்பல்லோ டயர்ஸ், MRF நிறுவனம், ATC டயர்ஸ் மற்றும் பிரான்சு நாட்டின் டயர் தயாரிப்பு நிறுவனமான மிஷலின் ஆகிய நிறுவனங்கள், தமிழ்நாட்டில் டயர்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை நிறுவி வருவதைத் தொடர்ந்து, அண்மையில் JK டயர்ஸ் நிறுவனமும் ரூபாய் 1500 கோடி முதலீட்டில், ஒரு டயர் தயாரிப்புத் தொழிற்சாலையை திருப்பெரும்புதூர் அருகில் அமைக்க முன்வந்துள்ளது. டயர் தயாரிப்புத் தொழிலில் தமிழகம் ஒரு முன்னணி மாநிலமாக மாறியுள்ளதை இந்த முதலீடுகள் உறுதிப்படுத்துகின்றன. மஹிந்திரா குழுமம் ரூபாய் 1,800 கோடி முதலீட்டில் வாகனத் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அருகில் அமைக்கக் கருதியுள்ளது. ரூபாய் 4,500 கோடி முதலீட்டில் ஆண்டொன்றுக்கு நான்கு இலட்சம் கார்கள் தயாரிக்கும் திறன்கொண்ட ரெனோல்ட் நிசான் கார் தொழிற்சாலை காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஒரகடத்தில் நிறுவப்பட்டு 17.3.2010 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. **விழுப்புரம் மாவட்டத்தில், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) மூலம் ஒரு தொழில் பூங்கா (Industrial Park) அமைக்கப்படும்.**

54. தமிழக மெங்கும் புதிய தொழில்கள் பரவலாக அமைவதை ஊக்குவிக்கும் வகையில், தொழில்வளத்தில் பின்தங்கிய பகுதிகளில், குறிப்பாக தென் மாவட்டங்களில் நிறுவப்படும் தொழில்களுக்கு கூடுதல் சலுகைகள் அளிக்கப் படுகின்றன. இதன் பயனாக, சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில், ரூபாய் 1,600 கோடி முதலீட்டில், வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் மற்றும் வீடுகளில் பயன்படுத்தப்படும் மின்னணுப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவ வீடியோகான் குழுமம் முன்வந்துள்ளது. இந்தோனேஷியா மற்றும் ஹாங்காங் நாடுகளைச் சார்ந்த சுந்தரேஸ்வரர் உலோகக்



கலவைகள் நிறுவனம், மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் டிராக்டர்கள், உருக்குக் கலவைகள் போன்றவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை ரூபாய் 2,200 கோடி முதலீட்டில் நிறுவ முன்வந்துள்ளது. இதே போன்று, ரூபாய் 680 கோடி முதலீட்டில், திண்டுக்கல் மாவட்டத்தில், சிமெண்ட் உற்பத்திக்கான இரண்டாவது விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்த செட்டிநாடு சிமெண்ட் நிறுவனம் முன்வந்துள்ளது. இவை தவிர, தூத்துக்குடி மாவட்டத்தில், 'கோஸ்டல் எனெர்ஜென்' என்ற நிறுவனம், ரூபாய் 5,000 கோடி முதலீட்டில் 1,200 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட அனல்மின் உற்பத்தி நிலையத்தை நிறுவி வருகிறது.

## சிறு தொழில்

55. அதிக அளவில் வேலை வாய்ப்பை அளிக்கவல்ல சிறு தொழில்களுக்கு ஏராளமான சலுகைகள் உள்ளடக்கிய புதிய சிறுதொழில் கொள்கையை இந்த அரசு அறிவித்துச் செயல்படுத்தி வருகிறது. தொழிற் பேட்டைகளின் கட்டமைப்பை மேம்படுத்து வதற்கும் மற்றும் குறிப்பிட்ட தொழில்கள் அதிக எண்ணிக்கையில் அமைந்துள்ள பகுதிகளில், அத்தொழில்களுக்குத் தேவையான பொதுக்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப வசதிகள் ஆகியவற்றை அளிப்பதற்கு முன்னுரிமை அளித்திடும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறுதொழில் துறைக்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 98 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தகவல் தொழில்நுட்பம்

56. உலகப் பொருளாதாரம் மந்தமாக இருக்கும் காலகட்டத்தில் கூட, தமிழகத்தில் உள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் ஏற்றுமதி தொடர்ந்து ஏறுமுகமாகவே உள்ளது. 2007–2008ஆம் ஆண்டில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மென் பொருளின் மதிப்பு, ரூபாய் 28,426 கோடியாக இருந்தது 2008–2009 ஆம் ஆண்டில் 36,680 கோடியாக உயர்ந்துள்ளது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மீண்டும் அதிக அளவில் பொறியாளர்களையும் பட்டதாரிகளையும் நியமனம் செய்யத் தொடங்கியிருப்பது தமிழக இளைஞர்களுக்கு, இத்துறையில் வேலைவாய்ப்புகள் தொடர்ந்து கிடைப்பதற்கு வழி வகுத்துள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறையில் பெருமளவில் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகள் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக்கப்பட வேண்டும் என்ற இந்த அரசின் கொள்கைக்கேற்ப, கோவை, மதுரை, திருச்சி போன்ற மாநகராட்சிகளிலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ரூபாய் 380 கோடி மதிப்பீட்டில்

கோவையில் உருவாக்கப்பட்டு வரும் 'டைடெல்' தகவல் தொழில்நுட்பப் பூங்கா, வரும் மே திங்களில் நிறைவுறும்.

**57. தமிழக அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த தலைமை அலுவலகங்கள், மாவட்ட அளவிலான அலுவலகங்கள், கோட்ட, வட்டார அளவிலான அலுவலகங்கள் ஆகியவற்றை இணையம் மூலம் இணைக்கும் தமிழ்நாடு பெரும் பரப்பு வலை இணைப்பு (Tamil Nadu State Wide Area Network) ரூபாய் 22 கோடி மதிப்பில் விரிவுபடுத்தப்படும்.**

58. வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம், செம்மையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் ஐந்து கட்டங்களில் ஒரு கோடியே 52 இலட்சத்து 80 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்ய ஆணையிடப்பட்டு, இதுவரை ஒரு கோடியே 8 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் பயனாளிகள் குடும்பங் களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய 44 இலட்சத்து 80 ஆயிரம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் 2010 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் வழங்கப்படும். இத்திட்டத்திற் காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சாலை மேம்பாடு

59. சாலைகளின் பராமரிப்புக்கும், மேம்பாட்டுக்கும் இந்த அரசு தொடர்ந்து உயர்முன்னுரிமை அளித்து வந்துள்ளது. கடந்த நான்காண்டுகளில் 55,100 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைப்பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பெருகிவரும் போக்குவரத்திற் கேற்ப 10,488 கிலோமீட்டர் நீளமுள்ள நெடுஞ்சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளன. முன்னர் எப்போதும் இல்லாத அளவில், 92 இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்கள், ரூபாய் 1,967 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலகவங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஆற்காடு முதல் திருவாரூர், மற்றும் நாகப் பட்டினம் முதல் தூத்துக்குடி வரையுள்ள 725 கிலோமீட்டர் நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகள், ரூபாய் 1,333 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளது.

60. சென்னைப் பெருநகர்ப் பகுதியில் சாலை வசதிகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் ரூபாய் 1,081 கோடி மதிப்பீட்டில் வெளிவட்டச் சாலை பணி தொடங்கப் படவுள்ளது. இப்பணி 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நிறைவடையும். இந்த ஆறுவழிச் சாலை சென்னை பெருநகர்ப் பகுதிகளின் வளர்ச்சிக்கு வழிவகுப்பதுடன், சரக்குப் போக்குவரத்துக்கு ஒரு மாற்றுச் சாலையாகவும் அமையும்.

61. சிங்கப்பெருமாள்கோயில் – ஒரகடம் – திருபெரும்புதூர் சாலை மேம்பாட்டுப் பணிகள், ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கு ரூபாய் 165 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **ஆறுவழித்தட ராஜீவ்காந்தி சாலை அமைக்கப் பட்டதைத் தொடர்ந்து இச்சாலையில் முக்கியமான சந்திப்புகளில் ரூபாய் 171 கோடி மதிப்பீட்டில் மேம்பாலங்கள் அமைக்கப்படும்.**

**62. சென்னைக்கு அடுத்தபடியாக மிக வேகமாக வளர்ந்துவரும் கோவை நகரத்தின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், நகரின் எதிர்கால வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், சென்னையைப் போன்றே கோவை நகரத்திற்கும், மேற்கு வெளி வட்டச்சாலை (Western Outer Ring Road) ஒன்றை அமைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. ரூ. 284 கோடி மதிப்பீட்டில் 26 கிலோ மீட்டர் நீளமுள்ள புதிய நான்கு வழிச்சாலையை அமைப்பதற்குரிய இந்தப் பெருந்திட்டம் பொதுத்துறை மூலமாக செயல்படுத்தப்படும்.** கோவை நகரின் முக்கியச் சாலைகளை இணைக்கக்கூடிய இந்தப் புதிய சாலையால் நகரின் மேற்குப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் குறைவதோடு, கோவையைச் சுற்றியுள்ள பகுதிகளான குனியமுத்தூர், பேரூர், வடவள்ளி, மருதமலை மற்றும் துடியலூர் போன்ற பகுதிகள்

எதிர்காலத்தில் வளர்ச்சி பெறவும் நல்ல வாய்ப்பாகும்.

63. **கோவை மற்றும் நீலகிரி மாவட்ட மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றும் நோக்கோடு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்ததற்கிணங்க, கோவை – மேட்டுப்பாளையம் – உதகை சாலையின் ஒரு பகுதியை, நான்குவழிப் பாதையாக தரம் உயர்த்த மத்திய அரசு தனது ஒப்புதலைத் தெரிவித்துள்ளது. இந்த விரிவாக்கப்பணிகள் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில், மாநில நெடுஞ்சாலைத் துறை மூலமாக உடனடியாக செயல்படுத்தப்படும்.** இதற்காகத் தமிழக அரசின் சார்பாக மத்திய அரசிற்கு நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## சாலைப் பாதுகாப்பு

64. சாலை விபத்துக்களைத் தவிர்க்கும் நோக்கத்துடன் விபத்து நேர்வதற்கு வாய்ப்புள்ள சாலைப்பகுதிகள் கண்டறியப் பட்டுத் தேவையான மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சாலை விபத்துக்களை ஆய்வு செய்து கணினியில் பதிவு செய்யும், சாலை விபத்து தகவல் மேலாண்மைத் திட்டம் (Road Accident Data Management System) நடைமுறைபடுத்தப் பட்டுள்ளது. மேலும், காவல்துறை, நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை ஆகிய தொடர்புடைய துறை அலுவலர்கள், ஒவ்வொரு சாலை விபத்து நேர்ந்த இடத்தையும் ஆய்வு செய்து அதன்மூலம் விபத்துக்களைத் தவிர்க்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கடந்த 2002 முதல் 2008 வரையிலான புள்ளிவிவரக் கணக்கின்படி, வாகனங்களின் எண்ணிக்கை 78 விழுக்காடு உயர்ந்துள்ள போதிலும், உயிரிழப்புகள் ஏற்படுத்திய விபத்துக்களின் எண்ணிக்கை, பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு 10,000 வாகனங்களுக்கும் 19 ஆக இருந்த நிலைமாறி, தற்போது 12 ஆகக் குறைந்துள்ளது என்று தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளை ஆய்வு செய்த, உலக வங்கிக் குழு பாராட்டியுள்ளது. சாலைப் பாதுகாப்பு நிதிக்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## போக்குவரத்து

65. கடந்த நான்காண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு, 12,137 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப் பட்டுள்ளன. **வரும் நிதியாண்டில் மேலும் 3,000 புதிய பேருந்துகள் வாங்கப்படும்.** இதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வீட்டுவசதி

66. தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில் ஏழை எளியோர் இன்னும் ஓலைக் குடிசைகளில் இயற்கைச் சீற்றங்களிலிருந்து பாதுகாப்பின்றி வாழ்ந்து வருகின்றனர். இந்த அவல நிலையை அறவே ஒழித்து கிராமப் பகுதிகளில் உள்ள ஓலைக் குடிசைகள் அனைத்தையும், நிரந்தர கான்கிரீட் வீடுகளாக

மாற்றி தமிழகக் கிராமங்களைக் குடிசைகளே இல்லாத கிராமங்களாக உருவாக்கும், புரட்சிகரத் திட்டமான கலைஞர் வீட்டுவசதித் திட்டம் 3.3.2010 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திருச்சியில் தொடங்கி வைக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக, வரும் 6 ஆண்டுகளில் ஊரகப் பகுதிகளில் உள்ள 21 இலட்சம் ஓலைக் குடிசைகளுக்கு மாற்றாக, நிரந்தர கான்கிரீட் வீடுகள் கட்டப்பட்டு, இந்தியாவிலேயே குடிசைகளே இல்லாத முதல் மாநிலமாக தமிழகம் விளங்கும். இத்திட்டத்தின் முதல் ஆண்டான வரும் நிதியாண்டில் 3 இலட்சம் வீடுகள், ரூபாய் 1,800 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். **இத்திட்டத்தின் கீழ், சாதிப் பாகுபாடின்றி ஓலைக் குடிசைகளில் வாழும் அனைவருக்கும் நிரந்தர வீடுகள் கட்டும் பணி, வரும் நிதியாண்டிலிருந்தே தமிழகத்தின் அனைத்து ஊராட்சிகளிலும் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 1,800 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**67. கலைஞர் வீட்டு வசதித் திட்டம் போன்றே, மத்திய அரசின் இந்திரா காந்தி வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் கட்டப்படும் குடியிருப்புகளுக்கான தொகையும், ரூபாய் 60,000 ஆக வரும் நிதியாண்டிலிருந்து மாநில அரசால் உயர்த்தப்படும். இத்திட்டத்தின் கீழும் வரும் நிதியாண்டில் ஒரு இலட்சம் வீடுகள் கட்ட மாநில அரசின் பங்காக ரூபாய் 262.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**68.** நகரப் பகுதிகளிலும் குடிசை களுக்கு மாற்றாக நிரந்தர வீடுகள், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புரப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கட்டப் படுகின்றன. வரும் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 60,000 வீடுகள் கட்டி முடிக்கப்படும்.

## நகர்ப்பகுதிகள் மேம்பாடு

**69.** மொத்த மக்கள் தொகையில் நகர்ப்பகுதிகளில் வாழ்வோரின் விழுக்காடு விகிதத்தில், நமது நாட்டிலேயே தமிழகம்தான் முதலிடத்தை வகிக்கிறது. பெருகி வரும் நகர்ப்புர மக்கள் தொகைக்கேற்ப, கட்டமைப்பு வசதிகளை அளிப்பதன் அவசியத்தை உணர்ந்து தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ், குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றல் திட்டங்கள், மழைநீர் வடிகால்கள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை, வீட்டுவசதி ஆகியவற்றுக்கான திட்டங்கள் ரூபாய் 9,271 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலகவங்கி, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு அமைப்பு, ஜெர்மனி நாட்டின் அமைப்பான KfW ஆகிய



நிதி அமைப்புகளிலிருந்து, ரூபாய் 2,728 கோடி நிதியுதவி பெற்று நகர்ப்புர கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

**70.** சென்னை மாநகர் மக்களின் குடிநீர்த் தேவைக்காக கடல் நீரைக் குடிநீராக்கும் இரண்டு பெருந்திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. மீஞ்சூரில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் குடிநீர் உற்பத்தி செய்யும் திட்டம் நிறைவுறும் நிலையில் உள்ளது. மற்றொரு திட்டத்திற்கான பணிகள் ரூபாய் 669 கோடி மதிப்பீட்டில், நெம்மேலியில்




அண்மையில் தொடங்கப்பட்டுள்ளன. **சென்னை மாநகரில் கோயம்பேட்டில் நாளொன்றுக்கு 120 மில்லியன் லிட்டர் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் நிலையம், ரூபாய் 130 கோடி மதிப்பீட்டில் வரும் நிதியாண்டில் கட்டப்படும்.** சென்னை மாநகராட்சியில் ரூபாய் 1,447 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மழைநீர் வடிகால்கள் மற்றும் வெள்ளத் தடுப்புப் பணிகள், இம்மாதம் தொடங்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்கப்படும்.


71. சென்னைப் பெருநகர்ப் பகுதியில் தற்போதைய மற்றும் வருங்காலப் போக்குவரத்து குறித்து சென்னை பெருநகர் வளர்ச்சி ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வு, முடிவாக ரூபாய் 88,200 கோடி முதலீட்டில் பல்வேறு போக்குவரத்து வசதிகளை உருவாக்கப் பரிந்துரைகள் செய்துள்ளது. இப்பரிந்துரைகளின் அடிப்படையில் வருகின்ற ஆண்டுகளில் சென்னைப் பெருநகரின் போக்கு வரத்துக் கட்டமைப்பு வசதி களைப் பெருக்க அரசு ஆவன செய்யும். **அண்ணா சாலையில் உள்ள சந்திப்புகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்குடன், மேம்பாலங்கள் ரூபாய் 500 கோடி மதிப்பீட்டில் சென்னை பெருநகர் வளர்ச்சி ஆணையத்தின் நிதி ஆதாரங்களைப் பயன்படுத்திக் கட்டப்படும்.**

72. சென்னை மாநகரின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்யக் கூடிய பெருந்திட்டமான மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கோயம்பேடு முதல் அசோக் நகர் வரையிலான உயர்த்தப்பட்ட வழித்தடம் (Elevated Viaduct) அமைப்பதற்கான கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது. அசோக் நகர் முதல் புனித தோமையர் மலை வரையிலும், சைதாப்பேட்டை முதல் இராணுவ அலுவலர் பயிற்சி மையம் வரையிலான உயர்த்தப்பட்ட வழித்தடங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் அண்மையில் முடிவு செய்யப் பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டவாறு, இத்திட்டத்தில் திருவொற்றியூர் இணைக்கப்படுவதற்கான ஆய்வுப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. மெட்ரோ ரயில் திட்டத்திற்குத் தமிழக அரசின் பங்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 600 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## குடிநீர் வசதி

73. ரூபாய் 1,929 கோடி திருத்திய மதிப்பீட்டில் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவியுடன் ஒப்புதல் அளிக்கப் பட்ட, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் முடிவடையும். இத்திட்டத்திற்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 400 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டத்திலுள்ள நகர்ப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ரூபாய் 1,800 கோடி மதிப்பீட்டில் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப் படும்.

74. வரும் நிதியாண்டில் 7,000 ஊரகக் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப் படும். மேலும் 5 நகராட்சிகள் மற்றும் 45 பேரூராட்சிகள் பயன் பெறும் வகையில், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டுப்



பயன்பாட்டுக்கு வரும். குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 1,183 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சி**

75. தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும், அடிப்படை வசதிகளை 5 ஆண்டுகளில் அளிக்கத் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டு வரும் "அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்" கீழ், கடந்த 4 ஆண்டுகளில் ரூபாய் 2,041 கோடி அரசு நிதியுதவியோடு 10,104 கிராம ஊராட்சிகளில் அடிப்படை வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 2,514 ஊராட்சிகளில் வரும் நிதியாண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, 2010–2011 ஆம் ஆண்டின் இறுதியில், இந்தியாவிலேயே நூலகம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய வசதிகளை அனைத்து ஊராட்சிகளும் பெற்ற முதல் மாநிலம் என்ற பெருமையைத் தமிழகம் பெறும். இத்திட்டத்திற்கு வரும் நிதியாண்டில் ரூபாய் 508 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

76. கடந்த நான்காண்டுகளில் நபார்டு நிதியுதவி, பாரதப் பிரதமர் கிராமச் சாலைகள் திட்டம் மற்றும் பன்னிரெண்டாவது நிதிக் குழு மானியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி, ரூபாய் 3,089 கோடி மதிப்பீட்டில் 22,758 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

77. மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூபாய் 3,002 கோடி மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பயனாளிகளுக்கான தினசரி ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் 2008–2009 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்திய மாவட்டங்களாக மத்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்தும் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் தொடர்ந்து தமிழகம் திகழ்கிறது. வரும் நிதியாண்டில் இத்திட்டம் ரூபாய் 2,500 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இந்த வரவு–செலவுத் திட்டத்தில் மாநில அரசின் பங்காக இத்திட்டத்திற்கு ரூபாய் 250 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

78. பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் அமைக்கும் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் 29 சமத்துவ புரங்கள் அமைக்கப்பட்டு, மேலும் 30 சமத்துவ புரங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. **வரும் நிதியாண்டில் எஞ்சிய 36 சமத்துவபுரங்கள் அமைக்கப்படும்.** இதற்காக ரூபாய் 75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

79. உலகவங்கி நிதியுதவியுடன் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 15 மாவட்டங்களில் உள்ள 2,515 ஊராட்சிகளில் வசிக்கும் வறியவரில் மிக வறுமையான குடும்பங்களின் வறுமையை நீக்கவல்ல, வருவாய் ஈட்டும் திட்டங்கள் ரூபாய் 717 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக ரூபாய் 184 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




வரும் நிதியாண்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூபாய் 7,701 கோடி அளிக்கப்படும். இது தவிர தொடக்கக்கல்வி, குடிநீர் வழங்கல், பொதுச் சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிப் பணிகளுக்காக உள்ளாட்சி அமைப்புகள் சார்பாக, அரசே மேற்கொள்ளும் செலவினங்களையும் சேர்த்து, இந்த அமைப்புகளுக்கு அளிக்கப்படும் நேரடி நிதியுதவியுடன் அவை மேற்கொள்ளவேண்டிய பணிகளையும் அரசே மேற்கொண்டு செய்வதால், ஏற்படும் மொத்தச் செலவுத் தொகை, மாநில அரசின் சொந்த வரி வருவாயில் 33 விழுக்காடு என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

80. தற்போது தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சமுதாயக் கூடங்கள் உள்ளன. இருப்பினும் கிராமப் பகுதிகளில் உள்ள ஏழை எளியோரின் குடும்ப மங்கல விழாக்களுக்கும், பொது நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தக்கூடிய சமுதாயக் கூடங்களை அனைத்து ஊராட்சிகளிலும் அமைத்திட வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகிறது. **இதனை நிறைவேற்றும் வகையில் ஏற்கெனவே சமுதாயக் கூடம் அல்லது திருமண மண்டபம் இல்லாத அனைத்து ஊராட்சிகளிலும் தேவைக்கேற்ப, உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதின்மூன்றாவது நிதிக்குழுவின் நிதியுதவியைப் பயன்படுத்தி பொதுச் சமுதாயக் கூடங்கள் கட்டப்படும். இதுபோன்றே, நகர்ப்புரங்களில் தகுந்த இடவசதியைக் கண்டறிந்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலும் இத்தகைய சமூகக்கூட வசதிகள் உருவாக்கப்படும்.**

81. **உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கும் தற்போதைய நிதிப்பங்கீடான தமிழக அரசின் சொந்த வரி வருவாயில் 9.5 விழுக்காடு தொகை, வரும் நிதியாண்டில் 10 விழுக்காடாக உயர்த்தப்படும்.** நிதிப்பங்கீடு (Devolution), நேரடியாக மாற்றப்படும் வருவாய் (Assigned Revenue) மற்றும் திட்டங்களுக்கான நிதியுதவி (Assistance for Schemes) ஆகியவற்றின் கீழ்

## மகளிர் நலன்

82. தமிழ்நாட்டில் உள்ளாட்சி மன்றங்களில் மகளிருக்கு இடஒதுக்கீட்டை இந்த அரசு நடைமுறைப்படுத்தியதைத் தொடர்ந்து பாராளுமன்றத்திலும், சட்டமன்றப் பேரவைகளிலும் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற நமது நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், பாராளுமன்றத்திலும் சட்டப் பேரவைகளிலும் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க வகை செய்யும் அரசியல் சட்டத்திருத்த முன்வடிவை மத்திய அரசு உறுதியுடன் மாநிலங்களவையில் தாக்கல் செய்து நிறைவேற்றியதற்கு இந்த அரசின் மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். “மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் ஆதரவும் ஆலோசனையும் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் இந்தச் சட்டமுன்வடிவை இயற்ற முடிந்திருக்காது” என அண்மையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவராகிய திருமதி சோனியா காந்தி அவர்கள் நமது முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துள்ளார்கள். இந்த அரசியல் சட்ட

திருத்த முன்வடிவு மிக விரைவில் மக்களவையிலும் நிறைவேற்றப்படும் என உறுதியாக நம்புகிறோம்.

83. ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மகளிருக்கு வழங்கும் திருமண நிதி உதவியான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ், இந்த நான்காண்டுகளில் 2 இலட்சத்து 92 ஆயிரம் மகளிர், ரூபாய் 520 கோடி அளவுக்கு நிதியுதவி பெற்றுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித்தொகை இந்த அரசால் 2006–2007 ஆம் ஆண்டில் 10,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாகவும், 2008–2009 ஆம் ஆண்டில் 20,000 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. **ஏழை மகளிர்க்கு வாழ்வளிக்கும் இத்திட்டத்தில் அளிக்கப்படும் தொகையை மேலும் உயர்த்தி 25,000 ரூபாயாக வரும் நிதியாண்டிலிருந்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்திற்கு வரும் நிதியாண்டில் ரூபாய் 300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** கருவுற்ற தாய்மார்களுக்கு நிதியுதவி அளிக்கும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், கடந்த நான்காண்டுகளில் 19 இலட்சம் மகளிர், தலா ரூபாய் 6,000 வீதம் ரூபாய் 1,000 கோடி அளவுக்கு நிதியுதவி பெற்றுள்ளனர். வரும் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 360 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **மேலும், கருவில் உள்ள குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு இன்றியமையாததான அயோடின் சத்து கருவுற்ற பெண்களுக்குக் கிடைத்திடும் வகையில், அவர்களுக்கு தமிழ்நாடு உப்புக் கழகம் மூலமாக அனைத்து நியாயவிலைக் கடைகளிலும், அயோடின் கலந்த உப்பு (Iodised Salt) இலவசமாக வழங்கப்படும்.**



84. சமையல் எரிவாயு இணைப்பு இல்லாத ஏழைக் குடும்பங்களுக்கு இலவச எரிவாயு அடுப்பும், சமையல் எரிவாயு இணைப்பும் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூபாய் 381 கோடி செலவில், இதுவரை 17 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் கீழ் வரும் நிதியாண்டில் மேலும் 6 இலட்சம் குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூபாய் 140 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

85. கடந்த நான்காண்டுகளில் 17 இலட்சத்து 12 ஆயிரம் மகளிரைக் கொண்டு 1,11,728 புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. சுழல் நிதியாக, 2 இலட்சத்து 29 ஆயிரம் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூபாய் 229 கோடி வழங்கப் பட்டுள்ளது. மேலும் இந்த அரசு எடுத்த பெருமுயற்சியின் பயனாக, தமிழகத்தில் இயங்கிவரும் சுயஉதவிக் குழுக்கள், ரூபாய் 5,990 கோடி வங்கிக் கடனைப் பெற முடிந்தது. **வரும் நிதியாண்டில் மேலும் 50,000 புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்படும்.** குறிப்பாக நகரங்களில் குடிசைப்பகுதிகளில் குறைந்த அளவிலேயே மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பது கண்டறியப் பட்டுள்ளதால், **வரும் நிதியாண்டில் நகர்ப் புரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் மகளிரைக் கொண்ட சுயஉதவிக் குழுக்கள் அமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.**

**இதைப் போன்றே ஊரகப் பகுதிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் பங்கேற்கும் ஏழை மகளிரைக் கொண்ட சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப் படும்.** மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குத் தேவையான பல்வேறு உதவிகளை அளிப்பதற் காகத் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்திற்கு ரூபாய் 124 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## குழந்தைகள் நலன்

86. இந்த அரசு பொறுப்பேற்றபின் கடந்த நான்காண்டுகளில் 6,822 புதிய குழந்தைகள் மையங்களும், 4,940 குழந்தைகள் குறு மையங்களும் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றைச் சேர்த்து தமிழகத்தில் உள்ள 54,439 குழந்தைகள் மையங்கள் மூலம் 18 இலட்சம் குழந்தைகளும், 5 இலட்சம் கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் பயன் பெறுகின்றனர். **வரும் நிதியாண்டில் 9,045 சத்துணவு மையங்களுக்கான சமையலறைகள் ரூபாய் 200 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். சத்துணவு உட்கொள்ளும் 69 இலட்சம் குழந்தைகள் மற்றும் மாணவர்களுக்கு, வாரத்திற்கு மூன்று முட்டை வழங்கும் திட்டத்திற்கு ரூபாய் 178 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திற்கு ரூபாய் 891 கோடியும், எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கு ரூபாய் 924 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மாற்றுத் திறனாளிகள் நலன்

87. உடல் ஊனமுற்றோர் என்ற பட்டியலில் மனித சமுதாயத்தில் காது கேளாதவராய் – கண் தெரியாதவராய் – வாய் பேச முடியாதவர்களாய் – கைகால்களைப் பயன்படுத்த இயலாதவர்களாய் உள்ள அனைவருமே இடம் பெறுகிறார்கள். இவர்களைக் குறிப்பிட்ட அவயவங்களைப் பயன்படுத்த முடியாதவர்கள் என்று ஒதுக்கிவிடாமல் – அல்லது ஒரு தனிப் பட்டியலில் அவர்களைச் சேர்த்துவிடாமல், இழித்துரைப்பது போல் இன்று தோன்றுகிற பெயர்களான குருடர், செவிடர், நொண்டி, ஊனம், முடம், மனநோயாளி, என்றெல்லாம் அவர்களை அழைக்காமலும், பொதுவாக ஊனமுற்றோர் என்பதற்குப் பதிலாகவும்; ஒரு அவயவத்தின் செயல்பாட்டுக் குறையால், அவர்களுடைய மற்றொரு அங்கத்தின் திறன் இயற்கையாகவே மேலும் ஒரு பங்கு சிறப்புறுகிறது என்னும் அறிவியல் அடிப்படையில், அவர்களை எல்லாம் "மாற்றுத் திறனாளிகள்" என்று அழைக்கின்ற முறை, சில ஆண்டுகளுக்கு முன்பே அதாவது 2007ஆம் ஆண்டிலேயே, ஐக்கிய நாடுகள் சபையிலே விவாதிக்கப்பட்டு, அதன் தொடர்பான இணக்க ஒப்பந்தம் ஒன்று (convention) ஏற்கப்பட்டுக் கையெழுத்திடப்பட்டுள்ளது.

88. அந்த இணக்க ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டுள்ள நாடுகளில், ஏழாவது நாடாக இந்தியா இடம் பெற்றுள்ளது. **அந்த ஒப்பந்தப்படி கல்வி, மருத்துவ வசதி, வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு வாழ்வாதார உரிமைகள் அனைத்திலும், அவர்களுக்குரிய பங்கு பெற்றவர்களாகவும், சமூகத்தில் சம உரிமையும் வாய்ப்பும் பெற்றவர்களாகவும் வாழ வழி வகுக்க, இந்த அரசு ஆவன செய்யும். மேலும் 1995 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட ஊனமுற்றோருக்கான (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுப்பங்கேற்பு) சட்டத்தை ஐக்கிய நாடுகள் இணக்க ஒப்பந்தத்தின் அடிப்படையில் விரைவில் மாற்றி அமைக்க மைய அரசை வலியுறுத்துகிறோம்.**

89. **மாநில அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை இந்த "மாற்றுத் திறனாளிகள்" பெற்றிட நிர்ணயிக்கப்பட்டுள்ள வருவாய் உச்சவரம்பு முற்றிலும் நீக்கப்படும். மாற்றுத் திறனுடையோர் உயர்கல்வி பயில்வதற்கு ஏதுவாகக் கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்த இந்த அரசு, வரும் கல்வி ஆண்டிலிருந்து தனிக்கட்டணம் (Special fees) செலுத்துவதிலிருந்தும் விலக்கு அளிக்கும். அரசு மற்றும் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் 'மாற்றுத் திறனாளி' மாணவர் இல்லங்களில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு, உணவுச் செலவாக மாதம் ஒன்றுக்கு தற்போது அளிக்கப்பட்டு வரும்**

**ரூபாய் 200 உதவித் தொகை, ரூபாய் 450 ஆக உயர்த்தப்பட்டு இனி வழங்கப்படும்.**

90. மன நோயாளிகள் உள் நோயாளிகளாகத் தங்கிச் சிகிச்சை பெறும் சிறப்பு அரசு மனநல மருத்துவமனை, தமிழகத்தில் சென்னையில் மட்டும்தான் உள்ளது. தென் மாவட்டங்களில் உள்ள மன நோயாளிகளும் சிகிச்சை பெற இந்த மருத்துவமனைக்குத்தான் வரவேண்டியுள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு, **தென் மாவட்டங்களுக்குத் தனியாக ஒரு சிறப்பு அரசு மனநல மருத்துவமனை தேனி நகரில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.** மனநோய் வாய்ப்பட்டவர்களுக்குத் தங்கும் வசதி, மருத்துவ ஆலோசனை ஆகியவற்றை அளிக்கும் வகையில் மன நோய்வாய்ப்பட்டவர் களுக்கான மறுவாழ்வு இல்லங்களை அமைத்து நடத்தும் தொண்டு நிறுவனங் களுக்கு இந்த அரசு நிதியுதவி அளிக்கும். **இத்திட்டத்தின் கீழ், தமிழகத்தில் மூன்று மாவட்டங் களுக்கு ஒரு மறுவாழ்வு இல்லம் என்ற அடிப்படையில் 10 மறுவாழ்வு இல்லங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும்.** இதற்காக ஆண்டு தோறும் ரூபாய் ஒரு கோடி நிதி உதவியை இந்த அரசு அளிக்கும்.

91. இந்தியாவிலேயே முதல்முறையாக மாற்றுத் திறனாளிகளுக்கு சமூகப் பாதுகாப்பு அளித்து நலத்திட்ட உதவிகள் வழங்க தனி நல வாரியம் தமிழ்நாட்டில்தான் அமைக்கப் பட்டுள்ளது. தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ள இயலாத மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு, வருவாய் உச்சவரம்பின்றி 500 ரூபாய் வீதம் மாதாந்திர உதவித் தொகையை இந்த அரசு வழங்கி வருவதால் 50,000 பேர் பயன் பெற்று வருகின்றனர். கண் பார்வையற்றோர் மற்றும் இதர மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு உதவித் தொகைகள் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளன. அவர்கள் ஆசிரியப் பணிபுரிய சிறப்பு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. காது கேளாதோருக்குக் குழந்தைப் பருவத்தின் தொடக்கத்திலேயே கண்டறிந்து சிறப்புக் கல்வி அளிக்கும் பள்ளிகள் மாவட்டந்தோறும் தொடங்கப்பட்டுள்ளன. கை, கால் ஊனமுற்றோருக்குப் பயணச் சலுகைகளுடன், நாட்டிலேயே முதல்முறையாக மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் முதலான பல்வேறு உதவிக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. வேலைவாய்ப்பற்ற பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை வழங்கும் திட்டம், அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு 60,000 பேர் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர். இந்தியாவிலேயே முதல்முறையாக தசைச் சிதைவு (Muscular Dystrophy) நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிடும் வகையில் 2008–2009 ஆம் ஆண்டிலிருந்து 1,000 பேருக்கு மாத உதவித் தொகையாக 500 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

92. யானைக்கால் நோய்வாய்ப் பட்டவர்களுக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் சிகிச்சை அளிக்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. **எனினும் இந்நோயால் கடுமையாக பாதிக்கப்பட்டு**, கால், **கை போன்ற அவயவங்களை பயன்படுத்தவே முடியாத அளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ள நான்காவது வகை (Grade-IV) நோயாளிகளுக்கு மாத உதவித் தொகையாக ரூபாய் 400 வரும் நிதியாண்டில் தொடங்கி தொடர்ந்து வழங்கப்படும்.**

93. இவ்வாறு முன்னர் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிக நிதி ஒதுக்கி, இந்த அரசு மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் ஒளியேற்றும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. **2005–2006 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் நலனுக்குச் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 49 கோடி அளவாக இருந்ததை, வரும் நிதியாண்டில் ரூபாய் 176 கோடியாக உயர்த்தியுள்ளதுடன் மாற்றுத் திறனாளி களுக்கான தனித்துறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி மேற்பார்வையில் இயங்கும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

## முதியோர் மற்றும் ஆதரவற்றோர் நலன்

94. இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 9 இலட்சத்துக்கும்


மேற்பட்ட முதியோர், மாத உதவித் தொகையாக ரூபாய் 400 பெற்று வருகின்றனர். இத்திட்டத்திற்கு மைய அரசும் மாநில அரசும் சமமாக நிதி வழங்குகின்றன. இத்தோடு, மாதாந்திர உதவித் தொகை பெறும் ஒரு இலட்சம் ஆதரவற்ற மாற்றுத் திறனாளிகள், 6 இலட்சம் ஆதரவற்ற விதவையர், 1.69 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் ஒரு இலட்சம் ஆதரவற்ற பெண்கள் ஆகியோரைச் சேர்த்து, தமிழ்நாட்டில் மொத்தம் 19 இலட்சம் முதியோரும் ஆதரவற்றோரும் மாத ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். இந்த வரவு–செலவுத் திட்டத்தில் முதியோர் மற்றும் ஆதரவற்றோருக்கு மாத உதவித் தொகை வழங்க ரூபாய் 1,002 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மீனவர் நலன்

95. மீனவர் பெற்றிருந்த கடன்களை ரத்து செய்தும், மீன்பிடித் தடைக்காலத்தில் நிதியுதவி வழங்கியும், மீனவர் நல வாரியத்தை அமைத்தும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்க்ளுக்கு வலைகள், மிதிவண்டிகள், ஒளிவிளக்குகள், உயிர்காக்கும் கவச உடைகள், முதலுதவிப் பெட்டிகள் ஆகியவற்றை வழங்கியும், மீன்பிடித் துறைமுகங்களை மேம்படுத்தியும், மீன்கள் இறங்கு தளங்கள் (Fish landing Centres) போன்ற கட்டமைப்பு வசதிகளை அமைத்தும் இந்த அரசு மீனவருக்காக பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மீன்வளத் துறைக்கு இந்த ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 193 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்

96. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் விடுதிகளில் கூடுதலாக 4,000 மாணவர்கள் தங்கிப்பயில அனுமதி அளித்தும், இவ்விடுதிகளுக்கு வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கியும், கல்வி உதவித் தொகை பெற வருமான உச்சவரம்பை ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தியும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியருக்கு முற்றிலும் இலவசக் கல்வி அளித்தும் அவர்கள் நலனுக்கு இந்த அரசு வழிவகுத்துள்ளது. **தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் 25 மாணவர் இல்லங்களுக்கு ரூபாய் 12.5 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டித்தரப்படும்.** வரும் நிதியாண்டில் 10,000 பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினரைச் சேர்ந்த இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பயிற்சி பெற ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டுக் கழகம் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர் மரபினரைச் சேர்ந்த தொழில் முனைவோர்களுக்கு ரூபாய் 35 கோடி தொழில் கடனாக வழங்கப்படும்.** பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்



நலனுக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 459 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சிறுபான்மையினர் நலன்

97. இந்த அரசு சிறுபான்மையினர் நலனுக்காகத் தனி இயக்குனரகத்தை 2007ஆம் ஆண்டில் அமைத்தது. மேலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு இசுலாமியர்களுக்கு 3.5 விழுக்காடு தனி இட ஒதுக்கீடு இந்த அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மைய அரசின் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ், ஒரு இலட்சத்து 50 ஆயிரம் சிறுபான்மையின மாணவ மாணவியர் ரூபாய் 40 கோடி அளவு உதவித் தொகை பெற்று பள்ளிப் படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயில்கின்றனர். இசுலாமிய மாணவியர், கல்வியைத் தொடர்ந்து பெறும் நோக்கத்துடன் 5 புதிய மாணவியர் விடுதிகள் 2008–2009 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டன. சிறுபான்மையின இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெறும் திறனை அளிக்கும் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. வரும் நிதியாண்டிலும் 8,000 இளைஞர்கள் பயனடையும் வகையில் வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள் நடத்த ரூபாய் 2.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிறுபான்மையினர் சுய தொழில் புரிய தமிழ்நாடு சிறுபான்மையினர் மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன்கள் வழங்கப்படுகிறது. **வரும் நிதியாண்டில் 12,500 சிறுபான்மையினத் தொழில் முனைவோர் பயன்பெறும் வகையில் ரூபாய் 25 கோடி தொழில் கடன் வழங்கப்படும்.**

98. கிறித்தவ மதத்தைச் சார்ந்த ஆதிதிராவிடர்கள் தங்களை பட்டியல் இனத்தவர் வரிசையில் இணைத்து, அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இடஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளைத் தங்களுக்கும் வழங்கிட வேண்டுமென்று நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். அந்தக் கோரிக்கையில் உள்ள நியாயத்தை உணர்ந்து, அதனை நிறைவேற்றிட இந்திய அரசியல் சட்டத்தில் தகுந்த திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

99. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்காக இந்த அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்த நான்கு ஆண்டுகளில் 51 புதிய விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன. 99 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்விடுதிகள் அனைத்திற்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. **வரும் நிதியாண்டில் மேலும் 25 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் ரூபாய் 12.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சேர்ந்த மாணவர்களில் சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, ஆறாம் வகுப்பிலிருந்தும் பதினொன்றாம் வகுப்பி லிருந்தும் தலைசிறந்த பள்ளிகளில் பயில வகை செய்யும் திட்டம் இந்த அரசால் 2008–2009 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்குவதற்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 198 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

100. சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் அருந்ததியரின் வாழ்வில் மறு மலர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன், இந்த அரசு அருந்ததியர்களுக்கு தனி உள் ஒதுக்கீடு அளித்துள்ளதன் பயனாக, அருந்ததிய மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் உயர்கல்வி பயிலவும், அரசு வேலைவாய்ப்பு பெறவும் இயன்றுள்ளது. மனிதக் கழிவை மனிதனே அகற்றும் அவல நிலையை முற்றிலும் ஒழிக்க உறுதி பூண்டு இத்தொழிலில் ஈடுபட்டோருக்கு மாற்றுத் தொழில் புரிய நிதியுதவி மற்றும் பயிற்சி அளித்தும், தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம் அமைத்தும், கழிவு நீர் அடைப்புகளை அகற்ற இயந்திரங்கள் பயன்படுத்தியும் இந்த அரசு அவர்களது வாழ்வில் ஒளியேற்ற முற்பட்டுள்ளது என்பதை இந்த அவையினர் அறிவர்.

101. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவுகளைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் வரும் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 20,000 இளைஞர் பயன்பெறும் வகையில் மைய அரசு சிறப்பு நிதியும், மாநில அரசு சிறப்பு நிதியுமான ரூபாய் 25 கோடி ஒதுக்கீடும் பயன்படுத்தப்படும். **பொறியியல் பட்டப்படிப்பு படிக்கும் 1,200 ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு, தகவல் தொழில்நுட்பத் துறையில் வேலைவாய்ப்பு பெறும் வகையில் கணினி மென்பொருள் மற்றும் ஆங்கிலப் பேச்சுத் திறன் ஆகியவற்றில் பயிற்சி (Finishing School) அளிக்கப்படும்.** மொத்தமாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு ரூபாய் 894 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **ஆதிதிராவிடர் துணைக் கூறு திட்டத்திற்கு 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 567 கோடியாக இருந்த ஒதுக்கீடு, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 3,828 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதையும், இந்த ஒதுக்கீடு மொத்த ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டில் 19 விழுக்காடு ஆகும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

## நெசவாளர் நலன்

102. நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தமிழர் திருநாளாம் பொங்கலையொட்டி ஏழை எளியோருக்கு இலவசமாக வேட்டி மற்றும் சேலை வழங்கும் திட்டத்தை, வரும் நிதி ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்த இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 256 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கைத்தறித்துணிகள் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில், இத்துணிகளுக்கான விற்பனை மானியம் அளிக்கும் திட்டத்திற்கு ரூபாய் 118 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த அரசுதான் கைத்தறி நெசவாளர்களுக்கும், விசைத்தறி நெசவாளர்களுக்கும் இலவச மற்றும் சலுகைக் கட்டண மின்சாரம் வழங்கி வருகிறது. இத்திட்டத்திற்காக ரூபாய் 78 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

103. திருப்பூர் நகரில் உள்ள பின்னலாடைத் தொழில் இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதோடு ஆண்டுதோறும் ரூபாய் 10,000 கோடிக்கும் மேற்பட்ட மதிப்புடைய பொருளை ஏற்றுமதி செய்து, இந்திய நாட்டின் ஏற்றுமதிகளில் ஒரு சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. **இத்தொழிலுக்கு மிகவும் தேவையான சாயத் தொழிற்சாலைகளால் நிறுவப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு, இந்த அரசின் வேண்டுகோளை ஏற்று மைய அரசு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 200 கோடி நிதியுதவியை அறிவித்துள்ளதற்கு நமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இந்த அரசும் ஏற்கெனவே உறுதி அளித்தவாறு, ரூபாய் 120 கோடி தமிழக அரசின் பங்காக நிதியுதவி அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வரவு–செலவுத் திட்டத்தில் இதற்காக ரூபாய் 320 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, சுத்திகரிக்கப்பட்ட உப்புநீரைக் கடலுக்குக் கொண்டு செல்லும் திட்டத்திற்காக பதின்மூன்றாவது நிதிக்குழு அறிவித்துள்ள ரூபாய் 200 கோடி நிதியுதவியைப் பெற்று, அத்திட்டத்தையும் செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

## பனைத் தொழிலாளர் நலன்

104. பனைமரத் தொழிலாளர்களுக்காக நல வாரியம் இந்த அரசால் அமைக்கப்பட்டு, இதுவரை 31,000 தொழிலாளர்கள் இவ்வாரியத்தில் பதிவு செய்துகொண்டு, ரூபாய் 80 இலட்சத்திற்கும் மேற்பட்ட நலத்திட்ட உதவிகளைப் பெற்றுள்ளனர். இவர்களுக்கு இலவசமாகத் தொழிற்கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. **இத்தொழிலாளர்களிடமிருந்து பனை வாரியம் கொள்முதல் செய்யும் பதநீருக்கு தற்போது லிட்டர் ஒன்றுக்கு 7 ரூபாய் என்று அளிக்கப்படும் விலையை, உயர்த்தித் தரவேண்டும் என்ற அவர்களது கோரிக்கையை ஏற்று, இனி பதநீர் லிட்டர் ஒன்றுக்கு 10 ரூபாயாக கொள்முதல்**

**விலை உயர்த்தப்பட்டு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தமிழ்நாடு பனை வாரியம் கொள்முதல் செய்யும் பதநீரைக் குளிர்சாதன வசதிகளைக் கொண்டு பதப்படுத்தவும், தேவையான போக்கு வரத்து வசதிகளைப் பெறவும், கருப்புக்கட்டி, பதநீர் ஆகியவற்றைக் கொள்முதல் செய்யத் தேவைப்படும் நடைமுறை மூலதனத்தை அதிகரிக்கவும் ஏதுவாகத் தமிழக அரசு மானியமாக பனை வாரியத்திற்கு ஒரு கோடி ரூபாய் அளிக்கும்.**

## காதித் தொழிலாளர் நலன்

105. **காதி நூல்நூற்பு மற்றும் நெசவுத் தொழிலில் 24,000 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் நலனுக்காக காதி நூல்நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம் அமைக்கப்படும்.**

## தொழிலாளர் நலன்

106. அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு பல்வேறு நல வாரியங்கள் அமைத்து, இத்தொழிலாளர்களுக்கும் இவர்களின் குடும்பங்களுக்கும் இந்த அரசு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் இந்த நல வாரியங்களில் 25 இலட்சத்து 9 ஆயிரம் பேர் பதிவு செய்துள்ளனர். 8 இலட்சத்து 33 ஆயிரம் பேர் ரூபாய் 208 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் பெற்றுள்ளனர். இந்த நல வாரியங்களுக்குக் கடந்த நான்காண்டுகளில் அரசு ரூபாய் 128 கோடி உதவி அளித்துள்ளது. இந்த வரவு–செலவுத் திட்டத்தில் அதற்காக ரூபாய் 50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மண்பாண்டத் தொழிலாளர் நலன்

107. **மண்பாண்டத் தொழிலாளர்களுக்காக நல வாரியம் அமைத்து இந்த அரசு பல்வேறு நல உதவிகளை அளித்து வருகிறது. இத்தொழிலாளர்களுக்கு உதவும் வகையில் மின்சாரத்தால் இயக்கப்படும் மண்பாண்டம் உருவாக்கும் 500 சக்கரங்கள் (Potter's wheel) இலவசமாக அளிக்கப்படும்.**

## வேலைவாய்ப்பற்றோர் நலன்

108. 2009–2010 நிதியாண்டில் 3 இலட்சத்து 53 ஆயிரம் வேலைவாய்ப்பற்றோருக்கு ரூபாய் 52 கோடி உதவித் தொகையாக அளிக்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அரசு வேலைவாய்ப்பு

109. அரசுத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள், வாரியங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் நிரப்பப்படாமல் இருந்த பணியிடங்களை நிரப்ப இந்த அரசு முனைப்பான முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டு, கடந்த நான்காண்டுகளில் 4,65,748 பேரைக் காலமுறை ஊதியத்தில் பணி நியமனம் செய்து, ஐந்தாண்டுகளாக அரசு வேலைவாய்ப்பு நாடிக் காத்துக் கிடந்த இளைஞர்களின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளது.


## தொழில் பயிற்சிக் கல்வி

110. தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க்கின்ற தொழில் திறனுடைய மாணவர்களை உருவாக்கும் நோக்கத்துடன் 22 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூபாய் 63 கோடி மதிப்பீட்டில் திறன்மிகு மையங்களாக தரமுயர்த்தப்பட்டு வருகின்றன. மேலும் அரசு மற்றும் தனியார் பங்களிப்புத் திட்டத்தின் கீழ் 24 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. **வரும் நிதியாண்டில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் 50,000 இளைஞர்களுக்கும் ஊரக வளர்ச்சித் துறை மூலம் 42,000 இளைஞர்களுக்கும் மகளிருக்கும் பலதொழில்நுட்பக் கல்லூரிகள் மூலம் 35,000 இளைஞர்களுக்கும் ஆகமொத்தம் 1,27,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கப்படும்.**

## காடுகள்

111. நாட்டிலேயே முதல் முறையாக 2007–2008 ஆம் ஆண்டிலிருந்து இந்த அரசு விவசாயிகளின் நிலங்களில் மரங்களை வளர்க்கும் திட்டத்தைச் செயல்படுத்தி

வருகிறது. இத்திட்டம் விவசாயி களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதால் வரும் நிதியாண்டில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 15 கோடியாக உயர்த்தப்படும். ஆற்றுப்படுகைகளில் மண் அரிப்பைத் தடுக்கும் நோக்குடன் தேக்கு மரங்களை வளர்க்கும் திட்டம் வரும் நிதியாண்டிலும் ரூபாய் 10 கோடி ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும். ஆளுநர் உரையில் அறிவித்தவாறே, சுற்றுப்புரச் சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதி உருவாக்கப் பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் இந்நிதிக்கு ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உலகை வெப்பமயமாக்கும் வளிமங்களை (Green house gas emissions) ஈர்த்துக் கொள்ளும் முள் இல்லா மூங்கில் மரங்களை உணவுப்பயிர் பயிரிடப்படாத நிலங்களில் வளர்க்கும் தேசிய மூங்கில் வளர்ப்புத் திட்டம் 2007 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 3,250 ஏக்கர் பரப்பளவில் மூங்கில் தோட்டங்களை அமைக்க விவசாயிகளுக்கு மானியம் மற்றும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வரும் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு இன்னும் அதிகமான பரப்பளவில் விரிவுபடுத்தப் படும். மொத்தமாக வனத்துறைக்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 385 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## தமிழ்ச் சான்றோர் நூல்கள் நாட்டுடைமை

112. தமிழ் மொழிக்கும், தமிழ்ச் சமுதாயத்திற்கும் தமது படைப்பாற்றல் மூலம் மகத்தான தொண்டுகள் செய்துள்ள தமிழ்ச் சான்றோர்களின் கருத்துக்களும், சிந்தனைகளும் இன்றைய தலைமுறைக்கு மட்டுமல்லாமல், எதிர்காலத் தலைமுறை களுக்கும் பயனளித்திடல் வேண்டும் என்னும் விழைவோடு, தமிழ்ச் சான்றோர்தம் நூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டத்தைத் தமிழக அரசு தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறது. இதுவரை மொத்தம் 117 தமிழ்ச் சான்றோர்களின் நூல்களைத் தமிழக அரசு நாட்டுடைமை யாக்கியுள்ளது. அவற்றுள், 110 அறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கியுள்ள பெருமை திராவிட முன்னேற்றக் கழக அரசையே சாரும். 2006இல் இந்த அரசு பொறுப்பேற்றபின் அத்தமிழ்ச் சான்றோர்களுள் தமிழுக்குச் செம்மொழித் தகுதி உண்டென்று முதல் குரல் கொடுத்த செம்மல் பரிதிமாற்கலைஞர், புலவர் குழந்தை, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசு வநாதம், சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப் பிள்ளை முதலான 87 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்களின் மரபுரிமையர்க்கு 5 கோடியே 70 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. **இச்சீரிய தமிழ்த் தொண்டின் தொடர்ச்சியாக, 2010–2011 ஆம் ஆண்டில், பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம், பேராசிரியர் அ.கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் எஸ்.எம்.கமால், ப.இராமசாமி, பேராசிரியர் ர.சீனிவாசன், வ.சு.செங்கல்வராய பிள்ளை, கவிஞர் வெள்ளியங்காட்டான், நெ.து.சுந்தரவடிவேலு, டாக்டர் சி.பாலசுப்பிரமணியன், மயிலை சிவமுத்து, காழி சிவ.கண்ணுசாமி பிள்ளை, கே.பி.நீலமணி, கவிராஜ பண்டிதர் ஜெகவீரபாண்டியன், அ.திருமலைமுத்துசுவாமி, நவ்ராஜ் செல்லையா, திருகூடசுந்தரம், பேராசிரியர் சுந்தர சண்முகனார், தஞ்சை ராமையாதாஸ், கவிஞர் தாராபாரதி, அருதனக்குட்டி அடிகளார், சரோஜா இராமமூர்த்தி, அ.சீனிவாசன் ஆகியோரின் படைப்புகள் என மொத்தம் 22 தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமை**

**யாக்கப்படும்**. இச்சான்றோர்கள் படைத்துள்ள நூல்களின் எண்ணிக்கை, அவை சமுதாயத்தில் ஏற்படுத்தியுள்ள பயன்கள், அவற்றின் சிறப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களுடைய மரபுரிமையர்க்குப் பரிவுத் தொகை நிர்ணயம் செய்து வழங்கப்படும்.

## தமிழ் வளர்ச்சி

113. பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் 1967இல் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்தபின், சென்னை மாநிலத்திற்குத் "தமிழ்நாடு" எனப் பெயர் சூட்டியும், "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" எனும் கொள்கை முழங்கிட 1968இல் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு நடத்தியும்; சென்னைக் கடற்கரை காமராஜர் சாலையில் தமிழ்ச் சான்றோர் பதின்மருக்குத் திருவுருவச் சிலைகளை நாட்டியும்; அரசுப் பேருந்துகளில் அய்யன் திருவள்ளுவர் திருவுருவப் படத்துடன் திருக்குறள் பொறிக்கச் செய்தும்; நாளும் திருக்குறள் ஓதிச் சட்டப்பேரவை நிகழ்ச்சிகளைத் தொடங்கச் செய்தும்; அய்யன் திருவள்ளுவர் பிறந்த ஆண்டு கி.மு. 31 என அறிஞர்கள் வரையறுத்த முடிவின்படி, 1971ஆம் ஆண்டு ஜனவரி முதல் தமிழ்நாடு அரசின் நாட்குறிப்பிலும், 1972ஆம் ஆண்டு ஜனவரி முதல் தமிழ்நாடு அரசிதழிலும் திருவள்ளுவராண்டு எண்ணைக் குறிக்கச் செய்தும்; சென்னை மாநகரில் வள்ளுவர் கோட்டம் அமைத்தது மட்டுமல்லாமல்; குமரி முனையில் உலகம் வியக்குமாறு 133 அடி உயர அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவியும்; ஆண்டுதோறும் பொங்கல் விழாவிற்கு அடுத்த நாளில் திருவள்ளுவர் நாள் கொண்டாடும் வழக்கத்தை மேற்கொண்டும்; தைத் திங்கள் முதல் நாளே, தமிழ்ப் புத்தாண்டின் முதல்நாள் எனச் சட்டமியற்றி நடைமுறைப்படுத்தித் தமிழ்ப் பண்பாட்டுப் பெருமைகளைத் தரணியில் உயர்த்தியும்; பூம்புகாரில் சிலப்பதிகாரக் கலைக்கூடம் வடித்தும்; தமிழ் மன்னர்களுக்கும், புலவர்களுக்கும், சான்றோர்களுக்கும் திருவுருவச் சிலைகள், மணிமண்டபங்கள், நினைவிடங்கள் அமைத்தும்; தமிழ்மொழி வளர்ச்சிக்கெனத் தனி அமைச்சகம் ஏற்படுத்தியும்; பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் முதல் மொழியாக தமிழ் கற்பிக்கப்படுவதுடன், இன்று தமிழகத்தில் உள்ள 53 ஆயிரத்து 548 பள்ளிகளின் வாயிலாகப் பயிலும் 1 கோடியே 49 இலட்சம் மாணவ மாணவியரில் ஏறத்தாழ 75 விழுக்காடு, அதாவது 1 கோடியே 10 இலட்சம் மாணவ மாணவியர் தமிழ்வழிக் கல்வி கற்கும் சூழ்நிலைகளை மேலும் மேம்படுத்திட, பள்ளிகளில் 10ஆம் வகுப்பு வரை தமிழ் மொழி கட்டாயப் பாடம் எனச் சட்டம் வகுத்தும்; தமிழறிஞர்களை ஊக்குவித்திடத் தமிழறிஞர்களின் பெயர்களில் அரசு விருதுகள் வழங்கிச் சிறப்பித்தும்; பரிதிமாற் கலைஞர், தேவநேயப் பாவாணர், திரு.வி.க., மறைமலை அடிகள், புலவர் குழந்தை முதலான 110 தமிழறிஞர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கியும்; 1999இல் உலக இணையத் தமிழ் மாநாடு நடத்தியும்; கணினித் தமிழ் வளர்ச்சிக்கு உலக இணையத் தமிழ் பல்கலைக் கழகம் நிறுவியும்; தமிழ் மொழி வளர்ச்சியில் ஒரு முத்திரைச் சாதனையாகத் தமிழ் செம்மொழி என்பதை மத்திய அரசு ஏற்று அறிவித்திடும் ஆணை பெற்றும்; செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தைச் சென்னையிலேயே அமைக்கின்ற முயற்சி எடுத்து அவ்வாறே செய்தும்; வெளிநாடுகளிலும், இந்திய அளவிலும் புகழ் பதித்துள்ள தமிழ் அறிஞர்களுக்குக் குடியரசுத் தலைவரின் "குறள்பீட விருது", "தொல்காப்பியர் விருது" ஆகியவை வழங்கிட வகை செய்தும்; செம்மொழித் தமிழின் சிறப்பினை நிலைநாட்டிடும் முனைப்போடு, வரும் சூன் திங்களில் கோவை மாநகரில் உலக நாடுகளை வியப்பில் ஆழ்த்தும் நோக்கில், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை எழுச்சியுடன் நடத்திட முனைந்துள்ளதும் இன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு! இவற்றுள் பெரும்பான்மையான சாதனைகளை நிறைவேற்றிய பெருமை தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களையே சாரும். இவை யாவும், காலச்சக்கரத்தினும் வேகமாகச் சுழன்று, கால ஓட்டமே பருவம் தவறினும், தாம் காலத்தில் செய்ய வேண்டிய கடமை தவறலாகாது என்னும் உணர்வுடன், அல்லும் பகலும் ஒன்றெனக் கொண்டு அயராதும், கண் துஞ்சாதும் செயற்படும் வித்தகராம் கலைஞர் ஆட்சிப் பொறுப்பில்

அமர்ந்ததால் தமிழ்நாடு பெற்றபேறு அன்றோ!

அதனாலன்றோ, ஆட்சித் துறைகள் பலவற்றிலும் சாதனை புரிவதில் தமிழக அரசு, இந்தியாவிலேயே முதல் மாநிலமாகவும், சில துறைகளில் பிற மாநிலங்கட்கு எல்லாம் எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாகவும் விளங்குகின்றது என்பதை மைய அரசும், ஊடகங்களும் அவ்வப்போது பாராட்டிக் குறிப்பிடுகின்றன.

'ஒளியொருவற்கு உள்ள வெறுக்கை;' எனவும்

'கடனென்ப நல்லவை எல்லாம்' எனவும்

அய்யன் திருவள்ளுவன் அறிவுறுத்திய உண்மைகளை உள்ளங்கொண்டு செயற்படும் முதல்வர் கலைஞரின் மக்கள் நலன் காத்திடும் சாதனைகளை நாடே வியப்பதைக் கண்டு நான் பேருவகை அடைகிறேன்.

114. தமிழ் மொழியை மைய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக அறிவித்துச் செயற்படுத்தவும், சென்னை உயர்நீதி மன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழையும் வழக்கு நடத்துவதற்குரிய மொழியாக ஏற்கவும், இந்த அரசு தொடர்ந்து குரல் கொடுக்கும். **அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு மாணவர்கள் பொறியியல் பட்டப்படிப்பு பயிலும் வசதி, வரும் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்படும்.**

115. **19:2ஆம் ஆண்டில், மதுரை தல்லாகுளம் பகுதியில் உலகத் தமிழ்ச் சங்கத்திற்கென வழங்கி ஆணையிடப்பட்டு சமநிலைப்படுத்தப்பட்டுள்ள 14.15 ஏக்கர் நிலத்தில், "தொல்காப்பியர் உலகத் தமிழ்ச் சங்கம்" அமைத்து, தமிழகத்தின் கலை, இலக்கியம், பண்பாட்டு உயர் நிலை விளக்கும் காட்சியகம் அமைப்பதெனவும், உலகளாவிய நிலையில் தமிழர்க்கும், தமிழ் ஆய்வுக்கும் துணை செய்திடும் வகையில் அரங்கம் அமைப்பதெனவும், அரங்கத்தில் சங்கப் புலவர்கள் மற்றும் தமிழ்ச் சான்றோர்களின் திருவுருவச் சிலைகளைக் கால வரிசைப்படி உரிய வகையில் வடிவமைப்பதெனவும் அரசு முடிவு செய்துள்ளது.**

## உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு

116. வரும் ஜுன் திங்கள் 23ம் நாள் முதல் 27ம் நாள் வரை கோவையில் உலகத் தமிழ்ச் செம் மொழி மாநாட்டை சிறப்பாகக் கொண்டாடும் வகையில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழறிஞர்கள், சாதனையாளர்கள் மற்றும் பல சான்றோர்களைக் கொண்ட 21 குழுக்களை அமைத்து, தேவையான பணிகளைத் தேர்வுசெய்து திறம்பட செயல்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தகுந்த ஆலோசனைகளை வழங்கி வழிநடத்தி வருகிறார்கள். அவருடைய தலைமையின் கீழ், உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களின் நெஞ்சங்களில் என்றும் நிலைத்திடும் வண்ணம் இந்த மாநாடு சிறப்புற நடைபெற அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இதற்காகப் பல்வேறு அரசுத் துறைகளின் பொறுப்பில், ரூபாய் 300 கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அவை பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

117. நம் தாய்மொழியாம் தமிழ் மொழியைச் செம்மொழி என மத்திய அரசு அறிவித்துப் பெருமைப்படுத்தியதற்குப் பின்னர் நடைபெறும் இந்த முதல் உலகத் தமிழ்ச் செம்மொழி ஆய்வு மாநாட்டில், தமிழ்ச் சான்றோர் அனைவரும் பங்குபெறவும், தமிழின் இலக்கியப் பழம்பெருமைக்கான ஏதுக்கள், நிகழ்காலப் போக்குகள் மற்றும் எதிர்காலத் தேவைகள் குறித்த 56 பொருண்மைகளில் தமது கருத்துகளைக் கட்டுரைகளாகப் பதிவு செய்யவும் முறையான வாய்ப்பு அனைவருக்கும் அளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள இந்த வரலாற்று நிகழ்விற்குத் தமிழ் கூறும் நல்லுலகம் அளித்துள்ள மகத்தான வரவேற்பிற்கு எடுத்துக்காட்டாக, முன் எப்போதும் இருந்திராத வகையில், ஆய்வரங்கில் பங்கேற்க 50 நாடுகளைச் சேர்ந்த 6,086 கட்டுரையாளர்களும் 1,270 ஆர்வலர்களும் பதிவு செய்துகொண்டுள்ளனர். இவற்றில் அறிஞர் குழுக்களால் தேர்ந்தெடுக்கப் படும் கட்டுரைகளை உரியவர்கள் படித்தற்குரிய அரங்கங்கள் பலவும் கோவை கொடிசியா

வளாகத்தில் அமைக்கப்படும். மேலும், இம்மாநாட்டின் ஒரு பகுதியாக தமிழ் இணைய கணினி மாநாடும் நடத்தப்படவுள்ளது.

118. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் முகப் புரையுடன் நடைபெறும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி, கோவை மாநகரில் தற்போது மத்திய சிறைச் சாலை உள்ள 165 ஏக்கர் நிலத்தில் 'செம்மொழித் தமிழ் பூங்கா' என்ற பெயரில் பெரியதொரு தாவரவியல் பூங்கா அமைக்கப்பட உள்ளது. இதன் முதற்கட்டமாக, இந்த இடத்தில் உள்ள 49.4 ஏக்கர் பரப்பில் பணிகள் விரைவில் தொடங்கப்படும். சிறந்த வடிவமைப்பாளர்களின் ஆலோசனைகளைப் பெற்று, அனைத்துத் தாவர வகைகளையும் பொதுமக்கள் ஒருங்கே கண்டு களிக்க வாய்ப்பளிக்கும் வண்ணம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இப்பூங்கா அமைக்கப்படும்.

## சுற்றுலா

119. அதிக பிரபலம் அடையாத சுற்றுலாப் பகுதிகள் மேம்பாடு, சுற்றுச் சூழல் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, ஊரகச் சுற்றுலா, 'விருந்தினர் போற்றுதும் விருந்தினர் போற்றுதும்' திட்டத்தின் கீழ் சுற்றுலாத் தொழில் தொடர்புடைய பணியாளர்களிடையே விருந்தோம்பல் பண்பை வளர்த்தல் ஆகிய பல்வேறு புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

120. கடந்த நான்காண்டுகளில் தமிழகத்தில் உள்ள பல்வேறு சுற்றுலாப் பகுதிகள் ரூபாய் 219 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஏலகிரி, கொல்லிமலை, தரங்கம்பாடி, மாமல்லபுரம், புளியஞ்சோலை, வால்பாறை, ஒகேனக்கல், திருக்குற்றாலம், திருக்கடையூர், பழவேற்காடு, திற்பரப்பு, சுருளி அருவி, கோவைக் குற்றாலம், மதுரை மீனாட்சி அம்மன் கோயில் வளாகம், மெரினா கடற்கரை, செட்டிநாடு, காஞ்சிபுரம், அறுபடை வீடுகள், சோழநாட்டுத் திருப்பதிகள், கொடைக்கானல், உதகமண்டலம், முதுமலை, ஆனைமலை, இராமேசுவரம், திருவண்ணா மலை, தஞ்சை, திருவரங்கம், கும்பகோணம், சப்தவிடங்கத் தலங்கள், திருச்செந்தூர் ஆகிய சுற்றுலாப் மையங்களில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்படும்.**

**121. அதிக பிரபலம் அடையாத சுற்றுலாப் பகுதிகளில், விடுதிகள் மற்றும் சுற்றுலாத் திட்டங்களை நடத்த முற்படும் தொழில் முனைவோருக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் கல்வராயன் மலை, தளி, பரளி, கொடிவேரி, பொள்ளாச்சி, பச்சைமலை, கூத்தனூர், பிச்சாவரம், குரங்கனி, வைகை அணைக்கட்டு, திருவில்லிபுத்தூர், கட்ட பொம்மன் கோட்டை, திருச்செங்கோடு, சிக்கல் ஆகிய இடங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.**

## மணிமண்டபங்கள்

122. நமது நாட்டுச் சுதந்திரப் போராட்ட காலத்தில், நெல்லை மாவட்டம், மணியாச்சி ரயில் நிலையத்தில் ஆங்கிலேய கலெக்டர் ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்று, தன்னையும் மாய்த்துக் கொண்ட வீரத் தியாகி வாஞ்சிநாதன் தியாகத்தைப் போற்றும் வகையில், அவர் பெயரில் மணிமண்டபம் கட்டுவதற்கு 8.8.1957 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, இதுவரை மண்டபப் பணி துவங்காமலே உள்ளது என்ற விவரம் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதைத் தொடர்ந்து, **தியாகி வாஞ்சிநாதன் பிறந்த செங்கோட்டையில் அவருக்கு மணிமண்டபம் கட்ட இந்த அரசு முடிவு செய்துள்ளது.**

123. வெள்ளையர் எதிர்ப்புப் போரில் திண்டுக்கல் பகுதியில் முன்னணியில் நின்று போரிட்டவர் விருப்பாட்சி கோபால் நாயக்கர் ஆவார். அவர் சிவகங்கை இராணி வேலுநாச்சியாருக்கும், பாஞ்சாலங்குறிச்சி ஊமைத்துரைக்கும் படைபலமும், பாதுகாப்பும் கொடுத்து உதவியவர். மைசூர் மன்னர் திப்புசுல்தானோடு தொடர்பு கொண்டு, வெள்ளையர் எதிர்ப்புப் போரில் அவருக்கு உறுதுணையாக இருந்தவர். மருது சகோதரர்கள், கன்னடத் தளபதி தூண்டாஜிவாக், கேரளவர்மா, கோவை

ஹாஜிகான் ஆகியோரை இணைத்து தென்னிந்திய விடுதலைப் போரில், ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போரிட்டவர் கோபால் நாயக்கர். இறுதியில் ஆங்கிலேயர்களால் கோபால் நாயக்கரும், அவரது மகன் முத்துவெள்ளைய நாயக்கரும் தூக்கிலிடப்பட்டனர். **நாட்டு விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்த கோபால் நாயக்கரின் நினைவாக விருப்பாட்சியில் மணிமண்டபம் நிறுவப்படும்.**

124. வெள்ளையரை எதிர்த்த வீரபாண்டிய கட்டபொம்மனின் தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்த ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் இறுதியில் தன்னையே மாய்த்துக் கொண்ட வரலாறு ஒருபுறம் என்றால்; மற்றொருபுறம் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு முன்பே, நெல்லைச் சீமையின் நெல்கட்டும்செவல் மாவீரன் பூலித்தேவன் வெள்ளையரை எதிர்த்துப் போரிட்டார். வெள்ளையருக்கு எதிரான பல போர்களில் பூலித்தேவனுக்கு முதன்மைப் படைத் தலைவராக இருந்தவர், அருந்ததிய சமுதாயத்தைச் சேர்ந்த "ஒண்டிவீரன்" என்பவர் ஆவார். கட்டபொம்மனுக்கும், பூலித் தேவனுக்கும், சுந்தரலிங்கத்துக்கும் நினைவுச் சின்னங்களை எழுப்பியதோடு, அருந்ததியர்க்கு 3 சதவீத உள்ஒதுக்கீடு வழங்கிய இந்த அரசு, **அருந்ததிய சமுதாயத்தினரான சேர்ந்த விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரனுக்கு, அவரது நினைவைப் போற்றும் வகையில் தக்கதோர் நினைவுச் சின்னம் நெல்லைச் சீமையில் எழுப்பும்.**

125. சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசினர் தோட்டத்துக்கு ஓமந்தூரார் அரசினர் தோட்டம் என்று 1998ஆம் ஆண்டு இந்த அரசு பெயரிட்டதை அனைவரும் அறிவர். **இந்த வகையில், 1947 ஆம் ஆண்டிலிருந்து 1949 வரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் நினைவை என்றும் போற்றும் வகையில் அவரது சொந்த ஊரான ஓமந்தூரில் அன்னாருக்கு ஒரு மணிமண்டபத்தையும் இந்த அரசு அமைக்கும்.**

## அரவாணிகள் நலன்

126. சமூகத்தின் விளிம்பில் வாழும் அரவாணிகளுக்கு நலவாரியம் அமைத்து, அவர்களுக்குக் குடும்ப அட்டை, வீட்டுமனைப் பட்டா, குடியிருக்க வீடுகள், வேலைவாய்ப்புப் பயிற்சி மற்றும் தனியாகவோ, சுய உதவிக் குழுக்களாகவோ தொழில் புரிய நிதியுதவி ஆகிய நலத்திட்ட உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இவர்களின் நலனுக்காக மேலும் ஒரு கோடி ரூபாய் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்

127. ஊராட்சிகளில் விளையாட்டு மைதானம் அமைத்து இளைஞர்களுக்கு விளையாட்டுப் பொருட்கள் வழங்கும் திட்டம் ஊரக வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டு இறுதியில் அனைத்து ஊராட்சிகளும் இந்த வசதியைப் பெற்றிருக்கும். மேலும் கடந்த நான்காண்டுகளில் தமிழகத்தின் பல நகரங்களில் விளையாட்டு அரங்கங்களும், நீச்சல் குளங்களும் கட்டப்பட்டுள்ளன. **வரும் நிதியாண்டில் மேலும் இரு நீச்சல் குளங்களும், இரு விளையாட்டு அரங்கங்களும், ஐந்து வட்டத் தலைமையிடங்களில் விளையாட்டு மைதானங்களும் அமைக்கப்படும்.**

## இந்து சமய அறநிலையத் துறை

128. இந்த அரசு பொறுப்பேற்ற பின், 4,020 திருக்கோயில்களுக்கு ரூபாய் 387 கோடி செலவில் திருப்பணிகள் செய்யப்பட்டு, குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன. **வரும் நிதியாண்டில் ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் 1,100 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்படும்.**

## பத்திரிகையாளர் நலன்

129. பத்திரிகையாளர்களுக்கு அளிக்கப்படும் ஓய்வூதியத்தை ரூபாய் 4,000 ஆக உயர்த்தியும், அவர்களின் குடும்ப ஓய்வூதியத்தை ரூபாய் 2,000 ஆக உயர்த்தியும், பத்திரிகையாளர் நல நிதியம் உருவாக்கி ரூபாய்

ஒரு கோடி நிதியளித்தும், 203 பத்திரிகையாளர்களுக்கு சலுகை விலையில் வீட்டுமனைப் பட்டாக்கள் அளித்தும், இந்த அரசு பத்திரிகையாளர் நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்நலத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இந்த அரசு பதவியேற்றது முதல் சென்னை, திருநெல்வேலி, திண்டுக்கல், திருச்சி, சேலம், தஞ்சை, வேலூர் போன்ற நகரங்களில் பத்திரிக்கையாளர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. **இதுபோன்றே, கோயம்புத்தூரிலும் தகுதியுள்ள பத்திரிக்கையாளர்களுக்கு வரும் நிதி ஆண்டில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.**

## வழக்கறிஞர் நலன்

**130. தமிழ்நாடு வழக்கறிஞர்கள் குழுமத்தின் கோரிக்கையை ஏற்று இந்த அமைப்பு நடத்திவரும் வழக்கறிஞர் நல நிதி மூலம் இறந்த வழக்கறிஞர்களின் குடும்பங்களுக்கு உதவித் தொகை வழங்க ஏதுவாக தமிழக அரசு ஒருமுறை மானியமாக ரூபாய் 2 கோடி வழங்கும்.**

## திரைப்படம் மற்றும் சின்னத்திரைத் தொழில்

**131.** திரைப்படத் தொழிலாளர் உள்ளிட்ட திரைப்படத் துறையினரும் சின்னத்திரைத் துறையினரும் அடுக்குமாடி வீடுகள் கட்டிக் குடியிருக்க ஏதுவாக, இந்த அரசு சென்னைக்கு அருகில் **90** ஏக்கர் நிலத்தை அளித்துள்ளது. சின்னத்திரைக் கலைஞர்களுக்கு ரூபாய் ஒரு கோடி முதலீட்டில் நல நிதியமும், திரைப்படத் துறை மற்றும் சின்னத்திரைக் கலைஞர்களுக்காக திரைப்படத் துறையினர் நலவாரியமும் அமைக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற திரைப்படத் தொழிலுக்கு தொடர்ந்து ஊக்கம் அளிக்கும் வகையில் தமிழில் பெயரிடப்படும் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி விலக்கு தொடர்ந்து அளிக்கப்படும்.

**132. தமிழ்த் திரையுலகின் அரும்பெரும் சாதனையாளரும், ஏழிசை மன்னருமான எம்.கே.தியாகராஜ பாகவதர் அவர்களின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுவது என்று அரசு முடிவு செய்துள்ளது.**

## அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர் நலன்

**133.** அரசு அலுவலர்களுக்கு, அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட சலுகைகளை மீண்டும் வழங்கியதோடு மட்டுமல்லாது, மைய அரசின் ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைகளின் அடிப்படையில், திருத்திய ஊதியவீதங்களை இந்த அரசு செயல்படுத்தியுள்ளது. தொகுப்பூதியம் பெற்று வந்த மூன்று இலட்சம் பணியாளர்களுக்கு, கால முறை ஊதியம் வழங்கிப் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளது. பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் வாரிசுகள் 10,413 பேருக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட வழங்கப்படும் கடன்தொகையின் உயரளவு ரூபாய் 6 இலட்சத்திலிருந்து ரூபாய் 15 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. தொகுப்பூதியம் பெற்ற சத்துணவுப் பணியாளர்களுக்குச் சிறப்புக் காலமுறை ஊதியமும், ஓய்வு பெற்ற சத்துணவுப் பணியாளர்களுக்குச் சிறப்பு ஓய்வூதியமும் வழங்கப்பட்டுள்ளது. திருத்திய ஊதியவீதங்களில் குறைபாடுகள் ஏதும் இருப்பின், அவற்றைப் பரிசீலித்து அரசுக்குத் தக்க பரிந்துரை அளிக்க அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் அறிக்கையை இம்மாத இறுதிக்குள் பெற்று, விரைவில் தக்க ஆணைகள் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகத்தில்தான் அரசு அலுவலர்களுக்கு, மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தொடங்கப்பட்டு 12 இலட்சம் பணியாளர்கள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ள நிலையில் இதுவரை 73,648 பணியாளர்கள் ரூபாய் 227 கோடி மதிப்பிலான மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

**134.** ஓய்வூதியருக்குத் திருத்திய ஓய்வூதியங்களை அளித்தும், ஓய்வூதியர் மருத்துவ நல நிதித் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் உதவித் தொகை உயரளவை,

ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தி வழங்கியும், ஓய்வூதியர் மருத்துவ நல நிதியில் ஓய்வூதியரின் கணவர் அல்லது மனைவியும் உதவி பெறத் தகுதியுடையவர் என அறிவித்தும், இத்திட்டத்தை குடும்ப ஓய்வூதியருக்கும் விரிவுபடுத்தியும், ஓய்வூதியர் மருத்துவ நல நிதியில் ஏற்பட்ட பற்றாக்குறையை ஈடுகட்டும் வகையில், ரூபாய் 27 கோடி நிதியுதவியை ஈடாக அளித்தும் ஓய்வூதியர் நலனில் இந்த அரசு தொடர்ந்து அக்கறை காட்டி வருகிறது.

## ஆண்டுத் திட்டம்

135. சமூக நீதி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி (Inclusive Growth) ஆகியவற்றை உறுதி செய்வதைக் குறிக்கோள்களாகக் கொண்டு பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டம், ரூபாய் 85 ஆயிரத்து 344 கோடி மதிப்பீட்டில் 2007–2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2007–2008 ஆம் ஆண்டுத் திட்டம் ரூபாய் 14,000 கோடி ஒதுக்கீட்டிலும், 2008–2009 ஆம் ஆண்டுத் திட்டம் ரூபாய் 16,000 கோடி மதிப்பீட்டிலும், 2009–2010 ஆம் ஆண்டுத் திட்டம் ரூபாய் 17,500 கோடி மதிப்பீட்டிலும் செயல்படுத்தப்பட்டுள்ளன. **ஆண்டுத் திட்ட அளவு மேலும் உயர்த்தப்பட்டு, வரும் 2010–2011 ஆம் ஆண்டுத் திட்டம் ரூபாய் 20,000 கோடி அளவு ஒதுக்கீட்டில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.**

## வரிகள்

136. கடந்த 1.1.2007 முதல் நமது மாநிலத்தில் மதிப்புக் கூட்டு வரி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. விலை உயர்வை கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு, அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு முன்னுரிமை அளித்து, கடந்த நான்கு ஆண்டுகளாக நிதிநிலை அறிக்கைகளில் பல பொருட்களுக்கு வரி விலக்கும், வரிக் குறைப்பும் இந்த அரசு அறிவித்துள்ளது. பல்வேறு கோரிக்கைகளை கருத்திற் கொண்டு, முக்கிய உணவு பொருள்களான பருப்பு மற்றும் பயறு வகைகள், அவற்றின் மாவு வகைகள், சமையல் எண்ணெய்கள், புளி, மிளகாய், மல்லி, மஞ்சள், பெருங்காயம், கடுகு மற்றும் மசாலா பொருள்களுக்கு வரி விலக்கினை அரசு அளித்துள்ளது. வெல்லம் மற்றும் நாட்டு சர்க்கரைக்கு முழு வரிவிலக்கு அளிக்கப் பட்டது. மாவு தயாரிக்கும் சிறு உற்பத்தியாளர் களுக்கு பருப்பு மற்றும் பயறு வகைகள், பட்டாணி மற்றும் பட்டாணிப் பருப்பு வகைகளில் மீதான கொள்முதல் வரி விலக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

137. மேலும்,

(1) வணிகச் சின்னம் இடப்படாத காபி.

(2) வணிகச் சின்னம் இடப்பட்ட மசாலா பவுடர்

(3) பஜ்ஜி மாவு

(4) சத்து மாவு

(5) நெய்


(6) வனஸ்பதி

(7) வணிகச் சின்னம் இடப்படாத பேக்கரி பொருட்கள்

(8) வணிகச் சின்னம் இடப்பட்ட ஊறுகாய்

(9) காய்ந்த திராட்சை (கிஸ்மிஸ்) ஆகிய பொருள்களின் மீதான வரி 12.5 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது:

138. சிறு உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் மாவு அரவை இயந்திரங்கள், வணிகச் சின்னம் இடப்படாத ஸ்டீல் பர்னிச்சர், அனைத்து பிளாஸ்டிக் பொருட்கள் (கதவு, ஜன்னல், சட்டம், புரோபைல்கள், வாகன, தொழில் மற்றும் கழிவு நீக்க உபகரணங்கள் நீங்கலாக), பருத்தி நூலினாலான தரைத் துடைப்பான்கள், ஆணிகள், புஷ்கள், வாஷர்கள், ரிவிட் போன்ற இணைப்பான்கள், 200 ரூபாய்க்கு மேற்பட்ட விற்பனை விலை உள்ள வணிகச் சின்னம் இடப்படாத காலணிகள், மொசைக் சிப்ஸ்கள், கோப்பு அட்டைகள் மற்றும் பிளாஸ்டிக் புகைப்பட



சட்டங்கள் மீதான வரி 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

139. இந்த அரசு பொறுப்பு ஏற்றதிலிருந்து, ஒவ்வொரு ஆண்டும் வணிக மற்றும் தொழிற் பிரதிநிதிகளுடன் நிதிநிலை அறிக்கை தயாரிப்பதற்கு முன்பாக கலந்தாய்வு கூட்டம் நடத்தி வருகிறது. 1.3.2010 அன்று நடைபெற்ற நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கூட்டத்தில் எழுப்பப்பட்ட கோரிக்கைகளை கருத்திற்கொண்டு, பின்வரும் சலுகைகள் நுகர்வோர் பயன்பெறும் வகையில் அறிவிக்கப்படுகின்றன.

- மிளகு, சீரகம் மற்றும் சோம்பு ஆகியவற்றிற்கு முந்தைய நிதிநிலை அறிக்கைகளில் நிபந்தனையுடன் கூடிய வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது அவற்றின் பொடி வகைகளுக்கும் வரி விலக்கு விரிவுபடுத்தப்படும். இது தவிர பொடி வகைகள் தயாரிக்க பயன்படுத்தும் மூலப் பொருள்களின் மீதான கொள்முதல் வரியும் விதிக்கப்படமாட்டாது.

- விவசாய பொருளான சோற்றுக் கற்றாழை மருத்துவ குணம் கொண்டுள்ளதால், தற்பொழுது அவற்றை பயன்படுத்தி இரசம் (ஜூஸ்), அழகு சாதன பொருள்கள், மலமிளக்கி போன்றவை தயாரிக்கப்படுகின்றன. இவற்றைத் தயாரிக்கும் சிறு உற்பத்தியாளர் களை ஊக்குவிக்கும் வகையில், சோற்றுக் கற்றாழையினை பயன்படுத்தி தயாரிக்கப்படும் பொருள்களுக்கு, ஆண்டின் மொத்த விற்பனை தொகை ரூபாய் ஒரு கோடிக்கு குறைவாக உள்ள வணிகர்களுக்கு மட்டும் வரிவிலக்கு அளிக்கப்படும்.

- சர்க்கரை (சீனி)யின் தேவையை கருத்திற் கொண்டு, வெளிச் சந்தையில் சர்க்கரை (சீனி) விலையைக் கட்டுப்படுத்த வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சர்க்கரை (சீனி)க்கு ஒரு ஆண்டு காலத்திற்கு வரிவிலக்கு அளிக்கப்படும்.

- மரபு சாரா எரிசக்தி பயன்படுத்துதலை ஊக்கப்படுத்தும் வகையிலும், சுற்றுச் சூழல் மாசுபடுவதைத் தவிர்க்கும் பொருட்டும், நகராட்சி திடக் கழிவிலிருந்து தயாரிக்கப்படும் எரி பொருள்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும்.

- மக்கும் பொருள்களை பயன்படுத்துதலை ஊக்குவிக்கும் வகையில், பாக்கு மர இலையில் தயாரிக்கப்படும் தட்டு, தொன்னை உள்ளிட்ட கோப்பை ஆகியவைகளுக்கு வரி விலக்கு அளிக்கப்படும்.

- ஏழை மற்றும் குடிசை வாழ் மக்கள் பயன்பெறும் வகையில் சிறு வீடுகள் கட்ட பயன்படுத்தப்படும் பனஞ்

சட்டங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும்.

- மீனவர்கள் பயனுறும் வகையில், ஐஸ் கட்டிகளுக்கு வரிவிலக்கு அளிக்கப் படும்.
- நெசவாளர்கள் பயன்பெறும் வகையில், கைத்தறி துணி பயன்படுத்துவதை மேம்படுத்தும் வகையில், ஜரிகை (பாலியஸ்டர் பிலிம் நூல் மற்றும் ரேடியன்ட் நூல் நீங்கலாக) மீதான கொள்முதல் மற்றும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.
- இது தவிர,

1) வணிகச் சின்னம் இடப்பட்ட காபித்தூள் (உடனடி காபித்தூள் தவிர) (Other than Instant Coffee)

2) பெயிண்ட் பிரஷ்

3) வணிகச் சின்னம் இடப்பட்ட இனிப்பு மற்றும் கார வகைகள்

4) கத்தி, கத்தரிக்கோல், கையில் பயன்படுத்தும் ஊசிகள், கொக்கிகள், பட்டன்கள் போன்ற தையலுக்கான பொருள்கள்

5) வணிகச் சின்னம் இடப்பட்ட உடனடி உணவுப் பொருள்கள் (மாவு, பொடி மற்றும் ஈரமாவு உட்பட) ஆகிய பொருள்கள் மீதான தற்போதுள்ள 12.5 விழுக்காடு வரி, 4 விழுக்காடாகக் குறைக்கப் படும் என்பதனை மகிழ்ச்சியு டன் அறிவிக்கிறேன்.

தற்போது அறிவிக்கப்பட்ட வரிவிலக்கு மற்றும் வரிக் குறைப்பு சலுகைகள் 1.4.2010லிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

140. 2008–2009 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகள் தீர்வு) சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டம் 1.11.2008 முதல் 31.3.2009 வரையில் நடைமுறையில் இருந்தது. வணிகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த சட்டம் 3.8.2009 முதல் 2.11.2009 முடிய நீட்டிக்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் 10,250 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ரூபாய் 85.39 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட இதுபோன்ற திட்டங்களில் வசூல் செய்யப்பட்ட தொகைகளில் இதுதான் அதிகமானது ஆகும். தற்பொழுது இதுபோன்ற மற்றும் ஒரு திட்டத்தை பிந்தைய காலத்திற்கும் நீட்டித்து அறிமுகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை பெறப்பட்டுள்ளது. 1.1.2007 முதல் மதிப்புக் கூட்டு வரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதை கருத்திற் கொண்டும், மேற்கண்ட வணிக மற்றும் தொழிற் கூட்டமைப்புகளின் கோரிக்கைகளை கருத்திற் கொண்டும், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் உள்ள வரிநிலுவைகளை தீர்வு செய்யும் வகையில் ஒரு திட்டம் இந்த கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்படும்.

141. மதிப்புக் கூட்டு வரிவிதிப்பு முறையை மேலும் எளிமைப்படுத்தும் வகையில், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் 2006 மற்றும் அதன் விதிகளில் தேவையான உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இது தொடர்பான விவரங்கள் வணிக வரித் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்படும்.

## ஒட்டுமொத்த நிதிநிலை

142. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010–2011 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தின் நிதிநிலை பற்றிய கணிப்புகளை தற்போது நான் அளிக்கின்றேன். 2010–2011 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் மொத்த வருவாய் வரவுகள் ரூபாய் 63,091.74 கோடி எனவும், ஏற்படக்கூடிய வருவாய்ச் செலவினங்கள் ரூபாய் 66,488.19 கோடி எனவும் மதிப்பிடப்பட்டுள்ளன. இதன் விளைவாக ரூபாய் 3,396.45 கோடி வருவாய்ப் பற்றாக்குறை ஏற்படும். ஆறாவது ஊதியக் குழுவின்




பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியதே இந்த வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டதற்கான முக்கிய காரணமாகும்.

**143.** வரும் நிதியாண்டில், நிகரக் கடன்கள் மற்றும் முன்பணங்கள் உள்ளிட்ட அரசின் மூலதனச் செலவு ரூபாய் 12,825.68 கோடி என கணக்கிடப்பட்டு உள்ளது. நிதிப் பற்றாக்குறை ரூபாய் 16,222.13 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 3.7 சதவீதமாகும். பொதுக் கணக்கின் நிகரத்தோடு எடுத்துக்கொண்டால் ஒட்டுமொத்த பற்றாக்குறை ரூபாய் 8 கோடியாக இருக்கும். செலவினங்களில் சிக்கனத்தைக் கடைபிடித்தும், வரி வசூலை மேம்படுத்தியும் இந்தப் பற்றாக்குறை ஈடுகட்டப்படும்.


**144.** வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை குறித்த மத்திய அரசு நிர்ணயித்த அனைத்து இலக்குகளுக்கு உட்பட்டதாகவே கடந்த நான்காண்டுகளாக மாநில அரசு இப்பற்றாக்குறைகளின் அளவைக் கட்டுக்குள் வைத்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். 2010–2011 ஆம் ஆண்டுக்கான நிதிப் பற்றாக்குறை விகிதம் பதின்மூன்றாவது நிதிக்குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப உள்ளது. வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்பில் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தின் விபரங்கள் அளிக்கப்பட்டு உள்ளது. இதனை வரவு–செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக படிக்கப்பட்டதாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

**145.** இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள் எதுவும் தேர்தல் நன்னடத்தை விதிகள் கடைப்பிடிக்கப்பட்டுவரும் தருமபுரி மாவட்டத்திற்குப் பொருந்தாது.

**146.** தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு, தங்களைப் போன்ற சாதாரண, சாமானிய மக்களுக்காகவே இருக்கின்றது; அந்த மக்களுக்காகவே பணியாற்றுகிறது – தொண்டாற்றுகிறது என்று தமிழக மக்கள் அனைவரும் எண்ணிப் பெருமிதப்படும் அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு; மக்களுக்குக் கடமையாற்றும் பணியையே புனிதப் பணியாகக் கருதி, இடிப்பாரையும், இதயமார வாழ்த்து உரைப்பாரையும் ஒரே நிலையில் வைத்து, அவர்களின் ஆலோசனையைப் பெற்று – நாடும் மக்களும் நற்பயன் பெற நலத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தும் என்று உறுதியளித்து, இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு என்னுடன் ஓய்வின்றி ஒத்துழைத்த நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்களுக்கும், அரசின் நிதித்துறை உள்ளிட்ட அனைத்துத் துறை அதிகாரிகளுக்கும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு 2010–2011ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட அறிக்கையை இப்பேரவை முன் வைக்கின்றேன்.

**வணக்கம்**

**க. அன்பழகன்**
நிதி அமைச்சர்



**ஏழை, எளிய மக்கள் பயனடைந்திட குடிசை வீடுகளை அகற்றி காங்கிரீட் வீடுகளை உருவாக்கிடும் ஒப்பற்ற திட்டம்!**

திருச்சிராப்பள்ளியில் "கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தை" தொடங்கி வைத்து 3.3.2010 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை

இங்கே வாழ்த்துரை வழங்கிய – பாராட்டுரை வழங்கிய நண்பர்களிலே சிலர், குறிப்பாக அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் போன்றவர்கள் – இவ்வளவு பெரிய திட்டத்திற்கு முதற்கட்டமாக இந்தத் தொடக்கத்திலேயே 3 இலட்சம் வீடுகள் 6 ஆண்டு காலத்திலே மொத்தமாக உங்களுடைய இலட்சியத்தையே நிறைவேற்றுகின்ற வகையில் எல்லா வீடுகளும் – குடிசைகளை மாற்றி அமைக்கின்றீர்கள் என்றால், அதற்கு பணம் எங்கே என்ற கேள்விக்குறியை ஜாடைமாடையாக இங்கே தொட்டுக் காட்டினார்கள். நான் அவர்களுக் கெல்லாம் வேடிக்கையாகச் சொல்லவில்லை. வினயமாகவே சொல்கின்றேன் – அதெல்லாம் பணத்திற்கு ஒன்றும் பஞ்சமில்லை. சவுண்டையா – சவுண்டாகத்தான் இருக்கிறது என்று கிராமங்களிலே சொல்வார்களே

அதைப்போல அவர்களுக்கு நான் சொல்கிறேன். சவுண்டையா என்பதைக் குறிப்பிடுகின்ற வகையிலேதான், எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவருடைய பெயரும் அமைந்திருக்கிறது, அதிலிருந்தே நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா – இந்தத் திட்டத்தை நிறைவேற்ற பணத்திற்கு இவர்கள் எங்கும் போகவேண்டியதில்லை; அது "சவுண்டாக" இருக்கிறது என்பதை நான் எத்தனை முறை அழுத்தி அழுத்திச் சொல்லி உங்களுக்கு இதைப் புரிய வைக்க வேண்டியிருக்கிறது என்பதை எண்ணித்தான் கொஞ்சம் வருத்தப்படுகிறேன். இப்போதாவது புரிந்து கொண்டீர்களே, என்பதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**நின்றேன்! வென்றேன்!**

1957ஆம் ஆண்டு நான் திருச்சி மாவட்டத்திலே என்னுடைய அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினேன். இந்த மாவட்டத்திலேதான் என்னுடைய அரசியல் வாழ்க்கை தொடங்கியது. அதுவும் சிறைச்சாலைக்குச் செல்கின்ற வாழ்க்கையாக, தண்டவாளத்தில் தலை வைத்துப்படுக்கின்ற வாழ்க்கையாக இந்த மாவட்டத்திலேதான் என்னுடைய அரசியல் வாழ்க்கை தொடங்கியது. அண்ணா அவர்கள் கைத்தறித் துணிகளையெல்லாம் தமிழகத்தில் நம்முடைய கழகத்தினுடைய முன்னணியினர் வீதிவீதியாக விற்று வரவேண்டும், கைத்தறித் துணிகளுக்கு ஒரு மதிப்பை, ஒரு செல்வாக்கை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் சென்னையிலே, நான் திருச்சியிலே என்று திட்டமிட்டபோது, "இல்லையில்லை, நான் திருச்சிக்குச் செல்கிறேன். திருச்சி – கொஞ்சம் பலவீனமாக இருக்கிறது. எனவே நானே திருச்சிக்குச் செல்கிறேன்" என்று திருச்சிக்கு வந்து கைத்தறி ஆடைகளை அவர்கள் விற்றார்கள்.

ஏன் சொல்கிறேன் என்றால், திருச்சி நகரம் அப்போதெல்லாம் இயக்கத்திற்கு ஒரு வலிவான கோட்டையாக இருந்ததில்லை. அந்த நேரத்திலேதான் என்னை அண்ணா அவர்கள் திருச்சியிலே – இந்த மாவட்டத்திலே சட்டமன்றத் தொகுதிக்கு – குளித்தலையிலே நில் என்று 'நம்நாடு' பத்திரிகையில் என்னுடைய பெயரைக் குறிப்பிட்டு, நான் சென்னைக்குச் சென்றபோது என்னை அழைத்து, "நீ எங்கே நிற்கிறாய் என்பதை நாளை 'நம்நாடு' பத்திரிகையிலே பார்ப்பாய்" என்று சொன்ன போது, நான் அதுவரையில் நாகப்பட்டினத்திலே அல்லது வேறு ஒரு நகரத்திலே நிற்பது என்ற முடிவோடு இருந்த நான், அண்ணா அவர்கள் எந்த ஊரைக் குறிப்பிடுகிறார் என்று பார்க்க, இராயபுரத்திலே இருந்த 'நம்நாடு' அலுவலகத்திற்குச் சென்றபோது, அங்கே எனக்குக் கிடைத்த தகவல் – நான் குளித்தலையில் நிற்கிறேன் என்பதாகும்.

**பணம் – சனம்**

என்ன குளித்தலையா? எனக்கு அங்கே – கிராமங்களிலே அவ்வளவு அனுபவம் கிடையாதே என்று சொன்னேன். அண்ணா அவர்கள், நான் உன் பெயரை வெளியிட்டு விட்டேன். அங்கே நில் என்று சொன்னார்கள். நின்றேன். வென்றேன். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் அண்ணா அவர்களுடைய கட்டளையை ஏற்று, எனக்கு அறிமுகம் அதிகம் இல்லாத ஒரு தொகுதியில், பழக்கம் அதிகம் இல்லாத தொகுதியிலே நின்று வெற்றி பெற்ற இடம் குளித்தலை.

நான் தொகுதிக்காக பல போராட்டங்களை வகுக்கக் கண்ட இடம் குளித்தலையிலே உள்ள பேட்டவாய்த்தலை. குளித்தலையிலே உள்ள நங்கவரம். இந்த இடங்களைத்தான் போர்க்களங்களாக அமைத்துக் கொண்டு நான் அப்பொழுது பொதுவாழ்க்கையில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். திருச்சிக்கு நான் வரும்போதெல்லாம் நம்மை பொதுவாழ்க்கைக்கு அனுப்பிய இடமல்லவா திருச்சி என்ற நன்றியுணர்வோடுதான்

திருச்சியிலே அடியெடுத்து வைப்பது வழக்கம். அதற்கு நீங்களும் என்றைக்கும் மரியாதை காட்டத் தவறியதில்லை. அந்த அன்பை என்னிடத்திலே காட்ட என்றைக்கும் தவறியதில்லை. அதைப்போலத்தான் இன்றைக்கும் இந்த விழாவிலே – இது ஒரு அரசு விழாதானா? ஏழை எளிய மக்களுக்கு குடிசைகளை மாற்றித் தருகின்ற ஒரு விழாதானா? அல்லது ஏற்கெனவே நடைபெற்ற இந்தக் கட்சியினுடைய மாநாடு போன்ற ஒரு மாநாடா? என்ற கேள்விகளை நம்முடைய இதயத்திலே எழுப்புகின்ற அளவிற்கு இன்று மாலையிலே எனக்கும் துணை முதலமைச்சர் தம்பி ஸ்டாலினுக்கும் அளிக்கப்பட்ட வரவேற்பு – இங்கே நீங்கள் குழுமியிருக்கின்ற இந்த பெருந்திரளான கூட்டம் – இவைகளையெல்லாம் பார்க்கும் போது நண்பர்கள் சொன்னதைப் போல பணம் எங்கே என்று கேட்டீர்களே, பணம் தேவையில்லை. இந்த ''ஜனம்'' இருந்தால் போதும். இந்த இயக்கத்தினுடைய கொள்கைகளை – இந்த அரசினுடைய எண்ணங்களை – இந்த அரசினுடைய லட்சியங்களை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கின்றது. அந்த நம்பிக்கையோடுதான் பல திட்டங்களை அறிவித்து அவைகளை நிறைவேற்றி வருகிறோம். அந்தத் திட்டங்களிலே ஒன்றுதான் இந்தத் திட்டம். இதற்கு முன்பு நான் அறிவித்து நிறைவேற்றி வருகின்ற திட்டங்களையெல்லாம் எனக்கு முன்னாலே இங்கு பேசிய அன்புக்குரிய பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், நண்பர்கள் எடுத்துரைத்து பாராட்டியிருக்கின்றார்கள்.

### சேர்ந்து செயல்புரிவோம்

அதிலே சில திருத்தங்களையும் சொல்லியிருக்கின்றார்கள். எதிர்க்கட்சி என்றாலே அரசு சொல்கின்ற ஒரு திட்டத்தை அப்படியே ஒத்துக் கொள்ளக் கூடாது. ஏதாவது ஒரு திருத்தத்தோடு ஒத்துக் கொள்ள வேண்டும். அந்த வகையிலே நம்முடைய சிவபுண்ணியமானாலும், நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பிலே உரையாற்றிய செல்வி. பாலபாரதி ஆனாலும், அவர்களும் இந்த வீடுகளுக்காக ஒதுக்கியிருக்கின்ற அந்த இடம் – அதன் பரப்பளவு இன்னும் கொஞ்சம் அதிகம் இருக்கலாம் என்ற கருத்தை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். ஆதரிக்க வேண்டும், அதே நேரத்திலே எதிர்க்கட்சி என்கின்ற அந்த முத்திரையை மறந்து விடாமல் ஒரு சில கருத்துகளைச் சொல்ல வேண்டும்.

நீங்கள் எத்தனை யோசனை வேண்டுமானாலும் சொல்லுங்கள். வாருங்கள், வந்து எங்களை வாழ்த்துங்கள். சேர்ந்து செயல்புரிவோம். உங்களை அதற்குத்தான் அழைக்கிறோம். அப்படி அழைக்கின்ற நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ஆனாலும், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்ற உறுப்பினர்கள் ஆனாலும், எங்களுக்கும் அவர்களுக்கும் துணை நிற்பவர்களானாலும் அன்றைக்குத் தோழமையாக இருந்தவர்கள் ஆனாலும், இன்றைக்குத் தோழமையாக இருப்பவர்கள் ஆனாலும், யாரானாலும் வந்து அபிப்பிராயங்களைச் சொல்லுங்கள். அதனை இந்த அரசு வரவேற்கத் தயாராக இருக்கிறது. அதுதான் நல்ல பார்லிமெண்ட். பார்லிமெண்டேரியனுடைய ஒழுக்கத்தைப் பற்றி – அழகைப் பற்றி அவர்களுடைய இலக்கணத்தைப் பற்றி சர்.ஏ.டி.பன்னீர் செல்வம் அவர்கள் கையாண்ட ஒரு முறையை டாக்டர். ஏ. ராமசாமி முதலியார் அவர்களுடைய மைந்தர்களிலே ஒருவரான கிருஷ்ணசாமி அவர்கள் ஒரு நூலிலே குறிப்பிட்டிருக்கிறார். 'பார்லிமெண்டேரியன்' என்பது அந்தப் புத்தகத்தினுடைய பெயர். அதிலே குறிப்பிட்டிருக்கிறார். சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் சட்டப்பேரவையிலே அன்றைக்கு வீற்றிருந்தபோது – இந்த சட்டப்பேரவையிலே அல்ல, சுதந்திரத்திற்குப் பிறகு உருவான சட்டப்பேரவை அல்ல. சுதந்திரத்திற்கு முன்பு நீதிக்கட்சிக்

காலத்திலே உருவான அந்த சட்டப்பேரவையில் அமர்ந்திருந்த போது அவர் எப்படி பணியாற்றினார் என்பதைப்பற்றியெல்லாம் அந்த ஆங்கில நூலில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதிலே கேட்கிறார் அந்த நூலாசிரியர் – "நீங்கள் ஆளுங்கட்சியினுடைய எல்லாத் திட்டங்களையும் விமர்சிக்கிறீர்கள், சிலவற்றை எதிர்க்கிறீர்கள், சிலவற்றிற்கு திருத்தம் கொடுக்கிறீர்கள். இது எதிர்க்கட்சியினுடைய இலக்கணமா ?" என்று கேட்கிறார்.

எதிர்க்கட்சி அப்படியெல்லாம் சொன்னால்தான் ஆளுங்கட்சி ஓரளவாவது நாம் எதிர்பார்க்கின்ற, மக்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றுவார்கள். உதாரணமாக – ஆளுங்கட்சியின் சார்பில் ஆதிதிராவிட மக்களுக்கு மாதம் 200 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று ஒரு திட்டத்தை அறிவித்தால், உடனே நாம் எழுந்து 200 ரூபாய் போதாது, 400 ரூபாய் அறிவியுங்கள் என்று சொல்ல வேண்டும். அப்போதுதான் 200 ரூபாய் வேண்டாமென்று சொல்லவில்லை. 200 ரூபாய் போதாது என்று அரசாங்கத்தின் மீது ஒரு குற்றச்சாட்டாக அது பயன்படும் என்று சர். ஏ.டி. பன்னீர்செல்வம், பெரிய பார்லிமெண்டேரியன், அவர் சொன்னாரென்று அந்தப் புத்தகத்திலே ஒரு பகுதியிலே எழுதப்பட்டிருக்கிறது. இதை நான் சொல்வதற்குக் காரணம் – பாலபாரதியானாலும், சிவபுண்ணியம் ஆனாலும், ஜி.கே.மணி ஆனாலும், யாரானாலும், அவர்கள் இன்றைக்கு எதிர் வரிசையிலே இருந்தாலும் தோழமைக் கட்சியிலே இருந்தாலும் இதுபோன்ற கருத்துகளைச் சொல்வது, அதை இந்தஅரசு ஏற்றுக் கொண்டு செயல்பட்டாலும் இலாபம், செயல்படாவிட்டாலும் அந்தக் கருத்தைச் சொன்னார்கள் என்று அந்தக் கட்சிக்கு அது இலாபம். ஒரேயடியாக இந்தத் திட்டமே வேண்டாம் என்று சொன்னால் அது இரண்டு பேருக்கும் இலாபம் இல்லை. இரண்டு பேருக்கும் அது பயன்படாது. சில திட்டங்களைச் சொல்ல வேண்டும். அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் இலவச உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்த போது நான் எதிர்க்கட்சித் தலைவன். அப்போது நான் இந்தத் திட்டத்தை கொண்டு வந்தால் அந்த இயக்கத்திற்கு, அந்த அரசுக்கு பெரிய விளம்பரம் கிடைக்குமே என்று எண்ணி அதை எதிர்க்கவில்லை. நான் என்ன சொன்னேன் என்றால், இந்தத் திட்டத்தில் இன்னின்ன மாறுதல்களைச் செய்யலாம், ஒரேயடியாக அரசாங்கமே சமைத்துப் போடுவதை விட, அதிலே வேலை செய்கின்ற தாய்மார்களுக்குப் பணத்தைக் கொடுத்து அந்த உணவுப் பொருள்களை வாங்கிக் கொண்டு வந்து சமைக்கச் செய்து, அதை குழந்தைகளுக்குப் போடலாம் என்று ஒரு யோசனையைச் சொன்னேன். சொன்னதற்குக் காரணம், எதிர்க்கட்சி வாயை மூடிக் கொண்டிருக்கக் கூடாது. ஆதரிக்கவும் முடியாது, ஆதரிக்காமல் இருக்கவும் கூடாது. இது எதிர்க்கட்சியினுடைய கண்ணியம். ஒரு நல்ல காரியம் நடக்கும்போது – இப்போது மணிக்கோ, அல்லது பாலபாரதிக்கோ, அல்லது சிவபுண்ணியத்திற்கோ சங்கடம் ஏற்படா விட்டாலுங்கூட, மனதார இங்கே சொல்லியிருக்கிறார்கள். வீட்டை இன்னும் கொஞ்சம் அகலப்படுத்தவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். வேறு ஆளுங்கட்சியாக இருந்தால் யார் நீங்கள் சொல்ல ? நான் யார் அதைக் கேட்க என்ற ரீதியிலே உடனடியாக பதில் வராவிட்டாலும் கொஞ்சம் மெல்ல – மெதுவாக பதில் வந்திருக்கும். நடத்தையின் மூலமாக அந்தப் பதில் வந்திருக்கும். நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் சொன்ன யோசனையை இன்னும் தாராளமாக இந்த ஏழை அங்கே வாழ வேண்டும் என்று நீங்கள் காட்டிய அந்த நல்ல எண்ணத்தை நானும் பகிர்ந்து கொள்கிறேன். அதன் வழி

நடப்பதற்கு எந்த வகையிலே முயற்சிக்க முடியும் என்பதை நானும் யோசித்து அதை எந்த வகையிலே பயன்படுத்த வேண்டுமோ, எந்த வகையிலே அறிவிக்க வேண்டுமோ அப்படி அறிவிப்பேன் என்பதை திருத்தம் சொன்ன இந்தத் திட்டத்தை இன்னும் கொஞ்சம் விரிவாக்கலாம் என்று நல்ல எண்ணத்தோடு கருதிய, கூறிய என்னுடைய நண்பர்களுக்கு இதை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

## மாற்றுத் திறனுடையோர்

இதோடு முடிந்து விடுவதில்லை. இங்கே சொன்னார்கள். இவ்வளவு பெரிய திட்டத்தை அறிவித்து விட்டீர்களே, இதற்கு மேல் என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். இதற்கு மேல் என்ன செய்யலாம் என்பதை இரண்டு நாட்களுக்கு முன்பு ''முரசொலி''யிலே எழுதியிருக்கிறேன். ''முரசொலி''யை ஒழுங்காகப்படிப்பவர்களுக்கு, நாள்தோறும் படிப்பவர்களுக்கு அது தெரியுமென்று கருதுகிறேன்.

ஊனமுற்றவர்களுக்காக இன்றைக்கு சில திட்டங்கள் தமிழக அரசின் சார்பாக – மத்திய அரசின் சார்பாக நடத்தப்படுகின்றன. பல நன்மைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் அவைகள் இன்னமும் சரியான முறையில் எப்படி இது உருவானதோ, உருவான அளவில் அது செய்யப்படவில்லை என்பதற்கு சில ஆதாரங்களை நான் முரசொலி பத்திரிகையிலே எழுதியிருந்தேன். அவர்களுக்கு சில கோரிக்கைகள் இருக்கின்றன. ஊனமுற்றோர் – முதலில் தங்களை ஊனமுற்றோர் என்று கருதக்கூடாது, சொல்லக்கூடாது என்று விரும்புகிறார்கள். உண்மை. ஊனமுற்றோர் என்று ஏன் சொல்ல வேண்டும்? ஊனமுற்றவர்களுக்கு ஒரு காலோ, ஒரு கையோ ஊனமாக இருந்தால், அந்தக் காலும் கையும் செய்ய வேண்டிய வேலையை இன்னொரு காலும், கையும் செய்யும். ஆகவே அவர்களின் திறமை சற்று அதிகம் என்று ஒரு அறிவியல் கூற்று இன்றைக்கு இருக்கின்றது. அந்த அறிவியல் கூற்றை மனதிலே கொண்டு அவர்களை நாம் நோக்க வேண்டும். அந்த அடிப்படையிலே தான் அவர்களைப் பற்றி ஐ.நா. சபையில் 2007ஆம் ஆண்டு விவாதித்து ஒரு ஒப்பந்தம் செய்தார்கள். என்ன ஒப்பந்தம் என்றால், ஊனமுற்றவர்கள் என்ற பெயரை மாற்றி, அவர்களுக்கு வேறு ஒரு பெயர் வைக்கலாம் என்று சிந்தித்து அவர்களுக்கு வைக்கப்பட்ட பெயர் தான் தமிழிலே சொல்ல வேண்டுமேயானால் அவர்களுடைய ஒரு கை போய் விட்டால், இன்னொரு கை அதிகத் திறமையோடு செயல்படும் என்பதை மனதிலே வைத்து – ஒரு காலை இழந்து விட்டால் இன்னொரு கால் மிகுந்த வலிமையோடு செயல்படும் என்பதை மனதிலே வைத்து – அவர்களுக்கெல்லாம் ''மாற்றுத் திறனுடையோர்'' (மாற்றுத் திறனாளிகள்) என்ற மரியாதையான பெயரை, இழிவற்ற ஒரு பெயரை வைத்திருக்கிறார்கள். அந்த மாற்றுத் திறனாளிகளின் நன்மைக்காக ஐ.நா. மன்றத்திலே எல்லா நாடுகளும் ஒத்துக் கொண்டு ஒரு ஒப்பந்தமும் செய்யப் பட்டிருக்கிறது. ஒப்பந்தம் செய்யப்பட்டு இத்தனை ஆண்டுகள் ஆகியும் கூட அந்த ஒப்பந்தம் இன்னமும் பல நாடுகளில் நடைமுறைக்கு வரவில்லை. அந்த ஒப்பந்தத்திலே கையெழுத்திட்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ஏழாவது நாடாக இந்தியா அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறது. ஆனால் இந்தியா முழுமையும் உள்ள ஊனமுற்றோருக்கு – அதாவது மாற்றுத் திறனாளிகளுக்கு ஒப்பந்தப்படி வசதி வாய்ப்புகள், அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றனவா என்றால் இல்லை. நான் அதைப் பற்றி இந்த ஆண்டு நம்முடைய நிதி அமைச்சர் அவர்களால் வெளியிடப்படவிருக்கின்ற நிதி நிலை

அறிக்கையில் – மத்திய அரசு அன்றைக்கு செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றி – இந்தியாவிலே இருக்கின்ற ஊனமுற்றோருக்கெல்லாம் நன்மைகளைச் செய்ய வேண்டும், உரிமைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதாக இருக்கிறோம்.

**ஆலமரமாக எண்ணங்கள் வளரவேண்டும்**

இதை நான் சொல்லுகின்ற நேரத்தில் ஏதோ இந்திய அரசை நெருக்கடிக்குத் தள்ளுகிறோம் என்று பொருள் அல்ல. தமிழ்நாடு அரசும் சேர்ந்து தான் இந்திய அரசோடு ஒத்துழைத்து அந்த இயலாதவர்களுக்கு மாற்றுத் திறனுடையோருக்கு வழங்கப்படுகின்ற காரியங்களைச் செய்ய வேண்டும் என்ற முறையில் தான் அதை நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். எனவே இப்போது ஏழையெளியோருக்கு குடிசைகளை மாற்றி வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை விட பெரிய திட்டம், இந்தத் திட்டம். ஏழையெளியவர்கள் நம்மைப் பார்த்துக் கேட்டுப் பெறுகிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்தின் படி வருகிறவர்கள் கேட்க பேச்சில்லாதவர்கள் – நம்மைப் பார்த்து சொல்ல வழியில்லாதவர்கள் – வகையில்லாதவர்கள், இன்னும் சொல்லப் போனால் மன நோயாளிகளும் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன பேசுகிறோம், யாரைப் பார்க்கிறோம் என்று கூடத் தெரியாது. ஆனால் அவர்கள் எல்லாம் மனித ஜென்மங்கள் தான். நம்மைப் போன்ற மனிதர்கள் தான். நம்மைப் போன்ற ஜீவன்கள் தான். அந்த ஜீவன்களை ரட்சிக்க வேண்டிய கடமை – அவர்களைப் பாதுகாக்க வேண்டிய அந்த உணர்வை நாம் பெறவேண்டும். இதற்கு அடுத்து என்ன என்று கேட்பீர்களேயானால், இந்தத் திட்டம் நிறைவேறிக் கொண்டிருக்கும்போதே, அந்தத் திட்டமும் நடைமுறைக்கு வர இந்த அரசு ஆவன செய்யும் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு நம்முடைய அரசு அதிகாரிகள் தந்துள்ள ஒத்துழைப்பையெல்லாம் நான் பாராட்டுகிறேன். அவர்களுக்கு எவ்வளவு ஆர்வமும் அக்கறையும் இருந்தால் இந்த மேடையிலே அவர்களுடைய கற்பனை வளத்தையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரு ஆலமரத்தையே உருவாக்கியிருக்கிறார்கள். அந்த ஆலமரத்தினுடைய அடையாளம் என்ன? அந்தச் சின்னத்தினுடைய கருத்து என்ன? எனக்குத் தெரியும். ஆலமரமாக நம்முடைய எண்ணங்கள் – நம்முடைய செயல்பாடுகள் வளர வேண்டும் என்பது தான். ஆலமரம் ஒரு சிறிய விதையிலிருந்து பெரிய மரமாக வளரக் கூடிய ஆற்றல் பெற்றது. அதாவது சொல்ல வேண்டுமேயானால் –

தெள்ளிய ஆலின் சிறு பழத்தொரு விதை  
தெண்ணீர் கயத்தின் சிறு மீன் சினையின்  
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை  
அணி தேர்ப்புரவி ஆட்பெரும் படையோடு  
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே.

ஆலமரத்தின் விதை தடாகத்திலே நீந்திக் கொண்டிருக்கின்ற மீன் சினையை விட சிறியதாக இருந்தாலும் – அது எதிர் காலத்திலே – பெரும் படையோடு ஒரு மன்னன் தன்னுடைய பரிவாரங்களோடு தங்குவதற்கு நிழல் தருகிறது என்று பொருள் ஆகும். இது மன்னர் காலம் அல்ல. இருந்தாலும் ஆலமரத்தை மேடையிலே நம்முடைய அரசு நண்பர்கள், அதிகாரிகள் நட்டு வைத்திருக்கிறார்கள். இது மன்னருக்கு தங்குவதற்கு நிழலாக இருக்கிறதோ இல்லையோ மக்களுக்கு நிழல் தரும் ஆட்சியாக இந்த ஆட்சி அமைய உங்களுடைய அன்பும் ஆதரவும் நிரந்தரமாகத் தேவை தேவை என்பதை எடுத்துரைத்து உங்களுக்கெல்லாம் என்னுடைய வணக்கங்களையும் வாழ்த்துகளையும் கூறி விடைபெறுகிறேன். ★




# மருத்துவ சேவைகளை நிறைவேற்றுவதில் தமிழகம் இந்தியாவிற்கே முன்னோடி

சென்னையில் **17.2.2010** அன்று
குழந்தைகளுக்கான மரபணு சோதனைக்
கூடத்தைத் திறந்து வைத்து
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஆற்றிய உரை.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

I came to know that Perkin Elmer is a global leader in screening programme and genetic testing. Similarly, Mediscan is a renowned fetal medicine centre and a national leader in screening programe in India. Today both of them are joining together in the name of Perkin Elmer Health Sciences Private Ltd., to implement a nation wide screening programme. I am extremely proud to inaugurate this laboratory. Mediscan has been one of the premiere scan centres in our state for more than 3 decades and concentrating on fetal well being & birth defects.

The institution's focus is on preventive, curative & supportive care of children born with birth defects. It specializes in Fetal medicine and is involved in training doctors in this field – not only from India but also abroad. All this is being done with the aim of giving a normal healthy child to the family. Mediscan provides not only information about the problems in developing babies but also provides solutions by way of treatment or prevention.

தமிழ்நாட்டில் பிறக்கும் குழந்தைகளில் மூன்றிலிருந்து நான்கு விழுக்காடுகள் வரை, குறைபாடுள்ள குழந்தைகளாகப் பிறக்கின்றன. குறைபாடுள்ள குழந்தைகளைக் கருவிலேயே கண்டறியும் போதும் மற்றும் குழந்தைகள் பிறக்கும் போதும் தாய்மார்களும் அவர்களுடைய உறவினர்களும் மிகுந்த மன வேதனைக்கு உள்ளாகின்றனர். முதல் கர்ப்பத்தின் போது குழந்தைக்குப் பிரச்சினை ஏற்பட்ட தாய்மார்கள், மீண்டும் கர்ப்பம் தரித்தால், இதே போன்ற பிரச்சினை மீண்டும் வருமோ என்ற பயத்தில் இருப்பார்கள். கண்ணுக்குத் தெரியும் குறைபாடுகள் தவிர, கண்ணுக்குத் தெரியாத வேறு சில குறைபாடுகளும் இருக்கின்றன. இவை குழந்தையின் உடல் வளர்ச்சி, நரம்பு மண்டல வளர்ச்சியைப் பாதிக்கின்றன.

இதுபோன்ற குறைபாடுள்ள குழந்தைகள் பிறக்க பல காரணங்கள் உள்ளன. மரபணுக்களில் குறைபாடுகள், வைரஸ் கிருமிகளால் ஏற்படும் தொற்று, முதல் மூன்றிலிருந்து நான்கு மாத கர்ப்ப காலங்களில் தாய்மார்கள் உட்கொள்ளும் மருந்துகள், நெருங்கிய உறவினர்களுக்குள் திருமணம் செய்து கொள்வதால் ஏற்படும் குறைபாடுகள், இயற்கையாகவே ஏற்படும் குறைபாடுகள் என்று இப்படிப் பல காரணங்களால் கருவில் வளரும் குழந்தைக்கு ஊனம் ஏற்படுகின்றது.

## மரபியல் நோய் கண்டறிதல் பரிசோதனை

கருவுற்ற தாய்மார்களின் கருவில் வளரும் சிசு ஆரோக்கியமாக உள்ளதா, "Down Syndrome" போன்ற வளர்ச்சியைப் பாதிக்கக்கூடிய பிரச்சனைகள் உள்ளனவா என்பதை அறிய, 11–12 வாரக் கர்ப்ப காலத்தில், தாய்மார்களுக்கு கண்டறிதல் பரிசோதனை செய்யப்படுதல் வேண்டும். குழந்தை பிறந்தவுடன் சில சமயம், நோய் அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரியாது. குழந்தை வளர, வளரத்தான் நோய் வெளிப்பாடு தெரியவரும். இம்மாதிரியான நோய்களை குழந்தை பிறந்த 72 மணி நேரத்திற்குள், சிறு துளி இரத்தத்தைக் குழந்தையின் குதிகாலில் பெற்று பரிசோதனை செய்வதன் மூலம் நோயைக் கண்டறியலாம். நோய் வெளிப்பாடு தெரிவதற்கு முன்னரே, நோயைக் கண்டுபிடிப்பதனால், குழந்தைகளை இறப்பிலிருந்தும், மூளைவளர்ச்சி குன்றுவதிலிருந்தும் காப்பாற்ற முடியும். இதுவே பச்சிளம் குழந்தை மரபியல் நோய் கண்டறிதல் பரிசோதனை ஆகும்.

## ஏழை, எளிய மக்கள் பயன்பெற வேண்டும்

தமிழகத்தைப் பொறுத்த வரை 95சதவீத பிரசவங்கள் மருத்துவமனைகளில் நடக்கின்றன; இருந்தாலும் பிறவிக் குறைபாடு மற்றும் ஹார்மோன் என்சைம் குறைபாடுகள் காரணமாகவும், மற்ற பிற காரணங்களினாலும், தமிழகத்தில் ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் இறப்பு விகிதம் 1,000க்கு 37ஆக (37/1000) இருக்கின்றது. உயிருடன் இருக்கும் குழந்தைகளில் 5,000க்கு 21 குழந்தைகள் மன வளர்ச்சி குன்றியவர்களாக இருக்கின்றனர். இதில் டவுன் சிண்ட்ரோம் (Down Syndrome) காரணமான மனவளர்ச்சிக் குறைவுடன், ஆண்டுக்கு 24,000 குழந்தைகள் பிறக்கிறார்கள். இந்தக் குழந்தைகளை கர்ப்ப காலத்தில் மூன்றாம் மாதத்திலேயே கண்டறிய, பரிசோதனை முறைகள் நம் நாட்டிலும் நடைபெற்று வருகின்றன. ஏழை, எளிய மக்களும் இந்தப் பரிசோதனைகளால் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, தேசிய ஊரக மருத்துவ கழகமானது (National Rural Health Mission) இதற்காக நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

Down Syndrome Society of India, மெடிஸ்கேன் மூலமாக இந்தப் பரிசோதனைகளை ஏழைகளுக்கு அளித்து வருகிறது. தைராய்டு, தாய்ப்பால் ஒவ்வாமை போன்ற பல மெடபாலிக் குறைபாடுகள் உள்ள குழந்தைகளில், 75சதவீத குழந்தைகளிடம், பிறந்த உடன் நோய் அறிகுறி இருப்பதில்லை. இந்த மெடபாலிக் குறைபாடுகள் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் 1,350 குழந்தைகளில் 1 குழந்தைக்குத்தான் இருக்கிறது. ஆனால், இந்தியாவிலோ 540 குழந்தைகளில் 1 குழந்தைக்கு, இந்தப் பிரச்சினையும், இப்பிரச்சினையினால் உடல் ஊனங்களும் ஏற்படுகின்றன. இக்குறை பாடுகள் குழந்தைகள் பிறந்த உடனேயே கண்டுபிடிக்கப்பட்டால், தகுந்த சிகிச்சை மூலம் சரிசெய்யக் கூடியவை. அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் இதற்கான நோய் கண்டறிதல் பரிசோதனை கட்டாயமாக்கப் பட்டுள்ளது. இந்த நாடுகளில், இந்தப் பரிசோதனைகளை அரசு மருத்துவமனைகள், தாமாகவோ அல்லது தனியார் மருத்துவ மனைகள் மற்றும் பரிசோதனைக் கூடங்கள் ஆகியவற்றுடன் இணைந்தோ, செய்து வருகிறார்கள். இதன் மூலம் அந்த நாடுகளில் பிறக்கும் குழந்தைகள் அனைவருக்கும் இந்த பரிசோதனை செய்யப்படுகிறது.

தமிழகத்தில் பிறந்த குழந்தைகளுக்கு நோய் ''கண்டறிதல்'' பரிசோதனைகள் செய்ய, அரசு–தனியார் நிறுவனங்கள் ஒரு கூட்டு முயற்சியாக, சென்னை எழும்பூர் மருத்துவமனையில் மெடிஸ்கேன் நிறுவனத்தினால், 2007ஆம் ஆண்டில் 900 குழந்தைகளுக்கு ஒரு முன்னோட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2008ஆம் ஆண்டு இந்திய அரசின் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் (அதாவது ICMR) நாடு தழுவிய ஒரு முன்னோட்ட சோதனைத் திட்டத்தை அமல்படுத்தியுள்ளது. இதில் சுமார் ஒரு இலட்சம் குழந்தைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். இந்தப் பரிசோதனைகள் சென்னை, மும்பை, கொல்கத்தா, டில்லி மற்றும் ஹைதராபாத் நகரங்களில் செயலாக்கப்பட்டு வருகிறது. சென்னையில் **ICMR** சார்பாக செயல்படும் நிறுவனம் மெடிஸ்கேன் ஆகும். இந்த மையத்தின் இலக்கு 20,000 பச்சிளங் குழந்தைகளைப் பரிசோதனை செய்வதாகும்.

தற்பொழுது இத்திட்டத்தில் சுமார் 14 ஆயிரம் குழந்தைகளுக்கு சென்னையில் உள்ள மையத்தின் மூலம் கண்டறிதல் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இவர்களில் சுமார் 50 குழந்தைகளில் நோய் வெளிப்பாடு தெரியும் முன்னரே நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

There is a tremendous need to have a state of the art Genetic diagnostic laboratory in Tamil Nadu. There is no doubt that this partnership of Mediscan with Perkin Elmer would be a great boon to expecting mothers, babies & families in Tamil Nadu.

டாக்டர். சுரேஷ் இங்கு குறிப்பிட்டதைப்போல, இந்த கண்டறிதல் பரிசோதனையானது தமிழக அரசின் வருமுன் காப்போம் திட்டத்தினைப் போன்றதே ஆகும். எதிர்கால சந்ததியினரின் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு கர்ப்பகால மருத்துவக் கண்காணிப்பிற்கான தமிழக அரசின் "வருமுன் காப்போம்" திட்டம், 1999ல் தொடங்கப்பெற்று மீண்டும் 2006 முதல் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் பரவும் நோய்கள், பரவா நோய்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கான ஸ்கேன் பரிசோதனை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு சுமார் 8 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, 10,000 மக்கள் பயன் பெறுமாறு திட்டமிடப்பட்டுள்ளது.

**வருமுன் காப்போம் திட்டம்**

அரசு மருத்துவமனைக்கு வரும் தாய்மார்கள் அனைவருக்கும், ஐந்தாவது மாதத்தில் ஸ்கேன் செய்து, குழந்தையின் வளர்ச்சியும் குறைபாடுகளும் கண்டறியப்படுகிறது. இவ்வாறு குறைபாடுகளை கண்டறிவதில் ஏதேனும் சந்தேகங்கள் ஏற்பட்டால் மெடிஸ்கேன் சென்டருக்கு அனுப்பப்பட்டு ஐயங்கள் தீர்க்கப்படுகிறது.

2006ஆம் ஆண்டு முதல் தலைவர் கலைஞர் ஆட்சியில் 13,649 வருமுன் காப்போம் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு உள்ளது. இம்முகாம்கள் மூலம் 1 கோடியே 32 இலட்சத்து 43 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளனர். இந்த முகாம்களில் 4,11,778 நபர்களுக்கு உயர் இரத்த அழுத்த நோயும், 54,454 நபர்களுக்கு இருதயம் தொடர்பான நோயும், 1,41,347 நபர்களுக்கு கண்புரை நோயும், 4,40,737 நபர்களுக்கு சர்க்கரை நோயும் இருப்பது கண்டறியப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு உள்ளது. 3,674 நபர்களுக்கு எச்.ஐ.வி. எய்ட்ஸ் இருப்பது கண்டறியப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

வருமுன் காப்போம் திட்டம் செயல்படுத்திட 2006-07ஆம் ஆண்டில், ரூபாய் 11.14 கோடி நிதியும், 2007-08ஆம் ஆண்டில், ரூபாய் 7.17 கோடி நிதியும், 2008-09ஆம் ஆண்டில், ரூபாய் 6.79 கோடி செலவு செய்யப்பட்டு உள்ளது. 2009-10ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 6.78 கோடி நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் மருத்துவத் துறைக்கு பல்வேறு சலுகைகளையும், முன்னுரிமைகளையும் அளித்து வருகிறது. மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 2006 – 2007 ஆம் ஆண்டில் ரூபாய் 1,612.17 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. தற்போது, 2009 – 2010 ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 3,391.23 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது. மக்கள் நல் வாழ்வுத்துறைக்கு நிதி ஒதுக்கீடு 2006-2007ஆம் ஆண்டைவிட இரண்டு மடங்காகத் தற்போது அதிகரித்துள்ளது. இது மக்களின் நல்வாழ்விற்கு தலைவர் கலைஞரின் அரசு கொடுக்கும் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

To conclude, Tamil Nadu is the fore runner in the medical facilities all over India.

Tamil Nadu now becoming a model state, which have paved way in medical services to other states after the implementation of "Kalaigner Kappeettu Thittam" (கலைஞர் காப்பீட்டு திட்டம்).

I think this programme will also get a similar name and will add value to the medical facilities available in Tamil Nadu further.

I once again Thank Dr. Suresh for having given this opportunity. ★

# மக்களுக்கு சேவை செய்தால் எதிர்காலத்தில் நாம் நினைக்கப்படுவோம்!


– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்

**வி**ழுப்புரத்தில் காலை முதல் இது வரையில் நடைபெற்றுக் கொண்டிருப்பது மாநாடா ? புராணீகர்கள் பாஷையிலே சொல்ல வேண்டுமேயானால் மாமாங்கத் திருவிழாவா ? என்று ஐயுறுகின்ற வகையில் நான் வியந்து போயிருக்கின்றேன். எத்தனையோ முறை நான் விழுப்புரத்திற்கு அழைக்கப்பட்டு மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், விழாக்கள் இவற்றில் எல்லாம் கலந்து கொண்டு மகிழ்ச்சியோடு திரும்பியிருக்கின்றேன்.




ஆனால், இன்றைக்கு விழுப்புரம் 'விழா'ப்புரமாகவே காலையிலிருந்து காட்சி தருகின்ற நிலையை நான் காணுகின்றேன்.

வீதியெங்கும் மலர்த் தோரணங்கள், தோரணங்களுக்கிடையே தொகை, தொகையாகத் தமிழ்ப் பெருங்குடி மக்கள், கண்களிலே ஒளி, அந்த ஒளி ஊட்டுகின்ற வெளிச்சம், அந்த வெளிச்சத்திலே நான் காணுகின்ற எதிர்காலம் – இவை அனைத்தும் காலை முதல் நடைபெறுகின்ற இந்த விழாவில் என்னை கட்டிப் போட்டு உங்களிடையே தொடர்ந்து சில நாட்கள்



இங்கேயே இருக்கலாமா? என்று எண்ணுகின்ற அளவிற்கு ஒரு மயக்க நிலையை எனக்கு ஏற்படுத்தி இருக்கின்றது. ஏனென்றால் பல நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து விழாக்கோலம் காணுவதிலே வல்லவரான தம்பி பொன்முடி இன்றைக்கும் சில பல நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து விழாக்கோலம் உருவாக்கியிருக்கின்றார்.

விழா, என்பதை நீங்கள் பொருள் கொண்டு பார்த்தால், 'விழா' என்பது உற்சவம் என்ற பொருளையும் தரும். விழா என்பது, 'விழாது' என்ற பொருளையும் தரும். அதனால்தான் சொன்னேன், ''இது விழுப்புரமா? அல்லது விழாப்புரமா?'' என்று. என்றைக்கும் விழாத புரமாக நம்முடைய தம்பிமார்கள் இங்கே இயக்கத்தை – இந்த இயக்கத்தின் சார்பில் நடைபெறுகின்ற அரசினை கட்டிக் காத்து வருகின்றீர்கள் என்பதை என்னால் உணர முடிகின்றது.

தம்பி துரைமுருகன் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல், இது அரசு விழா அல்ல – ஆனால் அரசு விழாதான். அரசாங்கம் நடத்துகின்ற விழா என்றால், அமைச்சர்கள், அதிகாரிகள், சட்டமன்ற – நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவர்களோடு இந்தக் கூட்டம் நிரம்பி வழிகின்ற பந்தல் நிறைவடையும். இது மக்கள் நடத்துகின்ற விழாவாக இன்றைக்கு மாறி காட்சி தருகிறது. இந்த வட்டாரத்தில் இருக்கின்ற மக்களை – தங்களுக்கு வந்துற்ற ஒரு நன்மையைக் கொண்டாடுகின்ற விழா, இந்த விழா. விழுப்புரத்திலே நீண்ட காலக் கோரிக்கையாக – அரசு மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை – இந்த இரண்டும் கேட்டுக் கிடைத்து அவற்றுக்கான புதிய கட்டடங்கள் கட்டி, திறப்பு விழா, அடிக்கல் நாட்டு விழா என்றெல்லாம் நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சிகளை மக்களே ஏற்பாடு செய்து, இதைக் காணவாராய் என்று என்னை அழைத்திருக்கிறீர்கள் என்றுதான் இதற்குப் பொருள்.

அரசு விழா – மக்கள் நிரம்பி வழிகின்ற அரசு விழா. இந்த விழாவில் தம்பி பொன்முடி எடுத்துக் காட்டியதைப் போல் பல குறைகள், கோரிக்கைகள் – இவைகளெல்லாம் ஏற்கெனவே சொல்லப்பட்டு – அவைகளெல்லாம் நிறைவேறியுள்ள நிலைமையையும் காணுகிறீர்கள். வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுத்தான் – மருத்துவமனை, கல்லூரி இவைகளெல்லாம் விழுப்புரத்திலே இன்றைக்கு எழுகின்ற நிலையை நாம் காணுகின்றோம்.

இது சிலபேருக்குப் பிடிக்காது. இதை இந்த அரசு நடத்துவது அவர்களுக்கு அருவறுப்பைத் தந்த காரணத்தால், அவர்களும் ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதால் – இவர்கள் இப்படியே மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டே போவார்களே யானால், அடுத்து நாம் என்ன செய்வது? மக்களை எப்படிச் சந்திப்பது? கையை விரித்துக் கொண்டு செல்வதா? அல்லது கை பிசைந்து செல்வதா? என்று புரியாதவர்கள் ஏதாவது சில காரணங்களைக் காட்டி – ஆர்ப்பாட்டம், போராட்டம் என்றெல்லாம் – மலை உச்சியிலேயிருந்து ஆணையிட்டு, இங்கே இருக்கின்ற மக்களைத் தூண்டிவிட்டு – போராட்டத்தையும், ஆர்ப்பாட்டத்தையும் முடித்துக் கொண்டு, போய் வருகிறேன் என்று மீண்டும் குளிர் காற்று வாங்குவதற்காக மலை களுக்குச் செல்லுகின்ற ஒரு மகாத்மியமும் இன்றைக்கு நாட்டிலே இருப்பதை நீங்கள் காணுகின்றீர்கள்.

இந்தக் கல்லூரிக்குக்கூட – இந்த விழாவிற்குக்கூட ஒரு மறியல், ஒரு ஆர்ப்பாட்டம் நடைபெற்றதை தம்பி பொன்முடி இங்கே சொன்னார். சுருக்கமாகத்தான் சொன்னார். ஏதோ இங்கிருந்த மருத்துவ மனையை மருத்துவக் கல்லூரி வருவதற்காக வேறு இடத்திற்கு மாற்றி விட்டார்கள் . அதை எதிர்த்து ஒரு போராட்டம். அதற்கு தமிழ்நாட்டிலே உள்ள அத்தனை பேரும்– விழுப்புரத்திலே மருத்துவமனையை மருத்துவக் கல்லூரிக்கு இடையிலே மாற்றிவிட்ட காரணத்தால், ''தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற மக்கள் இங்கே வந்து

குழுமி, என்னுடைய தலைமையிலே, அல்லது நான் யாரை உத்தரவிட்டு அனுப்புகிறேனோ, அவருடைய தலைமையில் போராட்டம்'' என்று அறிவித்தார்கள்.




நான் கூட பொன்முடியிடத்திலே கேட்டேன், என்ன காரணம், ஏன் போராட்டம், என்று. அவர் அதை விளக்கிச் சொன்னார். அவரைக் கேட்டதைப் போலவே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தம்பி பன்னீர்செல்வத்திடமும் விளக்கம் கேட்டேன். அவரும் சொன்னார் – மருத்துவக் கல்லூரி இருக்கின்ற இடத்தில், மருத்துவமனையும் இருக்க வேண்டும். அதை வேறு இடத்திலே வைக்கக் கூடாது. ஆகவே இது தேவையற்ற போராட்டம் – என்று சொன்னார். நான் வியப்புற்றேன். எங்குமில்லாத அளவிற்கு இங்கு மாத்திரம் ஏன் மருத்துவக் கல்லூரி இருக்கிற இடத்திலே மருத்துவமனை இருக்கக் கூடாது என்று கருதுகின்றார்கள் என்று எண்ணினேன். வழக்கமாக, நாட்டில் மருத்துவக் கல்லூரியும், அந்தக் கல்லூரிக்கு தொடர்புடைய மருத்துவமனையும் பக்கத்து பக்கத்திலேயிருந்தால்தான் கல்லூரியிலே பயிற்சி பெறுகின்ற மாணவர்கள் – திடீரென்று ஒரு உடல் சோதனையை ஒரு மனிதனுக்குச் செய்யவேண்டியிருந்தால் – அந்த மனிதனுடைய உடலை ஆய்ந்து பார்க்க, மருத்துவமனை பக்கத்திலேயிருந்தால்தான் மருத்துவக் கல்விக்கு பயிற்சிபெறுவதற்கு அது வசதியாக இருக்கும். இது எப்படி என்றால், இரண்டும் ஒன்றாக இருப்பது – தாய்க்குப் பக்கத்திலே பிள்ளை இருப்பதைப் போல. நம்முடைய பொன்முடி குடும்பத்தார் அல்லவா? அதனால் தாயும் பிள்ளையும் ஒன்றாக இருக்கட்டும் என்று இரண்டையும் ஒன்றாக வைத்தார். தாய் – பிள்ளை பாசத்தை அறியாதவர்கள், இது இங்கு இருக்கக் கூடாது – அங்கேதான் இருக்க வேண்டும் என்று போராடினார்கள். என்ன பண்ணுவது? தமிழ்நாட்டினுடைய தலைவிதி – எதற்கெல்லாம் போராட்டம்? எதற்கெல்லாம் கிளர்ச்சி? போராட்டத்துக்கும் கிளர்ச்சிக்கும் ஒரே நோக்கம் – தி.மு.கழக அரசுக்கு எதிராக கத்தி தீட்டுவது. தி.மு.கழக ஆட்சிக்கு எதிராக குரல் எழுப்புவது. இதைத் தவிர அவர்களுக்கு வேறு எந்த நோக்கமும் கிடையாது. அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத்தான் போராடுகிறார்கள்.

திடீரென்று எவ்வளவு பிரச்சினை. கும்பகோணத்தில், ஒரு குளத்தில் நீர் வற்றிவிட்டால் ஒரு போராட்டம். காட்பாடியிலே ஒரு குளத்திலே நீர் வற்றிவிட்டால் ஒரு களம் அமைப்பார்கள். இப்படி களம் அமைக்கட்டும், போராடட்டும். மக்கள் நல்வாழ்வுக்காக நாங்களும் கூட அவைகளில் கலந்துகொள்ளத் தயாராகயிருக்கின்றோம். ஆனால் அப்படியல்ல, வேண்டுமென்றே ஒரு பொதுவான காரியத்திற்கு, ஒரு பொதுவான விழாவிற்கு, ஒரு பொதுவான பிரச்சினைக்கு – வாருங்கள், ஒன்றாக உட்கார்ந்து பேசலாம், பிறகு போராடலாமென்றால், அதற்கு – வர முடியாது, எங்களால் இயலாது என்று தெரிவிப்பவர்களை நாம் என்ன செய்வது?

## தொழிற்பேட்டை

தம்பி ஸ்டாலின் அவர்கள் அண்மையிலே திருச்சியிலே நடைபெற்ற – குடிசைகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றுகிற ஒரு திட்டம்; முதல்கட்டமாக ஓராண்டு காலத்தில் 3 லட்சம் குடிசைகளை காங்கிரீட் வீடுகளாக உடனடியாக மாற்றத் தொடங்கி, அதை ஓராண்டுக் காலத்திலே நிறைவேற்றி – மாற்றுவது என்ற திட்டம்; அதற்கு தமிழக அரசு ஒதுக்கியிருக்கின்ற பணம் 1,800 கோடி ரூபாய்.

இதை திருச்சியிலே எல்லாக் கட்சிகளையும் அழைத்து அவர்களை யெல்லாம் விழாப் பேருரையாற்றச் சொல்லி, அந்தத் தொடக்க விழாவிலேயே நீங்களும் கலந்துகொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவருக்கு நம்முடைய ஸ்டாலின் அழைப்பு விடுத்தார். அதற்கு தந்த பதில் என்ன தெரியுமா? “எங்களுக்கு வேறு வேலை இருக்கிறது, ஆகவே கலந்து கொள்ள முடியாது'' என்பதாகும். பொதுவாக ஒரு தலைவருக்கு அழைப்பு அனுப்பினால், அவருக்கு உள்ளபடியே வேறு வேலை இருந்தாலும் கூட, கொடைக்கானலோ, அல்லது குற்றாலமோ செல்ல வேண்டிய வேலை இருந்தாலும்கூட அவருக்கு அடுத்து இருக்கின்ற தலைவரை அனுப்பி வைப்பார்கள்.

அவருக்கும் வேலை இருந்தாலும், அதற்கு அடுத்து இருக்கின்ற கட்சியின் செயலாளரை அனுப்பி வைப்பார்கள். எங்களுடைய வழக்கம் அப்படித்தான். என்னால் முடியாவிட்டால், ஸ்டாலின்; ஸ்டாலின் இயலாவிட்டால் துரைமுருகன்; துரைமுருகன் முடியாவிட்டால் பொன்முடி, என்று கட்சியின் சார்பாக அந்த அழைப்பை கௌரவப்படுத்த, அரசை கௌரவப்படுத்த என்பது ஒருபுறம் இருந்தாலும்கூட, நோக்கத்தை, நமக்கு இருக்கின்ற ஆர்வத்தை வெளிப்படுத்த, ஏழைகளுக்கு – இருக்கின்ற குடிசை வீடுகளை மாற்றி, கல்வீடுகள் – கான்கிரீட் வீடுகள் கட்டித் தருகின்ற திட்டம் நல்ல திட்டம்தானே, அதை எப்படி நிறைவேற்றலாம் என்பதைப்பற்றி தாமும் பங்கேற்று, அதற்கு யோசனைகளைச் சொல்லுகின்ற வாய்ப்பு அவருக்கு இல்லாவிட்டாலும்கூட, அவருடைய கட்சியின் சார்பாக, இன்னாரை அனுப்பி வைக்கிறேன் என்று சொல்லுவதுதான் ஜனநாயகம்.

ஜனநாயகத்தை உணர்ந்தவர்கள் இதற்கு இசைந்திடுவார்கள். ஆனால் எதிர்க் கட்சியிலிருந்து தம்பி ஸ்டாலினுக்கு கிடைத்த பதில், “எங்களால் வர இயலாது'' என்பதாகும். இப்படிப்பட்ட எதிர்க்கட்சியை வைத்துக் கொண்டு நாங்கள், தமிழ்நாட்டிலே ஜனநாயகத்தை வளர்ப்போம் என்று கூறிக் கொண்டிருக்கிறோம். இது தமிழ்நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும். ஆகவே என்ன நல்ல காரியம் செய்தாலும் – ஒன்றாகச் செய்வோம், வாருங்கள் என்று அழைக்கிற நேரத்திலே அதை மறுதலித்துவிட்டு மறுபடியும் புகார் செய்வதிலே எந்தப் பயனும் இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு ஆட்சி என்றால் பல்வேறு கோரிக்கைகள் வரும். இவ்வளவுக்குப் பிறகும்கூட சிவராஜ், எம்.எல்.ஏ., அவர்கள் ஒரு கோரிக்கையை இந்த விழாவிலே வைத்தார். “எல்லாம் சரி, நீங்கள் வரலாற்றுப் புகழ்மிக்க சட்டமன்ற வளாகத்தை கட்டிக்கொண்டிருக் கின்றீர்கள். அதற்கு ஓமந்தூரார் பெயரும் வைத்திருக்கின்றீர்கள்'' என்று சொல்லி நினைவூட்டினார். எனக்கு உள்ளபடியே மகிழ்ச்சி. ஏனென்றால் நான் நினைவூட்டிய பிறகு அவருக்கும் நினைவு வந்ததே என்பதற்காக அல்ல, அவருடைய கட்சியிலே உள்ள, நம்முடைய தோழமைக் கட்சிகளிலேயுள்ள பல பெரியவர்களுக்குக் கூட, நான் “ஓமந்தூரார் வளாகம்'' என்று பெயர் வைத்ததற்குப் பிறகுதான் ஓமந்தூராரைத் தெரியும். உங்களிலேகூட பல பேருக்கு ஓமந்தூராரைத் தெரிய நியாயமில்லை.

ஒரு சாதாரண விவசாயியைப் போன்ற தோற்றம். எளிய உடை, ஏழைகளின் பால் அன்பு, பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் – இவர்களுக்காகக் கொடுக்கின்ற குரல் – இதுதான் ஓமந்தூரார். அதனால்தான் ஓமந்தூரார் முதலமைச்சராக இருந்தபோது தந்தை பெரியார் அவர்கள், அவரைப் பாராட்டினார். சமூக நீதிக்காக குரல் கொடுத்தவர்களிலே ஒருவர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார். அப்போது அவருக்கு எதிரிகளால் இடப்பட்ட பெயர், “தாடி வைக்காத ராமசாமி'' என்பதாகும். அந்த அளவிற்கு பெரியாருடைய கொள்கைகளை அமல் படுத்தியவர், செயல்படுத்தியவர் ஓமந்தூரார். அதைப் பலர் மறந்துவிட்டாலும், பல அரசுகள் உருண்டுவிட்டாலும் கூட, நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு,




சட்டப்பேரவைக்கு புதிய வளாகத்தை கட்டுகிற நேரத்தில் , அந்த வளாகத்திற்கு “ஓமந்தூரார் வளாகம்'' என்று பெயர் வைத்திருக்கிறேன் என்றால், அந்த நிலையைத்தான் நம்முடைய சிவராஜ் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டி, “அந்த ஓமந்தூர் கிராமம் இங்கே பக்கத்திலேதான் இருக்கிறது. அந்த கிராமத்திலே அவருடைய பெயரால் மணிமண்டபம் ஒன்றை கட்ட வேண்டும்'' என்று சொன்னார். நான் சொன்ன பிறகாவது, நாங்கள் ஓமந்தூரார் வளாகத்தை உருவாக்கிய பிறகாவது, சொந்த ஊரிலே ஒரு மண்டபம் கட்ட வேண்டும் என்ற எண்ணம் அருமை நண்பர் சிவராஜ் போன்றவர்களுக்கு எழுந்ததற்காக நான் மகிழ்ச்சி அடைகின்றேன். நான் அதை இல்லை என்று சொல்லவில்லை.

பல கோரிக்கைகள் இங்கே வைக்கப்பட்டது. தம்பி பொன்முடியே இரண்டு கோரிக்கைகள் வைத்திருக்கிறார். ஒரு கோரிக்கை – விழுப்புரம் மாவட்டத்திலே சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க வேண்டும் என்பதாகும். நிறைவேறும் என்ற நம்பிக்கையை அவருக்குத் தெரிவிக்கின்றேன்.

இன்னொரு கோரிக்கை – திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட முதுநிலை விரிவாக்க மையத்தினை விழுப்புரத்திலே தொடங்க வேண்டும் – என்று ஒரு கோரிக்கை. அது பல்கலைக்கழக ஆளுகைக்கு உட்பட்ட முதுநிலை விரிவாக்க மையம் என்பதால், அது பொன்முடியினுடைய துணையோடு தான் அமைய வேண்டும், அவருடைய ஆலோசனைகளைக் கேட்டுத்தான் நாட்டப்படவேண்டும். எனவே அதுவும் நிறைவேற வாய்ப்பு உண்டு என்பதை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஓமந்தூரார் மணிமண்டபம்**

அதைப்போலவே நண்பர் சிவராஜ் அவர்கள் குறிப்பிட்ட ஓமந்தூரார் மணிமண்டபம் – ஓமந்தூரார் பெயரால் அவருடைய சொந்த ஊரில் அமைவதற்கு என்னால் இயன்ற எல்லா ஆக்கப் பணிகளையும் ஆற்ற நான் தயாராக

இருக்கிறேன். அதற்குரிய இடம் – அதாவது நிலம், அதை உருவாக்குவதற்குத் தேவையான பொருள் – இவற்றையெல்லாம் திரட்டித் தருகின்ற பொறுப்பை சிவராஜ், எம்.எல்.ஏ., அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் ஓமந்தூரார் பெயரால் கட்டப்படுகின்ற அந்தக் கட்டடத்தில், ''நன்கொடை உதவி, சிவராஜ், எம்.எல்.ஏ.'' என்று போட்டால், அது நான் அங்கே கட்டுகின்ற அந்தக் கட்டடத்தால் கிடைக்கின்ற பெருமையைவிட, அதிக பெருமையை நண்பர் சிவராஜ் அவர்களுக்கு உருவாக்கும். ஏதோ எனக்கு வந்த பொறுப்பை தட்டிக் கழித்து அவருடைய தலையிலே சுமத்துவதாக அவர் கருதிக்கொள்ளக் கூடாது. இந்தப் பிரச்சினையிலே, இந்தப் பெருமையிலே – ஓமந்தூராருக்கு நாம் நடத்துகின்ற, நல்ல நாணயமான ஒரு மனிதருக்கு நாம் காட்டுகின்ற அந்த நன்றியிலே எனக்கும் பங்கு இருக்க வேண்டும், நம்முடைய சிவராஜ் அவர்களுக்கும் பங்கு இருக்க வேண்டும். அந்த கிராமத்து மக்கள் மகிழ வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லு கின்றேன். உடனடியாக அதற்கான நிலம் பெறப்பட்டு, நாளும் குறிக்கப்பட்டு – அடுத்து நான் விழுப்புரத்திற்கு வருகின்ற நேரத்திலே, அந்த ஊருக்குச் சென்று அந்த மாளிகைக்கான அடிக்கல் நாட்டு விழாவினை நடத்தி வைத்து மகிழ்வேன் என்று சொல்ல விரும்புகின்றேன்.

இவைகளெல்லாம் ஒரு அரசு செய்ய வேண்டிய கடமை. நான் காலையிலே ஒரு நிகழ்ச்சியிலே குறிப்பிட்டதைப்போல், மறைந்தவர்களுக்கு நாம் அவர்களுடைய நினைவாக செய்கின்ற காரியங்கள்தான், இருப்பவர்களை வாழ வைக்கின்ற காரியங்கள். இருப்பவர்களுக்கு பெருமை சேர்க்க வேண்டுமேயானால், நாம் மறைந்தவர்களுக்குப் பெருமை சேர்க்க வேண்டும். மறைந்தவர்களை மறந்துவிட்டால், மறைந்தவர்களை நாம் நினைக்காமல் இருந்துவிட்டால் எதிர்காலம் நம் மீது வைக்கின்ற நம்பிக்கை பட்டுப் போய்விடும், அற்றுப்போய்விடும். மறைந்தவர்களை நாம் இன்றைக்கு நினைவு கூர்வதால்தான் – சரி, நாம் உழைத்தால், தொண்டு புரிந்தால், பணியாற்றினால், மக்களுக்காக சேவை செய்தால் எதிர்காலத்திலே நம்மை நினைப்பதற்கு சில பேர் வருவார்கள் என்று அந்த நம்பிக்கையோடு பணியாற்ற வேண்டும். அப்படி பணியாற்றிய பெரியவர்களில் ஒருவர்தான் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார். அவரைத்தான் இன்றைக்குப் பெருமைப் படுத்தியிருக்கின்றோம். அவருக்குத்தான் நினைவுச் சின்னம் இங்கே அமைக்க வேண்டும், அவருடைய கிராமத்திலே அமைக்க வேண்டும் என்று இன்றைக்கு நாம் திட்டமிட்டிருக்கின்றோம். அது நிறைவேறும் என்று நான் சொல்ல விரும்புகின்றேன்.

காலையிலிருந்து விழுப்புரத்தில் நடைபெற்ற எல்லா நிகழ்ச்சிகளையும் தொகுத்துப் பார்த்தால், இது வெறும் அரசு நிகழ்ச்சி மாத்திரமல்ல, இருக்கின்ற அரசுக்கு – அரசு செய்திருக்கின்ற காரியங்களுக்கு நீங்கள் நற்சான்று வழங்குகின்ற விழா, இந்த விழா என்றுதான் நான் எடுத்துக்கொள்கின்றேன். நீங்கள் மாலை அணிவித்து மகிழ்ச்சி தெரிவிக்கின்ற விழா, இந்த விழா என்று நான் கருதுகிறேன். நீங்கள் பாராட்டுப் பத்திரம் வாசிக்கின்ற விழாதான் இந்த விழா என்று கருதுகின்றேன். உங்களுடைய பாராட்டும், நீங்கள் தருகின்ற ஊக்கமும் ஆக்கமும் என்றென்றும் எங்களை மேலும் மேலும் உங்களுக்காக பணியாற்ற, தொண்டாற்ற, சேவைபுரிய, ஊக்கப்படுத்தும் என்ற நம்பிக்கையோடு இந்த விழாவிலே கலந்துகொண்டு, உங்கள் திருமுகங்களை எல்லாம் பார்க்கின்ற அந்த அருமையான வாய்ப்பு அளித்தமைக்காக – வாய்ப்பளித்த உடன்பிறப்புக்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

---

விழுப்புரத்தில் 7.3.2010 அன்று
மருத்துவக் கல்லூரியைத் திறந்து வைத்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை .

# தமிழகத்தில் மின் பற்றாக்குறையை முற்றிலும் நீக்கிட மின் திட்டங்களை விரைவாக நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவு

தமிழகத்தில் மின் விநியோகத்தைத் தற்பொழுது உள்ள நிலையில் சீராகப் பராமரித்திட வேண்டும் என்பதற்காகவும், இந்த ஆண்டில் மின் பற்றாக்குறையைச் சமாளித்திடவும் மே மாதம் 2010 வரை பற்றாக்குறை ஏற்படுமென மதிப்பிடப்பட்டுள்ள சுமார் 2,000 மெகாவாட் மின்சாரத்தைப் பெற்று சீரான முறையில் விநியோகம் செய்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இனிவரும் காலங்களில் மின் பற்றாக்குறையை முற்றிலும் தவிர்ப்பதற்காக, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் புதிய மின்திட்டங்களில், 2,475 கோடி ரூபாய்ச் செலவில் 600 மெகாவாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் நிலையம் அலகு I – 2011 மே மாதம் முதல் இயக்கத்திற்குக் கொண்டு வரப்படும் என்றும்;

2,175 கோடி ரூபாய்ச் செலவில் 600 மெகாவாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் நிலையம் அலகு II – 2011 நவம்பர் முதல் இயக்கத்திற்குக் கொண்டு வரப்படும் என்றும்;

3,100 கோடி ரூபாய்ச் செலவில் 600 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் நிலையத்தின் மூன்றாவது கட்டம் 2011 ஜூலை முதல் இயக்கத்திற்குக் கொண்டு வரப்படும் என்றும்;

1,125 கோடியே 63 இலட்ச ரூபாய்ச் செலவில் தமிழ்நாட்டில் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் மேற்கொள்ளப்படும் 183 மெகாவாட் இணை மின் உற்பத்தி 2011 ஜூலை முதல் இயக்கத்திற்குக் கொண்டு வரப்படும் என்றும்;

வல்லூரில் அமைக்கப்பட்டுவரும் தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் என்.டி.பி.சி கூட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொன்றும் 500 மெகாவாட் வீதம் மின்உற்பத்தி செய்யும் மூன்று அலகுகளில், அலகு I – 2011 அக்டோபரிலும், அலகு II – 2011 டிசம்பரிலும், அலகு III – 2012 நவம்பரிலும் இயக்கத்திற்கு வரும் என்றும்;

தூத்துக்குடியில் அமைக்கப்பட்டுவரும் என்.எல்.சி. மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் கூட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொன்றும் 500 மெகாவாட் வீதம் மின்உற்பத்தி செய்யும் இரண்டு அலகுகளில், அலகு I – 2012 மார்ச் மாதத்திலும், அலகு II – 2012 ஆகஸ்டு மாதத்திலும் இயக்கத்திற்கு வரும் என்றும்;

உடன்குடியில் அமைக்கப்பட்டுவரும் பி.எச்.இ.எல். மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் கூட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொன்றும் 800 மெகாவாட் வீதம் மின்உற்பத்தி செய்யும் இரண்டு அலகுகளில், அலகு I – 2013 மார்ச் மாதத்திலும், அலகு II – 2013 செப்டம்பரிலும் இயக்கத்திற்கு வரும் என்றும்;

மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம் புனல் மின் திட்டங்கள் மூலம் 93 மெகாவாட் மின் உற்பத்திக்கான திட்டங்களை 2010 ஜூன் முதல் 2011 ஆகஸ்டுக்குள் இயக்கி வைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அதிகாரிகள் ஆய்வின் போது தெரிவித்தனர்.

அப்பொழுது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் மின் பற்றாக்குறையை முற்றிலும் நீக்குவதற்காகத் திட்டமிடப்பட்டு புதிதாக அமைக்கப்பட்டுவரும் இந்த மின்திட்டங்கள் அனைத்தையும் உரிய காலத்தில் நிறைவேற்றி முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் அனைத்தையும் விரைந்து மேற்கொள்ளுமாறும்; இதில் எவ்விதத்திலும் சுணக்கம் ஏற்படக்கூடாது என்பதையும் அதிகாரிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மிகுந்த கண்டிப்புடன் அறிவுறுத்தினார்.

இவற்றைத் தவிர மத்திய அரசின் மின் நிலையங்களின் மூலமாக கூடங்குளம், கல்பாக்கம், நெய்வேலி, சிம்மாதிரி ஆகிய மின் நிலையங்களிலிருந்து தமிழ்நாட்டின் பங்காக 2010 ஜூன் முதல் 2011 மே மாதத்திற்குள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் 1,607 மெகாவாட் மின் சாரத்தை உரியகாலத்தில் பெறுவதற்கு ஆவன செய்யுமாறும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா.வீராசாமி, தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித் துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன்,இ.ஆ.ப., மின்வாரியத்தின் தலைவர் திரு. சி.பி.சிங், இ.ஆ.ப., எரிசக்தித் துறைச் செயலாளர் (பொறுப்பு) திரு. பி.டபிள்யூ.சி. டேவிதார், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

❖ ❖ ❖

தாய்கோ வங்கி
TAICO BANK

# தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி லிட்.

தாளமுத்து நடராசன் மாளிகை, நெ.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.
தொலைபேசி எண் : 044–28411643 / 28547952 தொலை நகல் : 044 –28416456
மின்னஞ்சல் : taico@dataone.in taico@vsnl.net இணையதளம் : www.taicobank.com

தாய்கோ வங்கி – 46 ஆண்டுகளாக மக்கள் சேவையில்

சேமிப்பு திட்டங்களுக்கு இதர வணிக வங்கிகளை விட அதிக வட்டி வழங்குகிறது

- சேமிப்பு / நடப்பு கணக்கு
- வைப்புகளுக்கு காப்பீடு வசதி
- குறுகிய கால வைப்பு
- பாதுகாப்பு பெட்டக வசதி
- கணக்கு தொடர் வைப்பு
- ரொக்கச் சான்றிதழ்
- நீண்ட கால வைப்பு

மூத்த குடிமக்களுக்கு மேலும் 1%அதிக வட்டி

## தாய்கோ வங்கியின் கடன் திட்டங்கள்

### தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு

- காசுக்கடன்
- காலக்கடன்
- சரக்கீட்டுக்கடன்
- வங்கி உத்திரவாதம்
- நலிந்தோர்க்கு டாப்செட்கோ மற்றும் டாம்கோ மூலம் கடன்

### பண்ணை சாராக் கடன் திட்டங்கள்

- சிறுபோக்குவரத்து வாகனங்கள் வாங்க கடன்
- வீடு அடமானக்கடன்
- சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர்க்கு
- அதிக பற்றுக்கடன்
- காலக்கடன் மற்றும் நடைமுறை மூலதனக்கடன்
- நகைக்கடன்
- வீடுகட்டக் கடன்
- தேசிய சேமிப்பு பத்திரங்கள் / கிசான் விகாஸ் பத்திரங்கள் மீது கடன்

விரைவில் அறிமுகப்படுத்தவுள்ள புதிய கடன் திட்டங்கள் :
எஸ்.எம்.இ. ஸ்மார்ட் (SME Smart Scheme) மற்றும் எஸ்.எம்.இ.ஸ்மார்ட் பிளஸ் திட்டம்(SME Smart Plus Scheme) மூலமாக குறு மற்றும் குடிசைத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கும் கடன் வசதிகள்

புதியதாக திறக்கப்பட உள்ள கிளைகள் :
விழுப்புரம், இராமநாதபுரம், பெரம்பலூர், நாகப்பட்டினம், ஒட்டன்சத்திரம் மற்றும் தூத்துக்குடி

நிறைவான பாதுகாப்பும், உத்திரவாதமும் பெற **தாய்கோ வங்கியில்** முதலீடு செய்வீர் !

வெளியீட்டு ஆணை எண். 1445/வரைகலை/விளம்பரம்/2009

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/0
&WPP No:TN/PMG(CCR)518 / 09-11

